3:4/93

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## நடவடிக்கைகள் வெளியீடு

தொகுதி - ௨௫

எண் - ௨

புதன்கிழமை

ஏப்ரல் - ௨௨

வருடம் - ௯௨

V211,31 N92
N92.25.2
163100

## உள்ளடக்கம்.

22—4—1992 பக்கங்கள்


1. கவன ஈர்ப்பு—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து. .. 387—393

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மின்சாரம் தடைபடுவது குறித்து. .. 393—396

2. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொது நிறுவனங்கள் குழு .. 396

(ஆ) மனுக்கள் குழு .. .. .. 397

3. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்) —

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. .. 397

4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983-84 மற்றும் 1984-85—அளித்தல். .. 398—400

5. மானியக் கோரிக்கைகள், 1992-93 விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி). ..

(அ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்—தொடர்ச்சி. .. 401—409, 417—418

(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு—தொடர்ச்சி. .. 409—415, 418—419

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் .. 401—415, 417.

(இ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். .. 419—527

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் .. 419, 420, 421, 427, 501—522

V211,31'N92
N92.25


பக்கங்கள்

திரு. போளூர் வரதன் .. 421—431, 452—453

*டாக்டர் பெ. வீரபாண்டியன் .. .. 432—435

திரு. செ. கு. தமிழரசன .. .. 435—448, 449, 450, 454, 523

திரு. வீ. சுப்பிரமணியன் .. .. 456—458

*திரு. கே. கந்தசாமி .. .. 458—462

திரு. இராம இராமநாதன் .. .. 462—467

திரு. வே. பெரியசாமி .. .. 467—472

*திரு. ச. புரட்சிமணி .. .. 472—473

*திரு. என். ஆர். ராஜேந்திரன் .. .. 473—477

திரு. தா. செழியன் .. .. 478—482

திரு. வே. தம்புசாமி .. .. 482—486

திரு. ஏ. தா. பொன்னுவேலு .. .. 486—491

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. .. 491—501

6. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

பொது விநியோகத்தில் வழங்கப்படும் குறைந்த விலை அரிசியை அனைவரும் பெறலாமென்று ஆணை பிறப்பிக்கப்படுவது குறித்தும் குறைந்த விலை அமலாகும் தேதி குறித்தும். .. 454—455

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 527—528

இணைப்பு .. .. .. 529—567


163180

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 10, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு 2023

1992, ஏப்ரல் 22, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்".

பிறந்த உயிர்கள் அனைத்தும், பிறப்பின் காரணமாக எவ்வித வேறுபாடுகளுக்கும் உரியன அல்ல. அவ்வாறு இருக்க, செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் எனப் பிரித்தல் சிறப்பு அல்ல.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

### 1. கவன ஈர்ப்பு.

(அ) வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1992 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது.

### அறிக்கை.

வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் 464 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலைப் பெற 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பகுதியாக பதனிடப்பட்ட தோலாகவோ அல்லது முழுவதும் பதனிடப்பட்ட தோலாகவோ உற்பத்தி செய்கின்றன. இத் தொழிற்சாலைகளில் தோல் ஊரவைக்கும் பகுதி, சுண்ணாம்பு இடுதல் பகுதி, சுண்ணாம்பு எடுத்தல் பகுதி, பதனிடும் பகுதி மற்றும் சாயம் ஏற்றும் பகுதிகளிலிருந்து செயல்முறைக் கழிவுநீர் வெளியேற்றப் படுகின்றது.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் செயல்முறைக் கழிவானது உயிர் இரசாயன உயிரகத் தேவை. இரசாயன உயிரகத் தேவை நீரில் கரையாத திடப் பொருள், நீரில் கலந்த நிலையில் உள்ள திடப் பொருள், க்ளோரைடு மற்றும் சல்டைடு மற்றும் குரோமியம் போன்ற உப்புகள் அதிக அளவில் உள்ளதால் அவ்வ மாசு படுத்தும் தன்மையைக் கொண்டதாகும். இக்கழிவு நீர் சுத்திகரிப்பு ஏதும் செய்யப்படாமல் வெளியேற்றப்பட்டால் அவை நிலம் மற்றும் நிலத்தடி நீரின் தன்மையினைப் பாதிக்கும்.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஆம்பூர், ராணிப்பேட்டை, வாலாஜா, வாணியம்பாடி, பேரணாம்பேட், மேல் விஷாரம், மேல் புதுப்பேட்டை போன்ற பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. சுமார் 47 பெரிய மற்றும் நடுத்தர தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சொந்தமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்து இயக்கி வருகின்றன. மற்ற தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் சிறு தொழிற்சாலைகளே. மேலும் இவ்வகை தொழிற்சாலைகளுக்கு டண வசதி மற்றும் இட வசதியின்மையால் இவைகள் சொந்தமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இயலாத நிலையில் உள்ளன.



தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நடத்துபவர்களை ஒன்று திரட்டி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் உருவாகியுள்ளது. அருகருகில் இயங்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் செயல்முறைக் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்ய பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 199 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு கீழ்க்கண்ட இடங்களில் அமையவிருக்கின்றன :—

| வ. எண். | பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவிருக்கும் இடம். | தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ராணிப்பேட்டை - சிட்கோ தொழிற்பேட்டை. | 77 | 275 |
| 2. | மேல் புதுப்பேட்டை .. | 19 | 57 |
| 3. | செட்டித்தாங்கல் .. .. | 9 | 27 |
| 4. | மேல் விஷாரம் .. .. | 25 | 75 |
| 5. | பெருமாள்பேட்டை .. | 50 | 450 |
| 6. | புதூர் .. .. .. | 15 | 40 |
| 7. | வளத்தூர் .. .. .. | 4 | 14 |
| | மொத்தம் .. | 199 | 938 |

இதனைத்தவிர வேறு 9 இடங்களில் 322 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஒன்று சேர்ந்து தமிழ்நாடு தோல் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன்

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் கீழ் வருமாறு :—

| வ. எண். | பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவிருக்கும் இடம். | தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | வாணியம்பாடி .. .. | 99 | 370 |
| 2. | தூத்திப்பேட்டை .. | 8 | 30.5 |
| 3. | எம்.சி. ரோடு (மேற்கு) .. | 3 | 16 |
| 4. | சோலூர் .. .. .. | 3 | 6.75 |
| 5. | மிட்டாளம் .. .. | 8 | 25 |
| 6. | ஆம்பூர் .. .. .. | 44 | 297 |
| 7. | மாளிகை தோப்பு .. .. | 13 | 12 |
| 8. | பேர்ணாம்பேட் .. .. | 74 | 231 |
| 9. | ராணிப்பேட்டை .. .. | 70 | 300 |
| | மொத்தம் .. | 322 | 1,288.25 |

இதனைத் தவிர பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டத்தில் சேர்க்கப்பட முடியாத சுமார் 60 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தனியாக அமைந்துள்ளன. அவற்றில் சுமார் 16 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை சொந்தமாக அமைத்துள்ளன. மூன்று தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பகுதியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்துள்ளது. மேலும் மூன்று தோல் பதனிடும் தொழிற்சாலையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ராணிப்பேட்டை மற்றும் ஆம்பூரில் உள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வாணியம்பாடியிலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்டு சோதனை முறையில் இயக்கப்பட்டு வருகின்றது.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் அமையவிருக்கும் அனைத்து பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டு இயக்கப்படும் பொழுது, தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படக் கூடிய நீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்த இயலும்.





**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 464 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைந்து இருக்கின்றன. இன்று வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்திலே 200 அடி ஆழத்திற்கு நிலத்தடி நீரை கழிவுநீர் மாசு படுத்திக் கொண்டிருக்கிறது. இதனால் குடிக்கக்கூட எதிர்காலத்திலே எங்களுக்கு தண்ணீர் கிடைக்குமா என்கிற ஒரு பேரச்சம் இன்று மக்கள் மத்தியிலே ஏற்பட்டு இருக்கிறது. இதிலே 464 தொழிற்சாலைகளிலே, அவர்கள் சொந்த செலவிலே '' எப்ளுயன்ட் பிளான்ட்டை '' அமைக்கவில்லை என்று சொன்னாலும் கூட, பெரிய மற்றும் நடுத்தர தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மட்டுமே சொந்தமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திருக்கிறார்கள். மற்ற தொழிற்சாலைகள் இன்னும் அவர்களுடைய பங்கையும் கொடுக்காமல், அரசு கொடுக்கின்ற மானியத்தையும் பயன்படுத்தாமல் இன்னும் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. ஆம்பூரிலும், இராணிப்பேட்டையிலும் இன்று பொதுப்படையான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க இருப்பதாக அரசு அறிவித்திருந்தும், இன்றும் அந்த வேலைகள் மிக மெத்தனமாக நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, மக்கள் மிகவும் பீதியுடன் இருக்கிறார்கள். ஆய்வுகள் செய்கின்றபோது, 200 அடி ஆழத்திற்கு நிலத்தடி நீர் கெட்டுவிட்டு இருக்கிறது, மாசுபட்டு இருக்கிறது என்று கூறுகிற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துத்தரவும், அதேபோல் தோல் தொழிற்சாலைகளினுடைய உரிமையாளர்களிடமிருந்து பணத்தில் பாதி பெற்று, மானியத்தையும் உடனே தந்து, உடனடியாக '' எட்ளுயன்ட் பிளான்ட் '' வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலும் இயங்கும் என்ற ஒரு நிலைமையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக 7 இடங்களிலும், தமிழ்நாடு தோல் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக 9 இடங்களிலும் இந்த பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல சில இடங்களிலே, தோல் தொழிற்சாலைகளினுடைய முதலாளிகள் ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தால், கால தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. சில இடங்களிலே இடத்தை நாம் ஆர்ஜிதம் செய்வதிலே

காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இவைகளை எல்லாம் விரைவுபடுத்த வேண்டும் என்று சொல்லி, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. நடவடிக்கை வேகமாக எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ 50 சதவீதம் அவர்களுக்கு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அதிலே 25 சதவீதம் மாநில அரசும், 25 சதவீதம் மத்திய அரசும் கொடுக்கிறது, மீதம் இருக்கிற 50 சதவீதத்திலே, அவர்கள் 10 சதவீதத்தைத் தான் செலுத்தவேண்டும். 40 சதவீதத்தை அவர்கள், கடனாக வங்கிகளிலே பெறுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கமே செய்து தருகிறது. எனவே, விரைவாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளிலே நம்முடைய மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஏற்கன்வே அடிக்கல் நாட்டி, பல ஆண்டுக்காலம் ஆகியும், இன்னும் இந்தத் திட்டங்கள் முடிவு பெறாமல் இருக்கின்றன. ஆகவே, அன்னியச் செலாவணியை கோடிக்கணக்கில் ஈட்டித் தருகிறபோது இந்த முதலாளிகள், இன்று தாராள மனம்படைத்து பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை அனுகியாவது, தோல் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு 6 மாத காலத்தில் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு உடனடியாக ஏற்பாடு செய்து, எங்களுக்குத் தண்ணீர் நிச்சயமாக குடிப்பதற்காகவாவது கிடைக்க வழிவகை செய்து தரப்படும் என்ற நிலையை ஏற்படுத்தி, அந்த 'எப்ளுயன்ட் பிளான்டை' மாவட்டம் முழுவதும் ஏற்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகளில் அவர்களே தனியாக அந்த ட்ரீட்மெண்ட் பிளான்டைப் போட வேண்டும். அவர்கள் போடுவதற்கு முடியும். ஆனால், சின்னச்சின்ன தொழிற்சாலைகள் அதுவும் ஒரு இடத்திலே இல்லாமல் பல இடங்களில் பரவலாக அமைந்து விட்ட காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. பரவலாக இருக்கின்ற அந்த சின்னச்சின்ன தொழிற்சாலைகளிலிருந்து பைப் மூலமாகக் கொண்டு,



வந்து ஒரு இடத்திலே அதை ட்ரீட் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதைச் செய்வதற்கு ஆறு மாத காலத்திலே முடித்துவிட முடியும் என்று சொல்ல முடியாது. ஆனால் வேலைகளை வேகமாகத் தொடங்கி விரைவாக முடிப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

**(ஆ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளும் மின்சாரம் தடைபடுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி.

**திரு. சி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் பகுதிகளில் இரவு ஏழு மணி முதல் பத்து மணி வரை மின்சாரம் தடைபடுவது குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

சங்கராபுரம் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு 7 மணி முதல் 10 மணி வரை ஒரு முனை மின் பாதையில் மின்சக்தி வழங்கப்படுகிறது. சங்கராபுரம் துணைமின் நிலையத்திலுள்ள மின்மாற்றியின் கொள்திறனுக்கு கூடுதலாக மின் பளுக்கள் இணைப்பில் உள்ளதால் பகல் நேரங்களில் சுழல் முறையில் சுமார் 1 மணி முதல் 2 மணி நேரம் வரை பளு குறைப்பு (Load Shedding) செய்யப்பட்டு வருகிறது. இத்தடங்கல் மிகவும் குறைந்த அளவே இருக்கும்படி, தற்பொழுதுள்ள மின் மாற்றி பாதுகாப்பு சாதனங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத் துணை மின் நிலையத்தில் மேலும் ஒரு 10 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைப்பது பற்றி ஏற்கனவே ஆராயப்பட்டு 18—3—1992 அன்று இதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. வரும் ஜூன் மாதம் இந்த மின்மாற்றி தொழிற்சாலையிலிருந்து பெறப்படவுள்ளது. மின்மாற்றி வந்தவுடன் அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

*திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 10 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைப்பது பற்றி 18—3—1992-இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேற்படி மின்மாற்றி ஜூன் மாதம் கிடைக்கும் என்றும் வந்தவுடன் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. என்னுடைய சங்கராபுரம் தொகுதி முழுவதும் அரசம்பட்டு, செல்லம்பட்டு, கரடிசித்தூர் மற்றும் பூட்டை, மணலூர், வட செருவலூர் போன்ற பகுதிகளில் முற்றிலும் இரவு நேரங்களில் மின்சாரம் வருவது கிடையாது. அங்கே ஒரேயொரு டிரான்ஸ்பார்மர்தான் இருக்கிறது. எனவே, உடனடியாக மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சங்கராபுரம் பகுதி மட்டுமல்ல, நான் ஏற்கனவே இந்த அவையிலே தெரிவித்து இருக்கிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே பல்வேறு குறைபாடுகள் நம்முடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாலேயே இந்தப் பிரச்சினை அதிகமாக இருந்திருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளை எல்லாம் கணக்கு எடுக்கவேண்டும் என்று சொல்லி, அதற்காக ஒரு தனி அதிகாரியை ஒரு ஆண்டு காலத்திற்கு நியமித்து, அனைத்து மாவட்டங்களிலும் ஒரு ''காம்ஃபரஹென்சிவ் ப்ளான்'' ஒன்று தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். எந்த எந்த இடங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு மின்னழுத்தக் குறைபாடு இருக்கிறது, அதற்கு என்ன செலவாகும், எந்த எந்த டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்பட வேண்டுமென்பதற்கு, இன்றைக்கு மின்வாரியத்தின் மூலம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதலோடு பெரிய திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். அதனுடைய முன்மாதிரியாக நம்முடைய தர்மபுரி மாவட்டத்திலே அந்த ப்ளான் தயாரிக்கப்பட்டு, அதனுடைய திட்ட வடிவம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே எல்லா மாவட்டங்களிம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை ஒரு தொலைநோக்கோடு செய்யவேண்டிய பிரச்சினை என்ற காரணத்தினாலே, அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இன்று புகார்கள் வந்து



கொண்டிருக்கிற காரணத்தினாலே இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்று இன்றைக்கு அதற்கான நடவடிக்கையை இந்த அரசு முனைப்பாக எடுத்திருக்கிறது. அதிலே ஒரு நடவடிக்கைதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதியிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே 18—3—1992 அன்று 10 எம்.வி.ஏ. டிரான்ஸ்பார்மர்களை போடவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு அந்த டிரான்ஸ்பார்மர் வாங்குவதற்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜூன் மாதம் அதைத் தர இருக்கின்றார்கள். வந்தவுடனே அந்தப் பகுதியிலே புதிய டிரான்ஸ்பார்மர் நிறுவப்படும். ஏற்கனவே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளில் முறையாக மின் அழுத்தம் குறைவில்லாத அளவுக்குச் சீராக இருக்கும்படி அரசு பார்த்துக் கொள்ளும். பொதுவாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு விரைவான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன். சங்கராபுரம் பகுதியில் உள்ள கல்வராயன மலைப் பகுதியில் கொண்டியாநத்தம் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டு அநேக மலைவாழ் மக்கள் இரவிலே வெளியில் வர இயலாமல், மின்சார வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னேன். அதே நிலை இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அருள்கூர்ந்து கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே மின்சாரம் தயார் செய்வதை மற்ற பகுதிக்கும் பயன்படுத்த உத்தரவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கிருந்து அந்த மின்சாரத்தை மாணவர்கள் படிப்புக்காகவும் விவசாய மக்களின் நன்மைக்காகவும், பொது மக்களின் நலனைக் கருதியும், கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தயார் செய்யும் அந்த மின்சாரத்தை இடைக்கால நிவாரணமாக அங்கிருந்து பெற்று சங்கராபுரம் தொகுதிக்கு உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை சங்கராபுரம் நகரைப் பற்றிய பிரச்சினை. இன்றைக்கு கல்வராயன் மலைப் பகுதி மக்கள் பிரச்சினை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 ஏப்ரல் 22

இன்றைக்கு பெகாஸ் ( Bagasse ) மூலம் மின்சாரம் நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அதன் கழிவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அந்த மின்சாரத்தை அவர்களுடைய தேவைக்குப் போக மற்ற பகுதிகளுக்கு உபயோகிக்கலாமா என்பதை அரசு ஆய்ந்து வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே அவர்களுடைய தேவைக்குப் போக உபரியாக மின்சாரம் இருக்குமானால் அதைப் பயன்படுத்துவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

முற்பகல் 9-40

**திரு. கி. தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நமது புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்தான் குழுக்களின் அறிக்கைகள் அதிகமாக சமர்ப்பிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் பணிந்து தெரிவித்துக் கொண்டு, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1971-72 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 44-வது அறிக்கை.

இநதியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1982-83, மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம் தொழிற்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 46-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பறறிய குழுவின் 45-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 24-வது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 46-வது அறிக்கை, ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.



1992 ஏப்ரல் 22]

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. கா. ப. பட்டாபிராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

**டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983—84 மற்றும் 1984-85—அளித்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1983—84 மற்றும் 1984—85 ஆகிய ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1983-84 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளதெனத் தெரியவந்துள்ளது. அந்த மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக்கணக்கு குழு, 1983-84 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1983-84 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப்பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1983-84 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்பொழுது தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மிகைச் செலவு மொத்தம் ரூ. 55.20 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில் பாசனம், ஓய்வூதியம், ஏனைய ஓய்வுகால நன்மைகள், பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. நிலுவையாக இருந்த பட்டிகளுக்கு தொகை கொடுக்கப்பட்டதாலும் கால்வாய் பிரிவு, தொலைபேசிக் கட்டணங்கள், பாசனத் திட்டங்களுக்கான பராமரிப்புச் செலவு ஆகியவற்றாலும், பாசனம் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. இவை, தவிர்க்க முடியாதனவாக இருந்தன.



4. ஓய்வூதியங்கள், ஏனைய ஓய்வுகால நன்மைகள் என்பதன் கீழ் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான காரணம். ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், அவ்வப்போது கூடுதலாக அகவிலைப்படி தவணைத் தொகை வழங்கியதும், ஓய்வூதியம் வழங்கிய நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மருத்துவச் சோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற அனுமதி வழங்கியதும் 1—4—1982 முதற்கொண்டு குறைந்த அளவு ஓய்வூதியத் தொகையை ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தியதும் ஆகும்.

5. பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டதற்கான காரணம், வழிவகை முன்பணங்களை அதிக அளவிற்குத் திருப்பிக் கொடுத்ததும் 31—3—1984 ஆம் நாளன்று மத்திய அரசு திட்டத்தில் சேராத பணிகளுக்கான சிறப்பு நடுத்தரக்கால கடன், இந்திய ரிசர்வ் வங்கியிடம் இருந்து பெறப்பட்ட மிகைப் பற்று முழுவதையும் கொடுத்து தீர்த்துவிட்டதும் ஆகும்.

6. 1983-84 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான, இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

1984-85 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1984—85 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1984-85 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக்கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1984—85 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளை சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்பொழுது தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்த மிகைச் செலவு மொத்தம் ரூ. 9.79 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், மாவட்ட நிருவாகம், பொதுப் பணிகள் கட்டிடங்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும், இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ஆகிய வற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. கூடுதல் அகவிலைப்படித் தவணைத்தொகை கூடுதலாக வழங்கியதாலும் கிராம ஊழியர்களுக்குத் தனி ஒரு மொத்த தொகையும் மதிப்பூதிய நிலுவைத் தொகையும் வழங்கிய தாலும் மாவட்ட நிருவாகம் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. தவறான வகைப்பாடுகளைச் சரி செய்ததாலும் மிகைச்செலவு ஏற்பட்டது.

4. பொதுப் பணித்துறை மானியம் சாராச் செலவு களையும் ஏனைய மானியக் கோரிக்கைகள் தொடர்பான பராமரிப்பு பழுது பார்ப்புச் செலவுகளையும் இதில் கணக்கெழுதியதாலும், இறுதித் திருத்த நிதியொதுக் கத்தில் நிதியொதுக்கம் கிடைக்குமென்று எதிர்பார்த்து, ஏனைய சில பெருந் தலைப்புகளின் கீழ் மிகைச் செலவு செய்ததாலும் பொதுப் பணிகள் கட்டிடங்கள் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதி கரித்ததாலும் குறைந்த அளவு ஓய்வூதிய வரையறை உயர்த்தப்பட்டதாலும், தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதி முறைகளை 1—10—1979-க்கு முன் ஓய்வூதியம் பெற்றவர் களுக்கும் நீட்டித்ததன் காரணமாக அவர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கியதாலும் அகவிலைப்படி தவணைத் தொகை கூடுதலாக வழங்கியதாலும், ஓய்வூதியங்கள் ஏனைய ஓய்வுகால நன்மைகள் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளூர் அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வரிவசூல் அதிகரித்ததன் காரணமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவிற்குத் தொகை ஒதுக்கியதாலும் 1983-84, 1984-85 ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகளை உள்ளாட்சி மன்றங்கள் அடுத்த ஆண்டுகளில் பெற்றதாலும் இழப்பீடுகள் ஒதுக்கீடுகள் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

7. 1984-85 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவை யை வேண்டி அமர்கிறேன்.



## 5. மானியக் கோரிக்கைகள், 1992-93— விவாதமும், வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் —தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு— —தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மானியக் கோரிக்கை எண் 10 பால் வழங்கு திட்டங்கள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 22 கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின் மீது 21—4—1992 அன்று நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்று சீரோடும் சிறப்போடும் இந்திய துணைக் கண்டத்திலே ஒரு முன்மாதிரி மாநிலமாக தமிழகத்தை வழி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். பாரதி கண்ட கனவை நனவாக்கி வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், பெண்கள் முன்னேற்றத்திற்காக செய்த புரட்சிகர கொள்கைகளுக்கு ஓர் உருவம் கொடுத்து, தமிழகத்தில் புனிதத் தன்மையைக் காத்திட, தனது சிந்தனைகளை, சீரிய திட்டங்களை தொடர்ந்திட, தனக் கொரு வாரிசு வேண்டுமென, பொது மக்களுக்கு, பொன் மனச் செம்மல் தன்னிகரற்ற தானைத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் அன்றே அடையாளம் காணப்பட்டு, மாலுமியை இழந்த கப்பல் போல், தமிழகம் தத்தளித்துக் கொண்டிருந்த தருணத்தில், தமிழக மக்களின் துயர் துடைக்க, சீறி எழுந்த சிங்கம் போல் ஆசிய கண்டமே காணாத மாபெரும் வெற்றியைப் பெற்று ஆட்சி பொறுப்பேற்றிருக்கும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றத்திற்கான திட்டங்களை, அல்லும் பகலும் அயராது சிந்தித்து செயல்படுத்தி வருவதை அரசியல் சாணக்கியர்களும் விஞ்ஞான அறிஞர்களும் தத்துவ மேதைகளும் பொருளாதார நிபுணர்களும் பாராட்டுவதை இந்த மாமன்றமும் இந்த

நாடும் நன்கு அறியும். எல்லாவற்றிற்கும் மேலாக, எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியெல்லாம், இந்தத் தமிழ் திருநாட்டை, கொடுங்கோலரிடமிருந்து மீட்டு, தமிழை, தமிழ் மக்களை காப்பாற்றிவிட்டீர்கள். தன்னுயிரையும் பணயம் வைத்து காப்பாற்றிக்கொண்டிருக்கின்ற எங்களின் அன்புத் தாய் புரட்சித் தலைவிக்கு ஒவ்வொரு தமிழனும் நன்றி உணர்வுகளைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழன் என்றொரு இனம் உண்டு ; தனியே அவர்க்கொரு குணம் உண்டு என்ற உயர்ந்த கொள்கையோடு தமிழகத்தை உலக அரங்கில் உயர்த்திக் காட்ட சபதமேற்றுள்ளார்கள். நம் தமிழகத்தை அனைத்துத் துறையிலும் மேலோங்கச் செய்திட கங்கணம் கட்டிக்கொண்டு கடமையாற்றிவரும் தங்கத் தலைவி, தமிழகத்தின் விடிவெள்ளி, அரசியல் வானில் ஒளிமிகும் சுடர்விளக்கு, இந்த இருபதாம் நூற்றாண்டில் பெண்மையின் ஆட்சியே பெருமை கொண்டது என்ற பெயரோடு திறம்பட ஆட்சி புரிந்து வருகின்ற எங்களின் தமிழகத்தின் ஜான்சிராணி (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை ஓர் முன்மாதிரி மாநிலம் ஆக்கிட அனைத்துத் துறைகளுக்கும் புத்துயிர் ஊட்டி, ஒவ்வொரு துறையின் செயல்பாட்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்டு இந்த ஆட்சியை நடாத்திக் கொண்டு வரும் தாங்கள், சாதாரண என் போன்ற சாமான்யர்களை இந்நாட்டுக்கு அறிமுகம் செய்து, குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த கூலி விவசாய குடும்பத்தைச் சேர்ந்த என்னை தங்களின் கருணை உள்ளத்தால், இந்த மாமன்றத்திற்கு அறிமுகம் செய்துள்ள தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு ".

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப இன்று தமிழகத்தின் திருவிளக்காய், வாராது வந்துதித்த தெய்வத் திருமேனியாய், ஏழையின் உயிர் வாழும் உறைவிடமாய், நடமாடும் திருக்கோயிலாய், இந்த தங்கத் தமிழகத்தில் காரிருளை நீக்கி, அன்பு பெட்டகமாய், ஒடிந்த இந்த தெய்வத் திருநாட்டின் செங்கோலை நிமிர்த்தி வாழ வைக்கும் தெய்வத்துள் ஒருவராய், மண் உலகம் புகழும் மாமேதையாய், பொன் உலகம் போற்றும் புனிதத் தாயாக இருந்து, " என் கடன் ஏழைக்குப் பணி புரிந்து கிடப்பதே " என்று சொல்லி. தன் உயிருக்கு உலைவைக்கும் செய்தி வந்தும் அதனை அலட்சியப்படுத்தி தமிழர் நலனுக்கு இரவு பகலாக உழைத்திடும் மாதர்குல விளக்காய், எங்கள்



தமிழக வானில் ஓர் நம்பிக்கை நட்சத்திரமாய் " பாரடா, தமிழ் நாட்டில் ஆட்சியை, பொற்கால ஆட்சி அங்குப் பூத்துள்ளது " என உலக ஆட்சி மன்றங்கள் சிறப்புடன் நோக்கும் இராம ராஜ்யத்தை நடத்தி, பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறந்து, ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறந்து, அடித்துக் கறக்கவேண்டிய சில மாடுகளை அடித்து, அவற்றின் உண்மையை கறந்து ஏழையின் உள்ளத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) பால் வார்த்து, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையை அவர்களது ஆசியோடு நான் ஆரம்பிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 10. பால் வழங்கு திட்டங்கள். இந்த மானியத்தின் மீதான விவாதங்களில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். இவைகளுக்கு துறையின் மூலமாக நடவடிக்கைகள் எடுத்து எங்கெங்கு குறைகள் உள்ளதோ அவைகளெல்லாம் நிவர்த்தி செய்யப்படும் என்றும் எங்கெங்கு அரசிற்கு செலவு ஏற்படுகிறதோ அவைகளெல்லாம் அரசின் நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பால் வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1963-ஆம் ஆண்டு, முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. 1—2—1981 முதல் பால் வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல், பால் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு, வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் சங்கமாகவும் இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும் மேல் மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

முற்பகல் 9-55

பால் வளத்துறையின் முக்கியமான குறிக்கோள்கள், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தலும் நுகர்வோருக்கு

தரமான பாலும், பாலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தலும் ஆகும்.

கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சியிலும் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் பால்வளத்துறை ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. பால்வளத் துறை, தற்போது முக்கியமாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பதிவு செய்தல், அவற்றை மேற்பார்வை செய்தல், மற்றும் ஊரக பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஆகியவற்றை கட்டுப் படுத்தும் பணிகளைக் கவனித்து வருகிறது. தமிழகத்தில் 8,979 கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், பால் வளத்தைப் பெருக்கவும் 1991-92-ல் 350 கூடுதல் சங்கங் களை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31—12—1991-க்குள் அதற்கு மேலேயே 430 கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இக்குறியீடு எய்தப்பட்டது. இதைத்தவிர முழுக்க முழுக்க மகளிரே பங்கேற்கும் வண்ணம் 86 கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதனால் மேலும் 34,300 புதிய உறுப்பினர் கள் கூட்டுறவு பால் உற்பத்தித் தொழிலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். ஆக, மொத்தம் தமிழகத்தில் பால் உற்பத்தியில் சுமார் 19 இலட்சம் பேர்கள் ஈடுபட்டுள்ளார் கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களை மட்டுமே உறுப்பினர் களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. அவர்கள் சங்கத் திற்கு வழங்கும் பாலின் தரத்தில் அடிப்படையில் அரசு நிர்ணயம் செய்துள்ள விலையில் அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மாடுகள் வாங்க வங்கிக் கடன் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்களின் கால் நடைகளுக்கு அவர்கள் வீட்டிலேயே இலவச மருத்துவ வசதி செய்து தரப்படுகிறது. மேலும், குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும், உறைவிந்து - குச்சி செயறகைமுறைக் கருவூட்டல் வசதியும் செய்து தரப்படுகிறது.



1992-93 வரையிலான எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டத்திற்காகவும், பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு அடிப்படை வசதி செய்து தரவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலுவலகக் கட்டிடங்களுடன் கூடிய கிடங்கு அமைத்துத் தரவும் ரூ. 525 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்க கோரப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அக்கறை கொண்டுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே ரூ. 7.5 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பால்பண்ணை வளர்ச்சித் திட்டம் இதய தெய்வத்தின் மின்னல் வேக நடவடிக்கையால் இந்த ஆண்டிலே செயல் பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எஞ்சியுள்ள, பசும்பொன் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் இந்தத் திட்டம் புரட்சித் தலைவியின் உத்தரவுக்கிணங்க இந்த ஆண்டிலேயே விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தீவிர பால் பெருக்குத் திட்டம் இன்றிலிருந்து அமுலுக்கு வருகிறது.

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் காமராசர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை ஒன்று ரூ. 490 இலட்சம் செலவில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற் போது அது செயல்படத் துவங்கிவிட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் பால் பண்ணைகளுக்கு சூரிய வெப்ப கொதிகலன்கள் அமைத்துத் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

பால் பெருக்குத் திட்டம். ஆனந்த் பாணியில் ஒருங்கிணைந்த கூட்டுறவில் ஒரு நிலையான எதிர்கால வளர்ச்சியை உருவாக்கி 13 மாவட்டங்களையும், நகர்ப்புற பால் பண்ணைகளையும் உள்ளடக்கிய கருத்துரு ஒன்று ரூ. 68.19 கோடி செலவில் தேசிய பால் வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, தர்மபுரி, மதுரை, கோயம்புத்தூர், வடாற்காடு - அம்பேத்கர், பெரியார் மாவட்டங்களில் திட்டத்திற்கும், தென் சென்னையில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைப்பதற்கும், அம்பத்தூர் பால் பண்ணையை நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டராக பதப்படுத்தும் திறனுக்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கும் தேசிய பால்வள வாரியம் இந்த 9 மாவட்டங்களுக்காக இணையத்திற்கு ரூ. 62.20 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம் சிறப்பாக நடந்து வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய பால் உற்பத்தியாளர் இணையம் நாளொன்றுக்கு 11.55 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்து நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் விற்பனை செய்துள்ளது. 1994-ஆம் ஆண்டில் பால் விற்பனை 17.00 இலட்சம் லிட்டராக உயரும் என உத்தேசிக்கப்பட்டு, அதற்கேற்றவாறு பால் உற்பத்தியைப் பெருக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்விணையத்தில் மொத்த பால் விற்பனை 1991-92 டிசம்பர் முடிய ரூ. 104.28 கோடியாகும்.

முற்பகல் 10-00

வெளி மாநிலங்களுக்குப் பால் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், அதே சமயத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடனும் பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எருமைப்பால் கொள்முதலுக்கான விலையை 23—2—1992 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4.70-லிருந்து ரூ. 6-30 ஆக உயர்த்தி ஆணையிட்டார்கள். இதன் விளைவாக பால் இணையத்திற்கு வரும் பாலின் அளவு நவம்பர் 1991-ல் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).



கடந்த 3 ஆண்டுகளில் பலமுறை பால் உற்பத்தியாளர்களுக்கு விலை உயர்வு தரப்பட்ட போதிலும் பால் விற்பனை விலையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதனால், பொருளாதார ரீதியில் இணையத்திற்கும் ஒன்றியத்திற்கும் இழப்பு ஏற்படத் தொடங்கியது. இதன் காரணமாக பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பால் பணத்தை பட்டுவாடா செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்றபோது தமிழகத்திற்கு வாழ்வளிப்பதில் கற்பக விருட்சமாக, காமதேனுவாக விளங்குகின்ற காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக இணையத்திற்கு 10 கோடி ரூபாய் முன்பணம் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) பால் உற்பத்தியாளர்களின் துயரத்தை உடனடியாகத் தீர்த்து வைத்தார்கள் என்பதை இந்த அவைக்கு மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் தற்சமயம் தினசரி 7 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. 135 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலமாகவும், 90 தனியார் கடைகளிலே பால் தொட்டிகளின் மூலமாகவும் மற்றும் பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்டும் விநியோகிக்கப்படுகின்றன. மூன்றாவது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் புதியதாகத் தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் நிறுவிட 125 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பால் விற்பனை அட்டைகள் புதுப்பிக்கப்படுவதில் சிரமம் ஏற்படுவதைக் கருத்திற் கொண்டு, பொதுமக்கள் நலன் கருதி குறிப்பிட்ட தினங்களுக்குள் பால் அட்டையைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் மாதம் முழுவதும் புதுப்பிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்கப்படும் ஆவின் பாலுக்கு சென்னை நகரிலும், தமிழ்நாட்டிலுள்ள பெரிய நகரங்களிலும் மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே பாலிதீன் பை தயாரிக்கக்கூடிய ஆலை ஒன்றை தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டையில் ரூ. 1½ கோடி மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நமது இதய தெய்வத்தின் ஆட்சிக்கு முன்பு இருந்த அரக்கர்கள் ஆட்சி, மக்கள் வரிப் பணத்தில் மக்களின் உயிர் குடிக்க மலிவு விலைச் சாராயத்தை பைகளில் அடைக்கும் இயந்திரத்தை வாங்கி, மது அரக்கர்கள் வரலாற்றில் பதித்துவிட்ட சான்றுகளை, ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக ஆட்சிக்கு வந்துள்ள புரட்சித் தலைவி அவர்கள், உயிர் குடிக்கும் மலிவு விலை மதுவைத் தூக்கி எறிந்து, தனிப் பெருந் தலைவியாக விளங்கும் புரட்சித் தலைவி அவர்கள் பாலிதீன் பைகளில் மலிவு விலை மது என்னும் விஷத்தை அடைத்து வந்த இயந்திரத்தை மக்களின் உயிர் காக்கும் பாலை அடைக்கும் இயந்திரமாக மாற்றி, தமிழர்கள் உயிர் காத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னையில் இயங்கி வரும் 135 தானியங்கிப் பால் வழங்கும் நிலையங்களுக்கு ஒப்பந்தக்காரர்களாக முன்னாள் இராணுவத்தினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் இராணுவத்தில் 15 ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும். 8-வது வகுப்புவரை படித்திருக்க வேண்டும். மற்றும் 60 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் பால் சரியாகவும் தரமாகவும் வழங்குகிறார்களா என்பது பற்றி அவ்வப்போது திடீர் சோதனைகள் பல நடத்தி கண்காணிக்கப்படுகிறது. பால் குறைத்து வழங்கினால் அபராதம் விதிக்கப்படுகிறது. பாலில் கலப்படம் செய்தால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது. சென்னையில பாக்கெட் பால் விற்பனைக்காக 535 டிப்போக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு விற்பனையாளருக்கென 90 பால் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இதுவரை 1,857 முறை திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 73 பேர்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது. ரூ. 5,88,850 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. பாலின் எடை மற்றும் தரத்தைப் பொதுமக்களும் சோதித்துப் பார்க்கும் வகையில் பால் மானிகள், அளவு ஜாடிகள் ஆகியவையும் வைக்கப்பட்டுள்ளன. இதேமுறைதான் மற்ற எல்லா நகரங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. சென்னையில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது.

முற்பகல் 10-50

கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், தங்கள் உறுப்பினர்களிடமிருந்து பாலைச் சேகரித்து, உள்ளூர் தேவை போக மீதி பாலை பால் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.



பாலின் தரத்திற்கேற்ப, ஒன்றியங்கள் பாலுக்குரிய விலையை சங்கங்களுக்கு வழங்குகின்றன. ஒன்றியங்கள், பாலைப் பதப்படுத்தி விநியோகம் செய்கின்றன. சங்கங்களின் செயல்பாட்டைக் கண்காணிக்க விரிவாக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எருமைப் பாலின் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க உத்தரவிட்டுள்ள மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பசும்பால் உற்பத்தியாளர்களும் பயன் பெறும் வகையில் தொழிலாளர் தினமாகிய வரும் மே மாதம் 1 ஆம் தேதி முதல் பசும்பாலின் கொள்முதல் விலையையும் ஒரு லிட்டருக்கு 50 காசுகள் உயர்த்திக் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது தற்போது லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4.20 ஆக இருக்கும் பசுவின் பால் கொள்முதல் விலையை 1—5—1992 முதல் லிட்டருக்கு ரூ. 4.70 ஆக உயர்த்திக் கொடுக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மானியக் கோரிக்கை எண். 22. கால்நடைப் பராமரிப்பு

நமது கிராம வேளாண் பெருங்குடி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் கால்நடைகள் வளர்ப்புத் தொழில் மிகப்பெரிய அளவில் உதவி புரிந்து வருகிறது. ஆடு மாடுகளை வளர்த்துப் பல இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு கிராமப்புற மக்களுக்கு உயர் கலப்பு இனப்பசுக்கள், எருமைகள், ஆடுகள், கோழிகள் யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் ஆகியவற்றைப் பல்வேறு திட்டங்களின் கீழ் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாகவும் மானிய விலையிலும் வழங்கி வருகின்றது. இவ்வாறு வழங்கப்படும் கால்நடைச் செல்வங்களை நோயின்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்து அதன்மூலம் அதிகப்படியான பயனை ஏழை எளிய மக்கள் அடைய வேண்டி, அரசு ஆங்காங்கே கால்நடை மருத்துவமனைகளை நிறுவி போதுமான மருத்துவர்கள், மருந்துகள், பிற சாதனங்களையும் வழங்கி ஒரு சிறப்பான பணியை ஆற்றி வருகின்றது. கால்நடை மருந்தகங்கள் தங்கள் பகுதிக்கு வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். பொது மக்களிடமிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் மிகுந்த அளவில் வரப்பெறுகின்றன. இவற்றையெல்லாம் தாயன்பு உள்ளத்தோடு பரிசீலித்த நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு ஒட்டு மொத்தமாக 400 கால்நடை

மருந்தகங்கள் ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டிற்கு 10 முதல் 20 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படுவதுதான் இதுவரையில் பின்பற்றப்பட்டு வந்துள்ள நடைமுறையாகும். அதன்படிதான் கடந்த நிதியாண்டிற்கு 20 கால்நடை மருந்தகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். அதேபோல 10 கால்நடை மருந்தகங்கள் அல்லது மருத்துவமனைகளை, கால்நடை மையங்களாகத் தரம் உயர்த்தினார்கள். ஆனால் வரலாறு கண்டிராத அளவில், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு 400 மருந்தகங்களை நமது புரட்சித் தலைவி அவர்கள், தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் தேசிய வேளாண்மை ஆணையத்தின் பரிந்துரையான 12,000 கால்நடைகளுக்கு ஒரு மருத்துவமனை என்னும் இலக்கை அடைந்துள்ள முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்னும் பெருமையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டுக்கு சேர்த்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் தமிழகத்தில் உள்ள எல்லா கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்கும் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக நாம் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களுக்குப் பெரிதும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். மேலும் தங்கள் பகுதிகளுக்குக் கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கோரிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராஜாராமன், திரு. சுவாமிநாதன், திரு. எஸ். பன்னீர்செல்வம், திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், திரு. ச. புரட்சிமணி, திரு. கே. ஏ. மனோகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. எச். எம். ராஜு, திரு. பி. வி. இராஜேந்திரன், திரு. ஆர். சிங்காரம் மற்றும் பிறரும் பெரிதும் மன நிறைவு கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தாற்போல, தங்கள் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவ மனைகளுக்குச் சொந்தமாகக் கட்டிடங்கள் இல்லை என்ற குறைபாட்டினையும் இம்மருந்தகங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும் எனவும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். இராஜாராமன், திரு. ஆர். சிங்காரம் போன்றவர்கள் வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளனர். தற்போது மொத்தம் உள்ள மருந்தகங்களில் சுமார் 170 மருந்தகங்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் இல்லை. ஒரு மருந்தகம் கட்ட சுமார் ரூ. 3.65 இலட்சம்





செலவாகும். அதன்படி 170 மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்டவேண்டுமானால், சுமார் ரூ. 620.50 இலட்சம் தேவைப்படும். இதில் அரசின் பங்காக வழங்கப்படும் மானியத் தொகை போக மீதித் தொகையைச் செலுத்த சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடம், போதுமான நிதி வசதியில்லை. அதேபோல், கால்நடைக் கிளை நிலையங்கள் சுமார் 2,000 இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை இலவசக் கட்டிடங்களில், இயங்கி வருகின்றன.

முற்பகல் 10-10

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன், தஞ்சை வட்டம் மாத்தூர் மேற்கு ஊராட்சியில் இயங்கிவரும் கிளை நிலையத்திற்கு சொந்தமாக நிரந்தரக் கட்டிடம் கேட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியத்திடம் நிதி வசதி இல்லை என்ற போதிலும், மாத்தூர் மேற்கு கிளை நிலையத்திற்கு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டித்தர மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜவகர்வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கால்நடை மருந்தகங்களுக்கும் கட்டடம் கட்டும் பணியை மேற்கொள்ள ஊரக வளர்ச்சித் துறையைக் கேட்டுக் கொள்ள எண்ணியுள்ளோம்.

கால்நடை பராமரிப்புத்துறை ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டோடு நூறு ஆண்டுகள் ஆகின்றன. நூறு ஆண்டுகள் கண்ட துறைகள் மிகச் சில வாகவே இருக்கும். அதிலும் கால்நடை பராமரிப்பைப் பொறுத்தவரையில் நூற்றாண்டு காணும் துறை இந்தியாவிலேயே தமிழக கால்நடை பராமரிப்புத் துறைதான் முதலாவதாகவோ அல்லது இரண்டாவதாகவோ இருக்க முடியும். நூற்றாண்டு கண்ட இத்துறை டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், அவர்கள் தருகின்ற ஊக்கத்தின் பயனாக, மிகுந்த வேகத்துடனும் ஆர்வத்துடனும், விழிப்புடனும், விவேகத்துடனும் செயலாற்றி கிராமப்புற மக்கள் தங்கள் பொருளாதாரத்தில் விரைந்து முன்னேற பாடுபடவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தேர்தல் அறிக்கையில் ஒவ்வொரு விவசாயியும் ஓர் உயர் ரக கலப்பினக் கன்று பெற்று தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வகை செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளோம். அதை நிறைவேற்றும் நோக்கத்தோடு மிகச் சிறந்த ஜெர்சி, பிரிசியன், முர்ரா இன பொலி காளைகளை அதனதன் மரபு வழி சிறப்பு, பால்வளத் தன்மை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு, பெரும் விலைக்கு வாங்கிப் பண்ணைகள் அமைத்துள்ளோம்.

வீரிய உறைவிந்து குச்சிகள் கிடைக்க இதுவரை சிறுகச் சிறுக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சீரமைத்து, ஒரே முயற்சியாக இக்காளைகளின் சீரிய உறைவிந்து குச்சிகள் மாநிலம் முழுமைக்கும் இவ்வாண்டே கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இதன் பயனாக உயர் இன உறைவிந்து நீங்கலாக ஏனைய தரம் குறைந்த விந்துகள் அறவே நீக்கப்பட்டு, அனைவருக்கும் சிறந்த கலப்பினக் கன்றுகள் கிடைக்கும் கனவு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆசியோடு நனவாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கால்நடைகளுக்கு வரும் நோய்களைத் தடுக்கக் கோரி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன், திரு. கே. செல்வராஜ் திரு. எச். எம். ராஜு, திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். தற்போது 22 கால்நடை மருத்துவ மையங்கள், அதாவது பெரிய மருத்துவ மனைகள், 758 மருந்தகங்கள், 57 மருத்துவ மனைகள், 50 நடமாடும் மருந்தகங்கள், 2,226 கால்நடை கிளை நிலையங்கள், 13 ஆய்வுக் கூடங்கள் மற்றும் 11 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் ஆகியவை கால்நடைகளுக்கு அவ்வப்போது ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து அவை பரவாமல் தடுக்கவும், கால்நடைகளை நோயிலிருந்து காக்கவும், தடுப்பூசி போடுதல், உடனுக்குடன் சிகிச்சை அளித்தல் போன்ற நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக கோடையில் ஏற்படும் நோய்களான கோமாரி, அம்மை, பேதி, அடைப்பான், வெக்கை நோய் போன்றவற்றைத் தடுக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நோய்களிடமிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகளைப் பற்றி மக்கள் தொடர்பு முகாம்கள் மூலமாகவும், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் அறிவிப்புகள் செய்து, விவசாய பெருங்குடி மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுகிறது.

மேலும் உலக வங்கி நிதி உதவியுடன் நன்கு பரிசோதனைக் கூடங்கள் ரூ. 58.30 இலட்சம் செலவில் இவ்வாண்டு நிறுவப்பட உள்ளன. இதில் ஒன்று கோவை மாவட்டத்தில் அமையவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. செல்வராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைப் பண்ணைகள் அமைக்க வேண்டும் என்னும் கொள்கை பற்றி விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன், திரு. கே. ஏ. மனோகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன் போன்றோர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள்.





தற்போது 10 கால்நடைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. தேவைக்கேற்ப மேலும் கால்நடைப் பண்ணைகள் உருவாக்குவது பற்றி அவ்வப்போது முடிவெடுக்கப்படும்.

கோழிப்பண்ணை அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். தங்கராஜ், திரு, ஆர். நடேசன், திரு. பி. வி. இராஜேந்திரன் போன்றோர் கோரிக்கை வைத்துள்ளனர். தமிழ்நாட்டில் கோழி வளர்ப்புத் தொழில் ஒரு புறக்கடை தொழிலாக இருந்த நிலைமை மாறி, இன்று விவசாயிகளும் ஏனையோரும் மிகப் பரவலாக சிறிய மற்றும் பெரிய பண்ணைகள் அமைத்து, இதையொரு பிரதான தொழிலாகக் கொள்ளும் அளவிற்கு ஒரு லாபகரமான தொழிலாக வளர்ந்துள்ளது. இந்தியாவில் முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் இப்போது இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. கோழி வளர்ப்புத் தொழில் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றது. நமது இதய தெய்வம் அவர்கள் கடந்த ஆண்டு ரூ. 120 கோடிக்கு ஒரு பெரிய திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டம் இவ்வாண்டு சீரிய முறையில் செயல்படத் துவங்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நமது இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்டில் 18 மாவட்டங்களில் 90 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 8,100 கோழிப்பண்ணைகள் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், 8,100 குடும்பங்கள் நேரடி வேலை வாய்ப்புப் பெறும் என்பதோடு முட்டை உற்பத்தி 150 கோடிக்கு மேல் உயர்ந்து, முட்டை உற்பத்தியில் நமது மாநிலம், புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் இரண்டாவது இடத்திலிருந்து முதல் இடத்தை அடையும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அது மட்டுமல்ல 150 கால்நடை மருத்துவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

முற்பகல் 10-15.

இந்தியாவிலேயே முதன் முதலில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் கண்டது தமிழ்நாடுதான். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒப்புதல் பெற்ற இத்திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக அகில இந்திய அமைப்புகளின் ஒப்புதல் பெறக் காத்திருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் பல்கலைக் கழக மானியக் குழுவும் இப்பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்

[ திரு. எம். ஆனந்தன் ]

பயனாக இப்பல்கலைக் கழகத்திற்கு ரூ. 2.7 கோடிக்கான திட்ட வேலைகளுக்கு இவ்வாண்டு மானியம் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக சுமார் ரூ. 3 கோடிக்கான கட்டடப் பணிகள் இவ்வாண்டே துவக்கப்படும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழாவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் கொண்டாட இருக்கிறோம். இத் தருணத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்ட இசைந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவினையும் முதலமைச்சராகவே இருந்து நடத்திட வேண்டுமென்ற எனது பேரவாவினை இந்த மாமன்றத்திற்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைத் தீவனங்கள் வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. நடேசன், திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள்.

கலப்பின பசுக்களுக்கு முக்கிய தேவை பசுந்தீவனம் ஆகும். இதுகாறும் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மாற்றப்பட்டு இவ்வாண்டு உயர்ரக புல் நறுக்குகள், தீவன மரக் கன்றுகள், தீவனப் பயிர் விதைகள் ஆகியவற்றை பரவலாக, இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

சிறப்பு செம்மறியாடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டம் பர்கூரிலும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். தென்னாற்காடு, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் 4,500 விவசாயிகள், ஒவ்வொருவரும் ரூ. 8,200 மானியத்துடன் கூடிய கடன் பெற்றுப் பயனடையும் வகையில் ரூ. 174 இலட்சம் செலவு செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

**கன்று வளர்ப்புத் திட்டம்**.— இத்திட்டம் வடாற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல் அண்ணா மற்றும் பெரியார் மாவட்டங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்பட இருக்கிறது.



[ திரு. எம். ஆனந்தன் ]

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்பின கன்றுகளுக்கு 4 மாதம் முதல் 32 மாதம் வரை பராமரிப்பதற்கான அடர் தீவனம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதனால் 5,500 விவசாயிகள் பயனடைவர். இதற்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி நமது இதய தெய்வம் அவர்கள் ரூ. 246.8 இலட்சம் செலவிட உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு எனது பதிலுரை திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன். அதனை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

இம்மாமன்றத்தில் இப்படியொரு சிறப்பான வாய்ப்பைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். பன்னீர் செல்வம்.

**திரு. என். பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலே கடந்த 11 ஆண்டுக் காலமாக ஒரு மருந்தகத்திலே டாக்டர் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக அந்தப் பணியிடத்தில் டாக்டர் அமர்த்தப்படுவாரா என்று கேட்க விரும்புகிறேன்..

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு தான் மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அலமேலுரங்காபுரம் என்ற இடத்திலே . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கங்கள் கேட்கும் போது, அமைச்சர் பேசிய பதிலுரையிலே இருந்து ஏதாவது விளக்கம் கேட்கவேண்டும். ஆனால், ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கக்கூடிய குறைகளை இந்த நேரத்தில் கேட்கக் கூடாது.

[பேரவைத் தலைவர்]

ஏதாவது கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுங்கள். (குறுக்கீடு) இது கிளாரிபிகேஷனில் வராது. உங்களுடைய தொகுதி என்று ஆரம்பிக்கும் பொழுதே அது கிளாரிபிகேஷன் இல்லை.

திரு. ரா. சா. பழனிசாமி

முற்பகல் 10-20

**திரு. நா. சா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாட்டு பாலுக்கு ஒரு லிட்டருக்கு 50 பைசா உயர்த்தி கொடுத்ததற்கு விவசாயிகள் சார்பில், பால் உற்பத்தியாளர்கள் சார்பில் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இன்னும் அவர்கள் கொஞ்சம் மனது வைத்து, இன்னும் கொஞ்சம் கூடுதலாக எதிர்காலத்தில் கொடுக்க வேண்டுமென்ற வேண்டு கோளை இந்த நேரத்தில் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ப. சரஸ்வதி.

**திருமதி ப. சரஸ்வதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய பட்ட தாரிகள் வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மருத் துவப் படிப்பு படிப்பவர்கள் கன்சல்டண்ட் வைத்து சம்பாதிக்கக் கூடிய சூழ்நிலையில், கால்நடை மருத்துவ படிப்பு வருடந் தோறும் முடித்து வரக்கூடிய சூழ்நிலையில், ஆசிரியர் பயிற்சி பள்ளியைப் போல, இதற்கும் ஒரு வரையறை வைத்து, அவர்க ளுக்கு வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து பட்டம் பெற்று காத்து இருப்போர் களுக்கு இந்த அரசு வேலை கொடுப்பதற்கு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கேள்விக்கு இடம் இல்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். அன்பழகன்.

**திரு. எஸ். அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை துறை ஆரம்பித்து 100 ஆண்டுகள் ஆகி விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நூற் றாண்டு விழாவை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் கொண்டாட இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட அந்த பெருமைமிக்க விழாவை, தமிழகத்தில் இரண்டாவது கால்நடைகல்லூரி இருக்கும் நாமக் கல்லில் வைத்து சிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மாதவரத்தில் 133 ஏக்கரில் 3 கோடி ரூபாய் செலவில் அமையவிருக்கிற பல்கலைக்கழக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்ட இருக்கிறார்கள். அந்தத் தருணத்தில் இந்த விழா சிறப் பாக அமையும். குறிப்பாக இதுபோன்ற விழா சென்னையில் அமைவதுதான் சிறப்பாக அமையும். நான் கேட்டுக் கொண் டது, பல்கலைக்கழகம் இன்றைக்கு துவங்குகிற புரட்சித் தலைவி அவர்கள், அதன் நூற்றாண்டு விழாவுக்கும் முதலமைச்சராக இருந்து அந்த விழாவை ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற என் ஆசையைத் தெரிவித்தேன் என்பதை நினைவூட்ட கடமைப்பட் டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எம். கே. சுந்தரம்,

**திரு. எம். கே. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது இதயத்தில் வீற்றிருக்கிற தங்கத் தலைவி, தானைத்தலைவி, புரட்சித் தலைவியின் இந்த புனித ஆட்சியில் பாலின் கொள்முதல் விலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 4.20-லிருந்து ரூ. 4.70-ஆக உயர்த்தி இருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன். இங்கே அமைச்சர் அவர்கள் ரூ. 4.20-க்கு பால் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் கிராமப்புறங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டுப் பாட்டில் இயங்குகிற ஒருசில பால் சங்கங்கள் இன்றைக்கும் ரூ. 3.70 என்றும், ரூ. 3.90 என்றும் பாலை கொள்முதல் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் விற்கிற விலை ரூ. 6.00 என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மீதும், அங்கே பணிபுரிகிற செயலாளர்கள் மீதும் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கையெடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தகவல்கள் எனக்கு வரவில்லை. இதுபோன்ற குறிப்புகளை உடனடியாக உறுப்பினர் அவர்கள் தருவாரேயானால் மிக விரைவில் நடவடிக்கையெடுத்து, தகுந்த பதில் அவருக்கே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(அ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 10. பால் வழங்கு திட்டங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படு கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரும்பப் பெறுவதற்கே வேகமாக வந்திருக்கிறார். (சிரிப்பு).

திரு. ஜி. பழனிசாமி, தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'' பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,16,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 72,46,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் '' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

முற்பகல் 10-25

(இ) கோரிக்கை எண் 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 114,02,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2440, திரு. எம். எம். எஸ். அபுல் ஹஸன்.

[1992 ஏப்ரல் 22

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ''மயிலாடுதுறை தொகுதியில் உள்ள காட்டு நாய்க்கன் சமூகத்தவர்க்கு அவர்கள் காட்டு நாய்க்கன் இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்கு அளிக்கப்பட வேண்டிய சாதிச் சான்றிதழின் அவசியம் பற்றி விவாதிக்க'' நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 114,02,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2410. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி விவாதிக்க'', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 114,02,54,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2412, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நாகப்பட்டினம், காயிதேமில்லத் மாவட்டம் மாட்டுமந்தை புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் ஏழை, எளிய அரிசன ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்பு பட்டா கொடுக்க வேண்டியதின் அவசியத்தைக் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 114,02,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய மானியக்கோரிக்கையின் மீதான கொள்கை விளக்க



1992 ஏப்ரல்22] [திரு. எம்.ஆனந்தன்]

குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பைற நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதையே இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக் களையும், ஆலோசனைகளையும் அளித்த பிறகு எனது பதிலைக் கூறுகிறேன் எனக்கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆதி திராவிடர், பழங்குடியினர் துறையினுடைய மானியத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பின்னாலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக 10 அம்ச திட்டத்தைக் கொண்டுவந்த பிறகு சிறப்பாக தமிழகத்திலே செயலாற்றி வருகிறார்கள் என்பதிலே கருத்து மாச்சரியங்கள் யாருக்கும் இல்லை. இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுடைய மேம்பாடு இன்றைக்கு சுதந்திரம் பெற்று 45 ஆண்டுகள் ஆகி விட்டது என்று நாம் சொல்லிக்கொண்டு, விழாக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி எடுத்துக்கொண்டிருந்தாலும் தாழ்த்தப்பட்டவன் தாழ்த்தப்பட்டவனாகத்தான் இருக்கி றானே தவிர, அவனுடைய மேம்பாடு எந்த அடிப்படையில் உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது என்பதுதான் உண்மை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த சில வாரங்களுக்கு முன்பு இதே அவையிலே நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு இங்கே பதிலளித்திருக் கிறார்கள். தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகாமையில் இருக்கின்ற குடிதாங்கியிலே தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தைச் சார்ந்தவரை எடுத்துச் சென்று புதைப்பதற்குக் கூட அந்த சமுதா யத்திலே உரிமை பெறாத நிலையில்தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று நான் சுட்டிக் காட்டியபோது தமிழகத்தி னுடைய விடிவெள்ளியாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். தாழ்த் தப்பட்டவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவேன். அந்த சடலத்தை உரிய மரியாதையோடு எடுத்துச் செல்வதற்கு நான் உரிய பாதுகாப்பு கொடுப்பேன் என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கேயிருக்கின்ற காவல் துறை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவரும் மாறாக,

---

இ529 முதல் 567 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்ளது

முதலமைச்சர் சொன்ன அந்தக் கூற்றை மீறி, அந்த அழகனுடைய உடல் அவருடைய இல்லத்திற்குப் பின்னாலேதான் புதைக்கப் பட்டிருக்கின்றது என்ற ஒரு உண்மையை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேவாரத்தில் அந்தக் கிராமத்திலே பூங்காவனம் என்கிற ஒரு பெண்மணி இறந்திருக்கிறார்கள். அந்தச் சடலத்தைப்பற்றி முதலமைச்சருடைய தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னாலே, உரிய மரியாதையோடு அந்த மக்கள் எந்த வழியிலே எடுத்துச் செல்ல வேண்டும் என்று விரும்பினார் களோ அதே வழியிலே எடுத்துச் சென்று அந்த அம்மையாருடைய உடல் சவ அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. அதற்காக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

அதுமட்டுமல்ல. இன்றைக்கு தமிழகத்திலே பார்க்கிறபோது, பல்வேறு பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் குருவிகளை போல, மாடுகளைப் போல நடத்தப்படுகிறார்கள். சுட்டுத் தள்ளுகின்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். நெல்லை மாவட்டத்திலே திருச்செந்தூருக்கு அருகாமையிலே நான்கு முனை கிணறு என்ற ஒரு பகுதியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது பற்றி இந்த அவையிலே இருக்கின்ற அனைவருக்கும் நன்கு தெரியும் என்று நான் எண்ணுகிறேன். அங்கே ஏற்பட்ட அந்தக் கலவரத்தை, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மூடி மறைத்து உண்மைக்கு மாறான தகவல்களை அரசுக்கும் மக்க ளுக்கும் வெளியிட்டு இருக்கிறார்கள். பத்திரிகைகளும் அவை களை மாறாக மாற்றி வெளியிட்டு இருக்கின்றன என்பதுதான் உண்மை. அங்கேயிருக்கிற பணபலம் படைத்தவர்களும், பத்தி ரிகை பலம் படைத்தவர்களும் காவல் துறையிலே இருக்கின்ற மிக உயர்ந்த அதிகாரத்திலே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் தலையிட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுமைகளை இழைத் திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அங்கே இருக்கிற காவல் துறை அதிகாரிகள் தங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன் படுத்தி அந்த மக்களுக்கு தேவையற்ற முறையிலே தாழ்த்தப்பட்ட மக்களை அழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு செயல் பட்டு இருக்கிறார்களே தவிர, தாழ்த்தப்பட்டவர்கள் செய்தது குற்றம் என்பது இன்றைக்கும் ஒப்புக் கொள்ள முடியாத ஒரு நிலையாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அதற்கு அருகாமையிலே இருக்கிற குறிஞ் சாங்குளம் என்ற கிராமத்திலே சங்கரன்கோவில் தாலுக்காவிலே 4 ஆண்டுகளாக புறம்போக்கு நிலத்திலே கோவில் கட்ட வேண்டும் என்று அந்தக் காலனி மக்கள் விரும்புகிறார்கள். பல பிரச்சினை கள் எழும்புகிறது. காவல் துறைக்கும், மாவட்ட ஆட்சித் தலைவ ருடைய கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகிறது. அங்கே தனி



தாசில்தார் இருக்கிறார். வெல்ஃபேர் அதிகாரிகள் இருக்கிறார் கள். அவர்களும் கண்டுகொள்ளவில்லை. 4 ஆண்டுக் காலமாக இழுத்துக் கொண்டிருந்த அந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முடியாத நிலைமையை உருவாக்கி, அங்கே 4 அரிசனங்கள் வெட்டிக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

அதுமட்டுமல்லாமல், அருகாமையிலே இருக்கிற செங்கற் பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டத்திலே, மதுராந்தகம் அருகே இருக்கிற மல்லேஸ்வரம் என்ற ஒரு கிராமத்திலே துரைசாமி என்பவருடைய மகள் மல்லிகா, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆட்டோ டிரைவர் ரவி, வேறு ஒரு இனத்தைச் சேர்ந்தவர், அந்தப் பெண்ணைக் காதலித்து இருக்கிறார். காதலித்த பின் னாலே, கர்ப்பம் தரித்து இருக்கிறார். திருமணம் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதியிலே இருக்கிற மற்ற அந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் அந்த ரவியைக் கேட்கச் செல்கிறார் கள். அவர் மதுராந்தகம் பகுதியிலே இருப்பதாகச் சொல்கி றார்கள். மதுராந்தகத்திற்குச் செல்லுகின்ற வழியிலே ரவிக் கும் அந்தப் பெண்ணோடு சென்றவர்களுக்கும் வாய்த் தகராறு ஏற்படுகிறது. அதிலே சண்முகம் என்பவர் கொல்லப்படுகிறார். கொல்லப்பட்ட பகுதி மதுராந்தகம் காவல்துறையைச் சேர்ந்த ஒரு லிமிட்டாக இருக்கிறது. ஆனால் மாறாக, அந்தப் பெண் ணைக் கைது செய்து, அவரோடு சென்ற, ஹென்றி, பாலன், மற்றும் ஜோசப் போன்றவர்களைக் கைது செய்து, செங்கற் பட்டிலே இருக்கிற, காவல் துறையிலே உள்ள டி.எஸ்.பி. அதை விசாரிக்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மதுராந்தகத்திலே ஒரு டி.எஸ்.பி. இருக்கிறார். மதுராந்தகத் திலே ஒரு காவல் துறை இருக்கிறது. மதுராந்தகம் லிமிட்டிலே நடந்த அந்தக் கொலையை செங்கற்பட்டிலே விசாரிப்பதற்கு என்ன காரணம்? நெம்பர் 1, நெம்பர் 2, அந்தப் பெண்மணி தன்னுடைய கற்பை இழந்திருக்கிறாள். தான் ஏமாற்றப்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்து, தனக்கு வாழ்வு கொடு என்ப தற்காக போராட்டம் நடத்துகிறாள். அந்தப் பெண்ணை காவல் துறையில் அழைத்துவந்து, மொட்டை அடித்து, அவமானப்படுத்து கிறார்கள். இன்றைக்கு அந்தப் பெண் எங்கே இருக்கிறாள் என்பதும் தெரியவில்லை. செங்கற்பட்டைச் சேர்ந்த டி.எஸ்.பி. யும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் அதிலே அக்கறை காட்டுவதற்குக் காரணம் என்ன என்று விசாரித்தபோது, பரவ லாக பேசப்படுகிற உண்மை, ரவி என்கிற அந்த ஆட்டோ ஓட்டுகிற வாலிபனுடைய தாயார் அந்த டி.எஸ்.பி. இல்லத்திலே இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. அந்த டி.எஸ்.பி.-க்கும் அந்தப் பெண் மணிக்கும் என்ன உறவு? இப்படி காவல்துறையைச் சேர்ந்தவர் கள் வேண்டுமென்றே, தாழ்த்தப்பட்ட மக்களை அழிக்கவேண் டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறார் கள் என்பதற்குத்தான் இப்படிப்பட்ட சான்றுகள், இப்படிபட்ட நிகழ்ச்சிகள். இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்கவேண்டும்

என்று சொன்னால், இந்தக் காவல் துறையிலே புலன் ஆய்வு செய்ய வேண்டும் என்று சொன்னால், நீதி கிடைக்காது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்த வழக்குகளை சி.பி.ஐ. சி.ஐ.டி. மூலம் விசாரித்தால்தான் உண்மையான குற்றவாளிகள் கிடைப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். அந்த மல்லிகாவிற்கு நியாயம் கிடைக்க வேண்டும். அந்த மல்லிகா, கடந்த ஒரு மாத காலமாக எங்கேயிருக்கிறாள், உயிரோடு இருக்கிறாளா, இல்லையா என்ற தகவல்கள் தெரியாத நிலை இருக்கிறது. அவள் ஒரு தாழ்த்தப்பட்ட பெண். ஆகவே, அந்தப் பெண்மணி எங்கே இருக்கிறாள் என்பதை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

அது மட்டுமல்ல, செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டத்திலே ஊத்துக்கோட்டை பகுதியிலே பல கிராமங்களிலே இதர ஜாதி மக்கள் காலனி மக்கள் வாழ்கிற பகுதியிலே சுடுகாடு வைத்திருக்கிறார்கள். அந்தச் சுடுகாட்டிலே பிணங்கள் எரிக்கப்படுகின்றன. புதைக்கப்படுகின்றன. அந்தப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் புகார் கொடுத்து எங்கள் பகுதியிலே பிணங்கள் எரிக்கிறார்கள். இரவு நேரங்களிலே பிணங்களைப் புதைக்கிறார்கள் எங்களுக்குப் பயமாக இருக்கிறது. என்று சொல்லுகிற பொழுது காவல் துறை கண்காணிப்பாளர் சொல்லுகிறாராம் இத்தனை ஆண்டுகளாக நீங்கள் இங்கே தானே குடியிருந்து கொண்டிருக்கிறீர்கள். அப்போது இல்லாத பயம் இப்போது எப்படி வந்தது என்று ஏளனமாக பேசுகிற நிலையை இன்றைக்கு என்னால் காண முடிகிறது. செங்கை — எம். ஜி. ஆர். மாவட்டத்திலே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்வேறு கிராமங்களிலே இன்றைக்கு சுடுகாடு இல்லாத நிலை காணப்படுகிறது. வேலூர் அம்பேத்கார் மாவட்டத்திலே வாலாஜா தாலுக்காவிலே திருமலைச்சேரி என்ற கிராமத்திலே ஒரு காலனி இருக்கிறது. அந்தக் காலனியிலே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அமைச்சரைத் தொந்தரவு செய்யாமல் இருக்கவேண்டும்.

**திரு. போளூர் வரதன் : தாழ்த்தப்பட்டவர்கள் இறந்து விட்டால் இரவு நேரங்களிலே யாருக்கும் தெரியாமல் எடுத்துச் சென்று புறம்போக்கு நிலம் இருக்குமானால் அந்த இடத்திலே புதைக்கவேண்டும் என்ற ஒரு நிலை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசை நான்**



மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம் ஒவ்வொரு
காலனிக்கும் கண்டிப்பாக ஒரு சுடுகாடு வேண்டும் என்பதை
வலியுறுத்தி அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அது மட்டுமல்ல, நெல்லை மாவட்டத்திலே
ஆலங்குளம் என்ற பகுதியிலே கிராமத்தை ஒட்டி இருக்கிற
டீ கடைக்கு சென்று தாழ்த்தப்பட்டவர்கள் டீ வேண்டும்
என்று கேட்டால் வீட்டிற்கு சென்று ஒரு பாத்திரம்
எடுத்து வா என்று சொல்லுகிற நிலை இன்றைக்கும் இருந்து
கொண்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்திலே 1967 ஆம்
ஆண்டு அண்ணா நகர் என்ற பகுதியிலே வீட்டு மனைப்
பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கு குடியேறி
இருக்கிறார்கள். கிராம மக்களும் காலனி மக்களும் வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே இருக்கிற
மக்கள் இறந்துவிட்டால் எடுத்துச் சென்று புதைப்பதற்கு சுடு
காடு இல்லாத நிலை இன்றைக்கு இருக்கிறது. அங்கி
ருக்கிற முனிசிபல் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லுகிறபோது
நீங்கள் வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று புதையுங்கள்
என்று சொல்லுகிற ஒரு நிலை இன்றைக்கு இந்தப் பகுதி
யிலே இருந்து கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் நான்
சொல்வதற்குக் காரணங்கள் பல்வேறு கால கட்டங்களிலே
தமிழகத்திலே மட்டும் இல்லை இந்திய அரசாங்கமும் தாழ்த்
தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக பல்
வேறு திட்டங்களை மைய மாநில அரசுகள் கொண்டு வந்தாலும்
அந்தத் திட்டங்கள் முழுவதுமாக நிறைவேற்றப்படுகிறதா
என்று பார்த்தால் இல்லை என்ற ஒரு நிலை தான் இன்றைக்கு
இருக்கிறது. விளம்பரத்திற்காக வேண்டுமானால் நாம்
இத்தனை திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை
பிரச்சாரத்தின் மூலம் சொல்லிக் கொள்ளலாமே தவிர
இந்த மக்கள் அதை அனுபவித்து இருக்கிறார்களா என்று சொன்
னால் இல்லை என்ற நிலைதான் இன்றைக்கு உண்மையாக
இருக்கிறது. ஆகவே நான் முதலமைச்சர் அவர்களையும்
தமிழக அரசையும் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன். தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை
அரிசன மக்கள் வாழவேண்டும். ஏழ்மையிலேயே இன்றைக்கு
உழன்று கொண்டிருக்கிற அந்த மக்கள் உரிய மரியாதையைப்
பெறவேண்டும், என்ற உணர்விலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு டி. சி. ஆர். என்ற ஒரு சட்டத்தை நாம்
வைத்திருக்கிறோம். ஜாதி பேதங்களைத் தூண்டி விடுகிறவர்
மேல் டி. சி. ஆர். சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர
வேண்டும் என்று சொல்லுகிறோம். அதிலே இருக்கிற
காவல் துறையைச் சார்ந்தவர்கள் யார் என்பதை எண்ணிப்
பார்க்கவேண்டும். போலீஸ் இலாகாவிலே குற்றம் புரிந்து,
போலீஸ் இலாகாவிலே சஸ்பென்ட் செய்யப்பட்டு, பிறகு

எடுத்துக் கொண்டவர்கள். போலீஸ் இலாக்காவிற்கு தேவையற்றவர்கள் என்று ஒதுக்கப்படக்கூடிய காவல் துறையினர் மட்டும் டி. சி. ஆர். வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்று இன்றைக்கு தள்ளி ஒதுக்கிவைக்கிற நிலையை என்னாலே காண முடிகிறது. திறமை மிக்கவர்கள், உணர்வோடு செயல் படக்கூடியவர்கள் மக்கள் நலனிலே அக்கறை கொண்டவர்கள், அதோடு யார் ஜாதி துவேஷம் இல்லாதவர்களோ அவர்களை இந்த பணிக்கு அமர்த்த வேண்டும்.

நான்கு இடங்களிலேதான் இன்றைக்கு டி. சி. ஆர். வழக்குகளை விசாரிக்கின்ற நீதி மன்றங்கள் இருக்கின்றன. அந்த நீதி மன்றங்களிலே நீதிபதிகள் இருக்கிறார்களா என்று சொன்னால் இல்லை. நீதி மன்றம் இருக்கிறது. நீதிபதிகள் இல்லை. அதுபோல காவல் துறையிலே புறக்கணிக்கப் பட்டவர்களைக் கொண்டு டி. சி. ஆர். வழக்குகள் தொடரப் படும் என்று சொன்னால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எங்கே நீதி கிடைக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு தாட்கோ நிறுவனம் என்று சொல்லுகிறோம். அந்த தாட்கோவிலே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தாட்கோ என்று சொல்லுகிற பொழுது 3 லட்சம் ரூபாயை தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்தவிதமான ரெஜிஸ்டிரேஷனும் இல்லாமல் பில்டிங் போன்றவை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. ஆனால் தாட்கோ நிறுவனத்திலே இருக்கிற அதிகாரிகள் அப்படி எத்தனை வேலைகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தால், கணக்கு கேட்டால் இல்லை என்று சொல்லுகிறார்கள். 3 லட்சம் ரூபாய் என்று சொல்லுகிற போது டெண்டர் கோரி இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். டெண்டர் முறையிலே யார் இருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிற போது பணம் படைத்தவர்களும் அரசு அதிகாரிகளோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிற காண்டிராக்டர்களையும் தான் பார்க்க முடிகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்திலே முன்னேற வேண்டும் என்று சொல்லி, அந்தத் திட்டத்தை இன்றைக்கு அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்திலே இன்றைக்கு முழுமையாக தாழ்த்தப்பட்டவர்கள் பலன் பெற்றிருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை. அது மட்டுமல்லாமல்** தாட்கோ நிறுவனத்திலே கடன் பெற வேண்டுமென்று சொன்னாலும் சரி, வேலை கிடைக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, அங்கே இருக்கிற பியூனிலேயிருந்து பெரிய அதிகாரிகள் வரை, பேனாவைத் திறக்க வேண்டும் என்று

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.



சொன்னால், போகின்ற ஏழைகளுடைய பையிலோ அல்லது கையிலோ இருக்கிற பொருட்கள் அந்த மேஜையின் மீது இறங்கினால் ஒழிய அந்தப் பேனாக்கள் திறக்கப்படுவதில்லை. என்ற உண்மைகள் மக்கள் மத்தியிலே பரவலாக பேசப் படுகிறது. தாட்கோ நிறுவனத்திலே..

முற்பகல்—10.40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருந்தும், என்னிடம் ஏன் தெரிவிக்க வில்லை என்பதைக் கேட்டுக் கொள்வதோடு, இதுபோன்ற தகவல்கள் என் கவனத்திற்கு வரவில்லை. இதுபோன்று நடக்கவில்லை இந்த ஆட்சியிலே என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. போளூர் வரதன் : இந்த ஆட்சியைப் பற்றி குறை கூறவேண்டும் என்ற எண்ணத்திலே நான் சொல்லவில்லை. இந்த அரசிலே இது நடந்தது என்றும் சொல்லவில்லை. இந்த அரசு ஆட்சிக்கு வந்து 9 மாதங்கள் ஆகின்றன என்பது எனக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் தெரியும். கடந்த கால ஆட்சி இருந்த போது, ஏற்பட்ட குற்றங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசு வந்த பின்னாலே நிதிநிலை அறிக்கையை இந்தக் கூட்டத்திலேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரி இருக்கிறார்கள். அனுமதி பெற இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே இந்தத் தவறுகள் நடக்குமேயானால், நான் சுட்டிக்காட்டவும் தயார். கடந்த கால ஆட்சியிலே நடந்த குற்றங்களைத்தான் நான் இன்றைக்கு சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் முன்பே, இப்படி கடந்த ஆட்சியிலே நடந்தது என்று சொல்லியிருந்தால், அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை, தொடர்ந்து பேசுங்கள்.

திரு. போளூர் வரதன் : ஆகவே, ** காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. வங்கியிலே அவர்கள் சப்சிடி என்ற பெயராலே. .

திரு. க. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே குறைகள் என்று சொல்லி வந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு என்று ஆரம்பித்து மீண்டும் குறைகளைச் சொன்னால், இந்த ஆட்சியைக் குறிக்குமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அதை அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனம் மூலமாக வழங்கப்படுகிற கடன்கள், (குறுக்கீடு) அரசைப் பற்றி குற்றம் சாட்டுவதாக நாம் கருதி விடக்கூடாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை நீங்கள் விளக்க வேண்டாம். உறுப்பினர் தொடர்ந்து பேசுவார்கள். இது விவாதம் அல்ல. (குறுக்கீடு) விளக்கம் வேண்டாம். உங்களுடைய கருத்தை பிறகு சொல்லலாம். உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும். இடையிலே நீங்கள் பேசுவது வேண்டாம். தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.** என்று சொல்வது அவ்வளவு சாலச் சிறந்ததாக இருக்காது.. அதனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அதைக் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிட்டால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ** என்று சொன்ன சொற்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருந்தால், அதை பேரவைத் தலைவரிடத்திலே காண்பித்து, அனுமதி பெற்று அதைப் பற்றிப் பேசலாம். தொடர்ந்து பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. போளூர் வரதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோ என்பது ஒரு நிறுவனம் ** தாட்கோ நிறுவனம் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, தாட்கோ என்று சொல்ல முடியாது .

அது மட்டுமல்லாமல், நம்முடைய அரசு கொறடா அவர்கள் . . . . . .

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோவைக் கலைத்து விடலாம் என்று அவர்கள் விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. போளூர் வரதன் : அதைப்பற்றி என்னுடைய பேச்சின் பிற்பகுதியிலே குறிப்பிடுகிறேன். மாண்புமிகு அரசு கொறடா அவர்கள் ஒரு ஐயப்பாட்டினை இங்கே உருவாக்கினார்கள், ஏற்படுத்தினார்கள். தொடர்ந்து என்று சொல்கிறபோது, இந்த அரசா என்று சொன்னார்கள். நான் தொடர்ந்து என்று சொல்வது, என்னுடைய பேச்சினுடைய தொடக்கத்தைச சொல்கிறேனே தவிர, அரசைக் குறிப்பிடவில்லை .

கடந்த கால ஆட்சியிலே இருக்கிற அதிகாரிகள் இப்போதும் தொடர்ந்து அங்கே பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தான் தொடர்ந்து என்று நான் சொன்னேன். அந்த அதிகாரிகளை வைத்துக் கொண்டு குற்றங்களைக் களைந்து விடுவோமா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. திறமையான, நேர்மையான அதிகாரிகள் அந்த இடத்திலே நியமிக்கப்பட்டால், அந்த நிறுவனம் எதற்காகத் துவக்கப்பட்டதோ, எந்த நல்ல காரியங்களுக்காக உருவாக்கப்பட்டதோ எந்தச் சாதாரண மக்கள் முன்னுக்கு வரவேண்டும்என்று இந்த அரசாங்கம் விரும்பியதோ, அவைகளையெல்லாம் செம்மையாக செயல்படுத்துவதற்கு திறமைமிக்க அதிகாரிகளை அங்கே நியமிக்க வேண்டும். ஊழலற்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டும். பணி செய்கிறோம் என்கிற பணி உணர்வோடு இருக்கிற அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு என்று நான் குறிப்பிட்டேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 17 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. போளூர் வரதன் : நான் தாழ்த்தப்பட்ட பேரவையினுடைய தலைவராக தமிழகத்திலே இருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மானியத்தினுடைய கோரிக்கையின்போது, மக்களுடைய

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு நீங்கள் வாய்ப்பு தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

17 நிமிடங்களிலே குறுக்கீடு 5 நிமிடங்கள் ஆகியிருக்கிறது என்பது உங்களுக்கும் தெரியும், 12 நிமிடங்களில் நான் பேசியிருக்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் வரவழைத்துக் கொள்ளும் குறுக்கீடுகள் உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திலே தான் அடங்கும். உங்களைத் தவிர இன்னும் 10 தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரேடியாக நீங்களே நேரத்தை எடுத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டாம். என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. இன்றைக்கு தமிழ் நாட்டில் க்ரூப் ஹவுஸ் என்று கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே தாட்கோ நிறுவனம் மூலம் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் இன்றைக்கு சீரழிந்து, பாழடைந்து கிடக்கின்ற நிலை இருக்கிறது. அது இன்றைக்கு யூனியன் வீடுகளாக மாற்றப்பட்ட பின்னாலே தரம் இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதே நேரத்திலே வேறொன்றையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே சேர்க்கின்ற கலவை பி. டபுள்யூ. டி. யினுடைய நார்ம்ஸ்படி 1:6 என்று வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அரசு அதிகாரிகள் 1:8 என்று அதை மாற்றியிருக்கிறார்கள். கான்ட்ராக்டர் 1:10 என்று இன்றைக்கு மாற்றி அந்த வீடுகளைக் கட்டி கொடுக்கின்றபோது அந்த வீடு மணலாகத்தான் இருக்கிறதே தவிர சிமெண்ட்டினுடைய கலவை தரம் இல்லாமல் இருக்கிறது. அரசு நார்ம்ஸ்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுடுகாடு மயானப் பாதைகள் என்று வருகின்ற போது தனி தாசில்தாருடைய கன்ட்ரோலில் இன்றைக்கு அது வைக்கப்பட்டு இருக்கிறது. அப்படி வைப்பதன் மூலமாக அந்த நிலை இன்றைக்குத் தவறான நிலையாக இருக்கிறது. அதையும் யூனியன் மூலமாகப் போட்டுத் தருவதற்கு நீங்கள் வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும். கிராமப்புறங்களில் இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களுடைய வில்லேஜ் சாலைகள் இன்றைக்கு பழுது பட்டிருக்கிறது. அதையும் யூனியன் சாலைகளாக மாற்றியமைப்பதற்கு நீங்கள் நிதிகளை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக



ஒன்றே ஒன்று. இன்றைக்கு தமிழகத்திலே கல்வி நிறுவனங்களைப் பார்க்கின்றபோது வெல்ஃபேர் ஸ்கூல் என்று வைத்திருக்கிறோம். அங்கே சரியானபடி முறைகள் இல்லை. ஆசிரியர்கள் இல்லை. அங்கே கல்வியினுடைய தரம் குறைந்து காணப்படுகிறது. அதை மாற்றியமைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். யூனிவர்சிட்டியிலே சிண்டிகேட், செனேட் என்று உறுப்பினர்கள் பதவிகள் வருகிறது. அதிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று 18 சதவீதம் என்பது நிரப்பப்படுவதில்லை. தனியார் துறையிலே இருக்கின்ற நிறுவனங்களிலே நாலாந்தர வேலைக்கு மட்டும் தான் அந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு தருகிறார்கள். எல்லா நிறுவனங்களிலும் மத்திய அரசு ஒரு அறிவிப்பை ஏற்கனவே கொடுத்து அதை நிறைவேற்றியிருக்கிறது. எல்லா துறையிலேயும் 18 சதவீதம் வேலை வாய்ப்புகள் இருக்க வேண்டும். என்று சொல்லி அதை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் கொடுத்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப்போல தமிழக அரசும் ஒவ்வொரு துறை வாரியாக எத்தனை சதவீதங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது, எந்தந்த துறையிலே திரப்பப்பட்டிருக்கிறது என்று கணக்கிட்டு நிரப்பப்படாத துறைகளிலே அதை நிரப்புவதற்கு வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே பல்வேறு பகுதிகளிலே இன்றைக்கு குடி நீர்ப் பிரச்சினைகள் இருக்கின்றன. சாலை வசதிகள் மோசமாக இருக்கின்றன. என்னுடைய பகுதியிலே பல பள்ளிக்கூடங்கள் வெல்ஃபேர் நலத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற பள்ளிகளாக இருக்கின்றன. கடந்த ஆண்டிலிருந்து இதுவரை ஒவ்வொரு ஆண்டும் எலிமெண்டரி ஸ்கூல் உயர்நிலைப்பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாகவும் மாற்றப்படுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டிலிருந்து அந்த நிலை உயர்த்தப்பட்டிருக்கிறதா மாற்றப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த ஸ்காலர்ஷிப்பினுடைய அளவு குறைவாக இருக்கிறது. சென்னையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு விடுதியிலே வழங்கப்படுகின்ற உணவு சரியில்லாத நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு தங்கும் வசதியும் சரியில்லை. தண்ணீர் வசதி இல்லை. சானிடரி பெஸலிட்டீஸ் இல்லை. எம். ஜி. ஆர். போன்ற ஒரு பெரிய விடுதியிலாவது ஃபேன், லைட்போன்றவைகளை முழுமையாக நிறைவேற்றி கல்லூரி மாணவர்கள் தங்கிக்கொள்கின்ற கல்லூரி விடுதியைப் போன்று இந்த விடுதியையும் மாற்றித் தர வேண்டும். எல்லா தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற விடுதிகளிலே டி. வி. போன்ற வசதிகளை உருவாக்கித் தர வேண்டுமென்று தமிழக அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

[1992 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் பெ. வீரபாண்டியன்.

*டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஆதிதிரா விடருடைய சிறப்புத் தன்மையை இம்மாமன்றத்தில் ஒரு மேற்கோளாகக் காட்டி என்னுடைய உரையைத் தொடங் குகின்றேன். வசிஷ்ட முனிவருடைய மனைவியாக இருந்தவர் அருந்ததி. கல்யாணம் ஆன பிறகு மணப் பெண்ணைப் பார்த்து அம்மி மிதித்து அருந்ததி பார் என்று சொல்வார் கள். ''கல் போல் இருந்துவிடாதே நீ. அகலிகையாக இருந்து விடாதே. ஆனால் கற்பில் சிறந்த அருந்ததியாக இரு'' என்றுதான் மணப் பெண்ணை பார்த்து சொல்வார்கள். அந்த அருந்ததி அவ்வாறு கற்பில் மேம்பட்டவள். இளங்கோ அடிகள் கூட தன்னுடைய பாட்டுடைத் தலைவி கண்ணகி யின் கற்பைச் சொல்லும்போது அருந்ததியைத் தான் மேற் கோளாகக் காட்டுகின்றார்.

''தீதிலா வடமீனின் திறன் இவள் திறன் என்றும்
மாதரார் தொழுதேற்று வழங்கிய பெருங்குணத்து
காதலால் பெயருமன்னும் கண்ணகி என்பாள் மன்னோ''

அருந்ததி என்பவள் சிறந்த கற்புடையவள். என்னுடைய பாட்டுடைத் தலைவி கண்ணகியைவிட அவள் கற்புடைய வளா என்று தான் இளங்கோஅடிகள் கண்ணகியினுடைய கற்பினைப் பற்றிச் சொல்கிறார்.

அந்த அருந்ததி வானத்தில் மின்னிக் கொண்டிருக்கும். நட்சத்திரமாக இருக்கிறாள். ''அந்த அருந் ததி ஒரு ஆதிதிராவிடப் பெண்''. எனவே இந்த ஆதி திராவிட வம்சத்தில் வந்த அருந்ததியை இன்று அளவும் பெண்கள் தங்களுடைய தெய்வமாக முன்னோடியாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

இந்த உலகத்திற்கு கீதை வந்ததற்கு காரணமே ஒரு ஆதிதிராவிடப் பெண் தான். எவ்வாறு என்றால் யாதவ குலத்தில் பிறந்தவன் சூரன். சூரனுடைய மனைவி நாக குல தலைவனுடைய மகள் அரியகா. அரியகாவுக்கும் சூர னுக்கும் பிறந்தவர் வசுதேவர். வசுதேவர் தேவகியை மணந்து இருவருக்கும் பிறந்தவன் கண்ணன். எனவே, ''கண் ணனுடைய பாட்டி அரியகா ஒரு தாழ்த்தப்பட்ட பெண்''



1992 ஏப்ரல் 22] [டாக்டர் பெ. வீரபாண்டியன்]

இந்த உலகத்திற்கு கீதை வருவதற்குக் காரணமே ஒரு தாழ்த் தப்பட்ட பெண் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அது மட்டுமல்ல, கேரள மாநிலம் காலடியில் பிறந்து வளர்ந்தவர் ஆதி சங்கரர். ஆதி சங்கரருடைய குரு, அதே கிராமத்தில் காலடியில் பிறந்து வளர்ந்தவர் விசுவநாதன். அந்த ''விசுவநாதன் ஒரு ஆதிதிராவிடர்'' எனவே, ஆதி சங்கரர் உருவாவதற்கு காரணமாக இருந்ததே ஒரு ஆதி திராவிடர்தான்.

அதுமட்டுமல்ல டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் ஆதி திராவிட வம்சத்தில் பிறந்து ஆதி திராவிடர்கள் பொய் உரைக்கக்கூடாது. உண்மையையே பேச வேண்டும் என்ற காரணத்தினால் தான் ''சத்தியமேவ ஜெயதே'' என்று கூறியுள்ளார். அப்படி என்றால் ''வாய்மையே வெல்லும்'' என்பது. இப்போது 'வாய்மையே வெல்லும்' என்பதைத்தான் இன்றளவும் நம்முடைய தமிழக அரசு எம்ப்ளத்தில் ( Emblem ) பொறித்துள்ளோம். ஆகவே, இவ்வாறு சிறப்பு குணங்கள் கொண்ட ஆதி திராவிட மக்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை விட்டால் வேறு வழி கிடையாது என்பதால் தான் டாக்டர் புரட்சித் தலைவியை சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ஆதி திராவிட மக்களை தன் பக்கம் வயப்படுத்த வேண்டும் என்று தி. மு. க. எவ்வளவோ முயற்சி செய்தது. ஆனால் முடியவில்லை. கடைசியாக பாட்டாளி மக்கள் கட்சி ஆதி திராவிடர்களுக்கு முதலமைச்சர் பதவி கொடுப்போம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் செங்கம் தொகுதியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய வேட்பாளராக நின்றபோது என்னைத் தோற்கடிக்க வேண்டி யானையை நிற்க வைத்தார் கள். ''தாருகா வன ரிஷிகள் என்ன செய்தார்களாம் என்றால் சிவனை அழிக்க ஓம குண்டம் வளர்த்தார்களாம். ஓம குண்டத்தை வளர்த்து மானை அனுப்பினார்கள். அதன் பின்னர், பாம்பை அனுப்பி வைக்கிறார்கள். இதையெல்லாம பிடித்து சிவபெருமான் அணிகலன்களாக அணிந்து கொண்டார்கள். கடைசியாக யானையை அனுப்பி வைக்கி றார்கள். ஆனால் சிவபெருமான் அந்த யானையின் தோலை உரித்து ஆடையாக நெய்து கொள்கிறார். அதைப்போல செங்கம் தொகுதியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் நிறுத்தப்பட்ட இந்த வேட்பாளரை தோற்கடிக்க அனுப்பிவைத்த யானையை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் யானையின் தோலை உரித்து ஆடையாக அணிந்து கொண்டார்கள். எனவே, பாட்டாளி மக்கள் கட்சி இல்லாத

ஒரு ஊருக்கு எங்களுக்கு வழியைக் காட்டுகிறது.'' எனவே, இந்தக் கால கட்டத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆதி திராவிட மக்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அன்பைத் தவிர வேறு வழி இல்லை. அவர்களால் மட்டுமே வாழ வைக்க முடியும்.

ஆதி திராவிட மக்கள், பழங்குடியின மக்கள் இவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களை வாழவைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதி திராவிட மக்களை கல்வியில் முன்னேற்ற வேண்டும், அதுதான் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதால்தான் கல்விக்கு முன்னுரிமை தந்தும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றும், இலவச வீடு கட்டித் தர வேண்டும் என்றும், விவசாயத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றும் பல திட்டங்களை வகுத்து இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களில் படித்தவர்கள் 29.6 விழுக்காடு மட்டுமே. எனவே, கூடுதல் நிதி உதவி 66 கோடி ரூபாயை வழங்கியிருப்பதை கண்டு ஆதி திராவிட மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள்.

அதைப்போல 10- வது படிக்கும் மாணவிகளுக்கு இலவசமாக இரண்டு ஜோடி சீருடை; 8 வது படிக்கும் மாணவர்களுக்கு சீருடைகள், அதைப்போல படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க அதிக பட்சம் 5 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கியும், 15 ஆயிரம் ரூபாய் சப்சிடி என்றும் 85 ஆயிரம் ரூபாய் மார்ஜின் மனி என்றும் வழங்கி இருப்பது எங்களுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது.

இன்னும் ஒன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். வீடுகளை தாட்கோ மூலமே கட்டித் தந்தால் மிக நன்றாக இருக்கும். காரணம் என்ன என்றால் இந்தத் தொகுப்பு வீடுகளை எந்த காண்டிராக்டர் வேண்டுமானாலும் கட்டலாம். அப்படி கட்டும்போது வீடுகள் இடிந்து விட்டாலோ அல்லது பழுதடைந்து விட்டாலோ அந்த காண்ட்ராக்டர்களோ, மற்றவர்களோ, பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் தாட்கோ மூலம் கட்டிக் கொடுத்தால் தாட்கோ நிறுவனம் அந்த வீடுகளுக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும். எனவே, தரமான வீடுகளை ஆதி திராவிட மக்களுக்கு கட்டிக் கொடுக்க முடியும். தாட்கோ மூலமாக தயவு செய்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க மறு பரிசீலனை செய்யவேண்டும்.

விவசாயத்தில் முன்னேறவேண்டும் என்று உழவு மாடுகள் கொடுக்கிறார்கள். 1,500 ரூபாய் அதற்கு மானியமாக கொடுக்கிறார்கள். அதே போல கறவை மாடுகள் வாங்கி



பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும், என்பதற்கு 3,200 ரூபாய் அளித்து இருப்பது எங்களுக்கு எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி. நேரம் அதிகமாகிவிட்டதால், இறுதியாக ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன். ஆகமக்கல்லூரி என்று ஏற்படுத்தி அந்த ஆகமக் கல்லூரியிலே ஆதி திராவிட மக்களுக்கு 18 விழுக்காடு கொடுக்கவேண்டுமென்பதை, இந்த இந்திய நாட்டில் யாருமே செய்யாத ஒரு சாதனையை, ஒரு புரட்சியை, ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்துவது என்பது யாராலும் இயலாது. ஆதி திராவிட மக்களும் ஆலயங்களில் புக முடியாத நிலையில் இருப்பதை மாற்றி, அவர்களும் மந்திரங்கள் ஓதவேண்டுமென்பதால், ''பவித்ராணாய சாதுனாம் விளாசாயசதுஷ்கிருதாம் தர்மஸ்ம்ஸி ஸ்தாபனார்தாய சம்பவாமி யுகே யுகே'' என்ற கீதா உபதேசத்தையும் ஆதி திராவிடர்கள் ஓதி அதைக் காதில் கேட்டு மகிழ வேண்டுமென்ற நோக்கந்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு.

முற்பகல் 10.55

அதுமட்டுமல்ல, ''ஓம் பூர்பூவஸ தத்ஸவ விதுர்வரேண்யம் பர்கோதேவஹீய தீமய தியோயோனஸ் ப்ரசோத்யாத்'' என்ற காயத்திரி மந்திரத்தையும் ஆதிதிராவிட மக்கள் ஓதி இந்த நாட்டில் அவர்கள் சரிசமமாக வாழ வேண்டுமென்பது தான் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய நோக்கமாகும், எனக் கூறி வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. செ. கு. தமிழரசன்.

**திரு. செ. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைப் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரத் பட்டுள்ள ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின் பேரில் இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் பேசுகிற வாய்ப்பளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு ஆதிதிராவிட மக்களுடைய மக்கள் தொகை ஒரு கோடியே 30 இலட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆக, இந்த மக்களின் தொகை தமிழ்நாட்டு மக்கள் தொகையிலே ஏறக்குறைய நான்கில் ஒரு பங்காக இருக்கிறது. இந்த மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுக்காலமாக அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, சுரண்டப் பட்டு, ஒதுக்கப்பட்டு, தீண்டத்தகாதவர்களாகத் தள்ளப் பட்டு, வஞ்சிக்கப்பட்டு, நாட்டினுடைய ஒதுக்குபுறங்களிலே இன்னமும்கூட 100-க்கு 90 விழுக்காடு மக்கள் வாழ்ந்து

கொண்டிருக்கிற நிலையிலே இருக்கிறார்கள். இவர்களுக்கு இன்றைக்கு இருக்கிற பிரச்சினைகளை நாம் கொடுக்கப்பட்டுள்ள நேரத்திலே சொல்லி முடித்துக் கொள்ள முடியாது. அப்படி சொல்லிட முடியாத அளவிற்கு எண்ணற்ற பிரச்சினைகள், எண்ணற்ற கொடுமைகள், ஏராளமான கோரிக்கைகள், இப்படி மலிந்து கிடக்கின்றன. இன்றைக்கு இந்த மக்களெல்லாம் ஒரு பெரிய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்றால், அது தமிழகத்தினுடைய முதலமைச்சர் இன்றைக்கு சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தலைவ ராக விளங்கிக் கொண்டிருக்கிறாரே, எந்தச் சாதியும் சார்ந்தவரல்ல என்கிற அளவிற்கு சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தலைவராக இன்றைக்கு இருந்துகொண்டு இருக்கிறாரே அந்த முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் பேரிலே அவர்களுக்கு இருக்கிற ஒப்பற்ற அந்த நம்பிக்கைதான், இவர்களுடைய விடிவுக்கு வழியாக இருக்க முடியும். அதிலும் ஒரு காலத்திலே நீதிக் கட்சி என்றாலே அது தாழ்த்தபட்டவர்கள் கட்சி என்ற நிலைமை இருந்தது. அதற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பொழுது அந்தக் கட்சியும் கிராமப்புறங்களிலே சேரிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. இன்றைக்குக்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கோட்டைகளாக இருக்கிற பகுதி என்றால் அது ஒதுக்கப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியாகத்தான் இருக்கும். காரணம் ஒப்புயர்வற்ற அந்த நம்பிக்கை. அந்த பேரன்பு இந்தத் தலைமையின் பேரிலே இருப்பதினாலேதான். எனவேதான், நான் கிடைக்கின்ற வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தி கொண்டு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய பார்வைக்கு, இந்தப் பிரச்சினைகளை நான் எடுத்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். ஏனென்றால் அவர்களால் மட்டும்தான் இவர்களுக்கு விடிவு ஏற்பட முடியும் என்கிற நம்பிக்கை தான். இந்த நிலையிலே ஒரு கோடியே 30 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கிய இந்தச் சமுதாயத்திற்கு நாம் இந்த நிதி ஒதுக்கீட்டிலே ஒதுக்கிச் இருக்கிற தொகை 114 கோடி. இந்த 114 கோடியிலே கூட 66 கோடி கல்விக்கு, அதிலும் குறிப்பாக, ஆதி திராவிட நல பள்ளிகளை, விடுதிகளை—ஏறக்குறைய 1,222 பள்ளிகள் இருக்கின்றன. 902 விடுதிகள் இருக்கின்றன— இந்த விடுதிகளை நிர்வகிப்பதற்கு இந்த 66 கோடி செலவுசெய்யப்படுகிறது. அதற்குப்பிறகு, ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் நிர்வாகச் செலவுக்கு ஆகிவிடுகிறது. எனவே, மீதி எவ்வளவு என்றால் 47 கோடி ரூபாய்தான் நலப் பணிகளுக்குப் போகிறது. 47 கோடி ரூபாய் என்றால் ஏறக்குறைய ஒரு ஆளுக்கு 46 ரூபாய்கூடப்



போய்ச் சேராது. ஆக, இந்த நிதி ஒதுக்கீட்டிலே கொடுக்கப்படுகிற தொகை போதுமானது அல்ல என்கிற ஒரு குறையை மட்டும் நான் சுட்டிக்காட்டி, நினைவு படுத்த விரும்புகிறேன். இன்னும் அதிகமான பணம் ஒதுக்கப்பட வேண்டும்.

முற்பகல் 11-00

இந்த 1,222 பள்ளிகளையும், 902 விடுதிகளையும் நம்முடைய ஆதிதிராவிடர் நல அமைச்சரகம் நிர்வகிக் கிறது ; நம்முடைய துறை அதிகாரிகள் நிர்வகிக்கிறார் கள். இதை நிர்வகிப்பதற்கே இவர்களுக்கு முழு நேரமும் செலவு ஆகி விடுகிறது. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இருக்கிறார். அவர் சுற்றிச் சுற்றி விடுதிகளைப் பார்ப்பதற்கு, வாடகை போடுவதற்கு, பள்ளி ஆசிரியர் களை நியமிப்பதற்கு, மாறுதல் செய்வதற்கு, இதற்கே அவருக்கு நேரம் போதுமானதாக இல்லை. இந்த நிலை யிலே எப்படி அவர் நலத் திட்டங்களில் அக்கறை எடுத்துக்கொண்டு ஆற்ற முடியும்? எனவே, இதற் காகவே ஒரு தனி டைரக்டரேட், இந்தக் கல்வித் துறையை நிர்வகிப்பதற்கு கல்வித் துறையிலே ஒரு தனி நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும். சாதாரணமாக இதை விடக் குறைந்த பள்ளிகள் இருக்கின்ற, நம்முடைய கல்வித் துறையிலே டைரக்டரேட் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் இருக்கிறது ; எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒரு டைரக்ட ரேட் இருக்கிறது ; முறைசாராத கல்விக்கு ஒரு டைரக்ட ரேட் இருக்கிறது. எனவே, இதற்கு ஒரு டைரக்டரை நியமித்தால் என்ன? இதை நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த துறையை ஒரு தனி துறையாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பலமுறை நான் இந்த மன்றத்திலேகூடச் சொல்லியிருக்கிறேன். பல கோரிக்கை களை நாம் வைத்திருக்கிறோம். 1979-லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் துறையை வருவாய்த் துறையிலேயிருந்து தனியாக ஆதிதிராவிடர் நலத் துறையைப் பிரித்தார்கள். 1979-லே உத்தர விடப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அது முழுமை யாக, தன்னாட்சி நிரம்பிய ஒரு தனித் துறையாகச் செயல் படவில்லை. 1989-இலே ஒரு தனிச் செயலாளரைக்கூட நாம் நியமித்திருக்கிறோம். ஆக, தனிச் செயலாளராக வந்தாலும்கூட தனித் துறையாக ஆக்கவில்லை. மாவட்ட அளவிலே மாவட்ட அலுவலர்கள் இருக்கிறார்களே, அவர் களெல்லாம் ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கையெழுத்துப் போடுகிற

பொழுதே, ''மாவட்ட ஆட்சித் தலைவருக்காக'' என்று தான் கையெழுத்துப் போடுகிற நிலைமை. எந்த உத்தர விட்டாலும், எந்த ஆணை இருந்தாலும் அப்படி இருக் கிறது. எனவே, தன்னாட்சி நிரம்பிய ஒரு தனித் துறை யாக இதை முழுமையாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

தனித் தாசில்தாரை நியமிப்பார்கள், மூன்று தாலுக்காக்களுக்கு ஒருவர் இருப்பார். ஒரு ஜீப் கூட கிடை யாது. அவர்கள் எப்படிப்போய் லேண்ட் அக்குசேஷன் செய்ய முடியும்? அவர் கிராமங்களுக்குப் போய் அந்த நிலங்களைப் பார்வையிட வேண்டுமானால் அவருக்கு ஒரு ஜீப்பாவது இருக்க வேண்டாமா? ஒரு ஜீப்கூட இல்லை என்றால், அங்கேயே, நம்முடைய சகோதரர்களெல்லாம் சொன்னார்களே சில குறைகளை, அப்படிப்பட்ட குறை கள் தோன்றி விடுகின்றன. கிராமத்திலே இருப்பவர் வீடு வேண்டுமென்று வந்தால், ''நீ போய் ஒரு டாக்சி வைத்துக் கொண்டு வா, நான் வருகிறேன்'' என்று அங்கே பிரச்சினை தொடங்கி விடுகிறது. எனவே, அவர் களுக்கு ஒரு ஜீப் இருந்தால் அவர்கள் போவதற்கு வசதியாக இருக்கும். இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு இருக் கிறது. ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபிசிலே இருக்கிற என்ஜினியர், ஓவர்சியர் இருக்கிறார்களே இந்தத் தொகைக்கு மேலே அவர்களால் ஒரு எஸ்டிமேட்டே போட முடியாது. அதற்குப் பிறகு பி.டபிள்யூ.டி.-க்குப் போக வேண்டும். பிறகு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? எனவே, முழுப் பிரச்சினை களுக்கும் விடிவு காண வேண்டுமானால் இது தனித் துறையாக, தன்னாட்சி நிறைந்த துறையாக மாற்றப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை நான் மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன்.

எகப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டினேன். உண்ண உணவு இல்லை, உடுக்க உடை இல்லை, இருக்க இடம் இல்லை, இதெல்லாம்கூடப் பரவாயில்லை. இருபதாம் நூற்றாண் டிலே, வளர்ந்து வருகிற ஒரு ஜனநாயக நாட்டிலே இதை யெல்லாம்கூடச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால், செத்துப் போனால் புதைப்பதற்கு இன்னமும்கூட சுடுகாடு இல்லையென்றால், இந்தக் கொடுமையை இந்த வேதனையை இந்த மாமன்றத்திலே சொல்வதைத் தவிர வேறு எங்கே போய்ச் சொல்வது? செத்துப் போகிறவனைப் புதைப்பதற்கு சுடுகாடு கூட இன்னமும் பல



கிராமங்களிலே இல்லை. இங்கே கூட ஒரு பிரச்சினையை இந்த மாமன்றத்திலே, கும்பகோணத்திற்குப் பக்கத்திலே இருக்கிற குடிதாங்கி என்கிற ஒரு கிராமத்திலே அழகர் என்கிற ஒருவர் இறந்துவிட்டார். அந்தப் பிணத்தை சுடுகாட்டுக்குக் கொண்டு போக முடியவில்லை. போகிற வழியிலே இருக்கிற மேட்டுக்குடி சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் சிலர், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் எதிர்த்தார்கள். பல பிணங்கள் அந்தக் கிராமத் திலே புழக்கடையிலே புதைக்கப்பட்டன என்கிற பிரச்சினையை, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே இந்த மன்றத்திலே நாம் பேசினோம். முதலமைச்சரே ஒரு தனிக் கவனம் எடுத்து, அதற்குப் பின்னாலே அங்கே அக்கறை எடுத்து இன்றைக்கு உத்தரவு போட்ட பின்னால் அதுகூட, கிராமத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டவர் களைக் கைது செய்துவிட்டு அந்த பாதையிலே ஒரு பிணத்தை எடுத்துப் போக வேண்டிய ஒரு நிலைமை. 100 பேர்களைக் கைது செய்து அதற்குப் பின்னாலேதான் இப்பொழுதுள்ள கடைசியிலே உள்ள நிலைமை. கடைசி யாக முதலமைச்சரவர்களுடைய பார்வைக்கு வந்த பின்னால் 100 பேரைக் கைது செய்துவிட்டுப் பிணத்தைக் கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் இப்படி 100 பேரைக் கைது செய்து, முதலமைச்சரின் பார்வைக்கு வந்து பிணத்தைப் புதைக்கிற நிலைமை இந்த நாட்டிலே இருக்கு மானால் நாம் என்ன சட்டப் பாதுகாப்பையும், உரிமையையும் பெற முடியும் என்று எனக்கு விளங்க வில்லை. இந்த மிகப் பெரிய கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கிறபோது, அந்தச் சமுதாயத்தின் கட்சித் தலைவர் ஒருவர், மறுநாள் அறிக்கை விடுகிறார். விவசாயத் துறையிலே தாழ்த்தப்பட்ட ஒரு உயர் அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார்; மிகப் பெரிய கொடுமை நடந் திருக்கிறது இந்தச் சமுதாயத்திற்கு என்று. நான் பெயரையே சொல்ல விரும்புகிறேன். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அறிக்கை விடுகிறார். விவசாயத் துறையிலே இருந்த உயர் அதிகாரியை மாற்றிவிட்டார்கள் என்று. எவ்வளவு பெரிய கொடுமை இந்தச் சமுதாயத்திற்கு நடந்திருக்கிறது; எனவே, இதற்காக என்னுடைய கட்சி போராடுமென்று சொல்கிறார். ஒரு சமுதாயம் எந்தக் கட்சியை அவர் வைத்துக் கொண்டிருக்கிறாரோ, அந்தக் கட்சியின் அடித் தளமாக இருந்து கொண்டிருக்கிற சமுதாயம்—அந்தப் பகுதியிலே ஒரு பிணத்தைக் கொண்டு போவதற்கு தடை விதித்திருக்கிறது.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்பு
மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த தாழ்த்தப்
பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த அதிகாரிக்கு நல்லது
செய்வதாக எந்த எண்ணமும் இல்லாமல், அவரைக்
கெடுக்கிற நோக்கத்திலே, அவருக்கு அரசியல் சாயம்
பூசப்பட்டு, அந்த அறிக்கை பாட்டாளி மக்கள் கட்சியி
னுடைய தலைவரால் விடப்பட்டிருக்கிறது என்பதை
இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. கு. தமிழரசன் :** அறிக்கை விடுகிறார்.
நாடே பிரச்சினையில் இருந்து கொண்டிருக்கிறபோது,
ஒரு சமுதாயத்திற்கு, பிணம் கொண்டு போவதற்குக்கூட
உரிமை இல்லாமல் மறுக்கப்படுகிறபோது, அவர் இத்
தகைய அறிக்கையை விடுகிறார். பேரறிஞர் அம்பேத்கர்
அவர்கள்—மதுரையிலே ஒரு குளத்திலே தண்ணீர் எடுப்ப
தற்கு மறுத்தார்கள்; அவராகவே, போய் அங்கே தலைமை
ஏற்று ஒரு போராட்டத்தை நடத்தி, — அந்த
குளத்திலே தண்ணீர் எடுப்பதற்கு வழிவகுத்தார்.
தந்தை பெரியார், அவர்கள்—வைக்கத்திலே கோயிலிலே ஒடுக்கப்
பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைவதற்கு மறுத்தார்
கள்; அவரே வைக்கத்திற்குப் போய், கோயிலிலே
நுழையும் போராட்டத்தை நடத்தி உள்ளே போனார்.

யாரோ ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஐ.ஏ.எஸ். கூட
இல்லை; ஐ.ஏ.எஸ். தகுதியிலே இருக்கிற அதிகாரி, ஒரு
துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாற்றப்பட்டதற்கு
போராட்டம் நடத்துவதாக அறிவிக்கிற டாக்டர் ராம
தாஸ் அவர்களுடைய அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள்
அவர்களுடைய கட்சியினுடைய மாவட்ட துணைத்
தலைவர் கோதை கேசவன்தான், இந்தச் சுடுகாட்டுக்குப்
போகிற பாதையை மறுக்கிற போராட்டத்தை நடத்திக்
கொண்டிருக்கிறார். இதைக் கண்டிப்பதற்கு இல்லாமல்
நானே என்னுடைய தோளிலே அந்த தாழ்த்தப்பட்ட
சமுதாயத்தினுடைய அந்தப் பிணத்தைக் கொண்டு
போவேன் என்று சொல்லியிருந்தால், அவரை உண்மை
யாகவே அந்தச் சமுதாயத்தின்பேரிலே அக்கறை உள்ள
வராக எடுத்துக் கொண்டிருக்க முடியும். அதைச் சொல்வ
தற்கு முடியாத அவர், இந்த அறிக்கையை விடுகிறார்
என்கிறபோது, இந்த மக்களை திசை திருப்புவதற்காக
ஏமாற்றுவதற்காக இது ஒரு புதுமாதிரியான வஞ்சிக்கத்





தகுந்த தெருக்கூத்தாக இதைப் பின்பற்றிக் கொண்டிருக்
கிறார் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே
சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)
இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏராளமாக இருந்து
கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சொல்வதானால்,
ஒரு நீண்ட பட்டியலே போட வேண்டியிருக்கும். எனவே
என்னுடைய வேண்டுகோள், இந்த நிலைமைகளைக்
களைவதற்கு தாழ்த்தப்பட்டோர் நலக் கமிஷனை மாநில
அளவிலே போட வேண்டும். பிற மாநிலங்களிலே
இப்படிப்பட்ட கமிஷன்கள் இருந்து கொண்டிருக்கின்றன.
இங்கேயும் இந்த கமிஷனைப் போட்டால், இந்தக்
கமிஷன் சுயேச்சையாக, ஒரு தன்னதிகாரம் பெற்ற
அமைப்பாக பல பகுதிகளுக்குப் போய், நடவடிக்கை
எடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

இந்த அவையிலே கூட, பிற மாநிலங்களிலே இருக்கிற
பாராளுமன்றக் குழுவைப்போல, ஒரு சட்டமன்றக் குழு
வைப் போடலாம். சட்டமன்றக் குழுவைப் போடா
விட்டாலும்கூட, மாவட்ட அளவிலே, மாநில அளவிலே
ஆதிதிராவிடர் நலக் குழுவைப் போடலாம். எனவே,
அதைப் போடுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், உதவித் தொகை பெறுவதற்கு நமக்கு
வைத்திருக்கிற உச்சவரம்பு இருக்கிறதே 24 ஆயிரம்
ரூபாய்; ஆண்டுக்கு 24 ஆயிரம் ரூபாய் வரையில்
வருமானம் உள்ளவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
உதவித் தொகை தரலாம் என்றிருக்கிறது. இந்த
நிலைமையிலே இப்போது ஒரு கண்டக்டருடைய மகன்
கூட உதவித் தொகை பெறமுடியவில்லை. சாதாரண
கண்டக்டர், டிரைவர் இருக்கிறார்களே அவர்கள்கூட
உதவித் தொகை பெற முடியாத நிலைமை இருந்து
கொண்டிருக்கிறது. 24 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு
ஆண்டு வருமானம் வந்து விடுகிறது. எனவே, அவர்
களுடைய குழந்தைகளுக்கெல்லாம் ஸ்காலர்ஷிப் கிடையாது.
எப்படி படிக்க வைக்க முடியும்? ஒரு கண்டக்டராகவோ,
அல்லது டிரைவராகவோ வந்து, ஏதோ இந்தத் தலை
முறையில்தான் சொந்தமாக வீடு கட்டுவதற்கோ அல்லது
ஒரு இடம் வாங்கிக் கொள்வதற்கோ கொஞ்சம் வசதி
வந்திருக்கிறது. இந்த நிலைமையிலே, அதற்கு ஒரு சீலிங்
வைத்தால், அது கொஞ்சம் கடினமாக இருக்கும். எனவே,
30 ஆயிரமாக அதை உயர்த்தலாம் என்பதை நான்
இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது விடுதியிலே மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற, உணவுக்காகக் கொடுக்கப்படுகிற மொத்தக் கட்டணம் இருக்கிறதே அது 170 ரூபாய்தான். 170, ரூபாயை, இந்த விலைவாசி உயர்ந்திருக்கிற காலத்தில் ஒரு எம்.ஏ. படிக்கிற மாணவன், எம்.பி.பி.எஸ். படிக்கிற மாணவன், ''லா'' படிக்கிற மாணவன் இவர்களெல்லாம் வளர்ந்த மாணவர்கள்; 170 ரூபாய்க்கு 3 வேளையும் அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு சோறு போட எப்படி முடியும்? படிக்கிற மாணவர்கள், அதுவும் வளர்ந்திருக்கிற, உயர்ந்த படிப்பு படிக்கிறவர்கள், அவர்களுக்கு 170 ரூபாயிலே மாத உணவுத் தொகை, கொடுத்தால் எப்படி முடியும்? நிச்சயமாக முடியாது. ஒரு நாளைக்கு 8 ரூபாயிலே சாப்பாடு போட முடியுமா? அதுவும் 3 வேளைக்கும். இந்த நேரத்திலே நடக்கிற காரியமா? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைந்தபட்சம் 300 ரூபாய் அளவுக்காவது இதை உயர்த்த வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த விடுதிகள் எல்லாம் ரொம்ப பாழ்பட்டுக் கிடக்கின்றன. நாம் பெரிய கல்லூரி விடுதிகளுக்குப் போக வேண்டாம். முக்கியமான விடுதி. ஐ.ஏ.எஸ். பயிற்சி பெறுகிறவர்கள் படிக்கிற விடுதி. சைதாப்பேட்டையில் இருக்கிறது. தயவு செய்து அந்த விடுதியைப் போய்ப் பாருங்கள். மேசை கிடையாது. நாற்காலி கிடையாது. இதில் என்ன வேடிக்கை என்றால் அந்தப் பயிற்சி நிலையத்திலே படித்தவர்கள் பலர் இன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள். இந்தத் துறைக்குக் கூட வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தத் துறைக்கு டைரக்டராகக் கூட ஒருவர் வந்தார். அதே விடுதியில் படித்தார், பலர் ஐ.ஏ.எஸ. பயிற்சி பெறுகிறவர் படிக்கிற விடுதி அப்படியே இருக்கிறது மாணவிகளுக்கு தனி விடுதி கிடையாது. நம்முடைய பிரசிடெண்சி பெண்கள் ஹாஸ்டலில் வைத்திருக்கிறார்கள். பிரசிடென்ஸி காலேஜில் அகாடமிக் படிப்பு ஏப்ரலில் முடிந்து விடுகிறது. ஐ.ஏ.எஸ். தேர்வு ஆகஸ்டில் வருகிறது. இந்த விடுதி மூடியவுடன் மூன்று மாதங்களுக்கு அந்த பெண்கள் எங்கே போவார்கள்? பரிட்சை வருகிற காலத்திலே அவர்களுக்கு இடம் இருப்பதில்லை. இடத்திற்கு அலைகிறார்கள். ஒரு பெண் தனியாக அறை எடுத்துக் கொண்டு படித்து பரிட்சை எழுத முடியுமா? எனவே, இதை சீர்படுத்த வேண்டும் (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடம். ஆந்திராவிலே பிரைவேட் ஏஜென்சியிடம் தந்து விடுகிறார்கள். அப்படியாவது தரலாம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





முற்பகல் 11-10

ஒரு முக்கியமான விஷயத்தை நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாடு முழுவதும் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். விரைவிலே குடியரசுத் தலைவர் இந்திய ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருக்கிறது. இன்றைக்கு இந்திய அரசியலிலே நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மிகப்பெரிய செல்வாக்கும், மிகப் பெரும் பங்கும் இருக்கிறது. டெல்லியில் இருக்கிற அரசியல்வாதிகளானாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற அரசியல்வாதிகளானாலும், எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ள வேண்டும். மத்தியிலே இருக்கிற நிலைமையை மாற்றி ஆள்கிற ஒரு முடிவு எடுக்கிற தன்மை, இப்படிப்பட்ட சக்தி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இந்தியா முழுவதும் இன்று பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை சமூக நீதி ஆண்டாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்திய ஜனாதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்டவன் வரவேண்டும் என்கிற கோரிக்கையைப் பரவலாக அனைத்துக் கட்சிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகிற பெரும்பங்கு, அந்த ஆற்றல் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது என்பதனால்தான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இந்த கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையிலே ஜனாதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்டவனைக் கொண்டு வருவதற்கு ஒத்துழைக்க வேண்டும். இந்த முன் முயற்சியை அவர்கள் எடுக்க வேண்டுமென்று உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன் (மணியடிக்கப் பெற்றது) மாவட்ட அளவிலே திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றை மாநில அரசு கட்டிக் கொண்டு வருகிறது. இந்த நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கின்ற வகையிலே, கௌரவப் படுத்துகிற வகையிலே மாவட்டத்திலே அமைகிற அந்த சமுதாயக் கூடங்களுக்கு அண்ணல் அம்பேத்கர் மண்டபம் என்கிற பெயரை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் மேடைப் பேச்சாளர் நீங்கள் ஒருமணி நேரம் கூட பேசுவீர்கள் நேரத்தின் அருமை கருதி உடனே முடிக்கவும்.

**திரு. செ. கு. தமிழரசன் :** சுருக்கமாகச் சொல்கிறேன். தென்னாற்காடு மாவட்டம் இண்டாகப் பிரிக்கப்படுகிறபோது தென்னாற்காடு மாவட்டத்திலே முதல் கோவில்

நுழைவுப் போராட்டத்தை சிதம்பரத்திலே நடத்தி உலக சரித்திரத்திற்கு எடுத்துச் சொன்ன நந்தனார் பெயரில் நந்தனார் மாவட்டம் என்று கடலூரைத் தலைமையிடமாகக் கொள்ளவிருக்கும் மாவட்டத்தை அழைக்கலாம். அல்லது பெரிய கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய, இந்த மாமன்றத்திலே பல காலம் பணியாற்றிய சுவாமி சகஜாநந்தா பெயரை வைக்கலாம். இரண்டு பெயர்களுமே ஏற்றுக் கொள்ளக்கூடிய பெயர்கள்தான். இந்த இரண்டு பெயர்களிலே ஏதாவது ஒரு பெயரை வைத்து தென்னாற்காடு மாவட்டம் பிரிக்கப்படுகின்றபோது அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு முக்கியமான எரிந்து கொண்டிருக்கிற பிரச்சினையை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எல்லாவற்றிலும் கலப்பு வந்து கொண்டிருக்கிறது. எதில் எடுத்தாலும் கலப்பு. ஜாதியிலே கூட கலப்பு வந்து விட்டது. போலி செர்டிபிகேட்கள் எல்லாம் ஏராளமாக வருகிறது. ஒருபுறம் இந்த இட ஒதுக்கீடு முறையை முழுமையாக நாம் பின்பற்றவில்லை, நிறைவேற்றவில்லை, பல இடங்களிலே இன்னும் நிரப்பவில்லை என்கிற கோரிக்கையை, என்கிற கருத்தை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னொருபுறம் என்னவென்றால், போலி செர்டிபிகேட்டுகள் ஏராளமாகப் பெருகி விட்டது. ஏதோ ஒரு 500 ரூபாய் செலவு செய்தால் போலி செர்டிபிகேட்டுகள் பெற்றுவிடலாம். அப்படிப் பெற்றுவிட்டு வந்து விடுகிறார்கள். இப்படிப் பல இடங்களிலே போலி செர்டிபிகேட்டுகள் பெருகி விட்டன. எனவே, இதைக் கடும்மையாக, சட்டபூர்வமாக—அங்கே யாராவது ஒருவர் கண்டுபிடித்தால் போலி செர்டிபிகேட் கொடுத்து வேலைக்கு வந்திருப்பாரானால்— அதைக் கண்டுபிடித்தவுடன் பெரிய தண்டனை விதிக்கப்படுவதில்லை. அதற்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன். ஒரு எடுத்துக்காட்டாக சொல்கிறேன் நாயக்கர் என்றால் பி.சி. காட்டுநாயக்கர் என்றால் டிரைப் ஆகி விடுகிறான். ரெட்டி என்றால் பி.சி. கொண்டாரெட்டி என்றால் அவன் எஸ்.டி. ஆகிவிடுகிறான். ஒரு சின்ன பெயரிலே கொண்டாரெட்டி என்றால் மாறிவிடுகிறது. காட்டுநாயக்கர் என்றால் மாறிவிடுகிறது... குறும்பர் பி.சி. குறும்பாஸ் என்றால் டிரைப் ஆகிவிடுகிறது. ஆகவே, ஒரு வரியிலே ஒரு எழுத்திலே வித்தியாசம் வந்து செர்டிபிகேட்டே மாறிவிடுகிறது. எனவே, இதை முழுமையாக ஆராய்ந்து இந்த போலி செர்டிபிகேட்டுகள் வருவதைத் தடுக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் ஒரு இட ஒதுக்கீட்டுக்குப் போராடிக் கொண்டிருக்கிறோம். சென்னைப் பல்கலைக்



கழகம் நூறாண்டு காலமான பழமையான பல்கலைக் கழகம். அந்தப் பல்கலைக் கழகத்திலே 375 பேராசிரியர்கள் இருக்கிறார்கள். அதிலே 4 விழுக்காடு கூட எஸ்.சி.-க்கு இன்னமும் பத்தாண்டு காலத்திற்குப் பிறகும் நிரப்ப முடியாத நிலைமை இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். பிரச்சினை வந்துவிடுகிறது. இன்னும் 125 இடங்கள் அங்கே காலியாக இருக்கின்றன. இந்த 125 இடங்களையும் எஸ்.ஸி. எம்.பி.சி.-க்கு போட்டாலும் கூட முழுமையாகாது. அந்த அளவுக்கு அங்கே ஒரு பேக்லாக் இருக்கிறது. எனவே இதை நாம் தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அடுத்து தொழில் வளர்ச்சிக்கு மத்திய அளவில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே, ஒடுக்கப்பட்ட மக்களைத் தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக வளர்ப்பதுதான் உண்மையாக அந்தச் சமுதாயத்திற்கு ஆற்றுகிற ஒரு நல்ல செயலாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே இவர்களைத் தொழில் துறையில் முன்னுக்குக் கொண்டு வருவதற்காக ஒரு தனி தொழில் வளர்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற, கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். இந்த ''டிக்''-லே அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் தொழிலதிபர்கள் வந்திருக்கிறார்கள் கடன் பெறுவதற்கு. இல்லவே இல்லை. அவர்கள் வருவதற்கு வாய்ப்பு இல்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்பதைப் பார்க்கவேண்டும். அங்கே நான் ஒரு யதார்த்தமான நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பகுதியிலே சாராயம் காய்ச்சிக்கொண்டு இருக்கிறான் என்னுடைய சகோதரர்கள் எல்லாம். நான் கடுமையாக அச்சுறுத்தி இந்தச் சாராயம் காய்ச்சுகிற வேலையில் ஈடுபடக்கூடாது. வேறு தொழிலைச் செய்தால் என்ன என்று கேட்டேன். அதற்கு அவன் யதார்த்தமாகச் சொன்னான். ஒரு தாழ்த்தப்பட்டவன் ஹோட்டல் வைத்தால் யாரும் வந்து சாப்பிட மறுக்கிறார்கள். ஆனால் சாராயம் காய்ச்சினால் வந்து குடிக்கிறான். எனவே சாராயம் காய்ச்சுவதைத் தவிர வேறு வழி இல்லை. அதாவது ஒரு யதார்த்தமான நிலைமையைச் சொல்லவேண்டும் என்பதற்காக, நம்முடைய உண்மையான நிலைமையை,, முதல்வர் அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இதுவரையிலும் தமிழகத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவன் கூட அதாவது ஒரு பெர்சன்ட் கூட ஹோட்டல் வைத்து நடத்த முடியவில்லை. அதுதான்

நிலைமை. அவன் அப்படியே சொன்னான். ஹோட்டல் வைத்தால் யார் வருகிறான்., சாராயக் கடை வைத்தால் வருகிறான் என்று சொன்னான். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால்தான் அவர்களைத் தொழில் பூர்வமாக வளர்ப்பதற்கு டிக் மூலமாகவோ அல்லது தனியாக ஒரு தொழில் துறையைக் கொண்டு வந்தோ செயல்படுத்த வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். தாட்கோவில் தருகிறார்கள். ஆனால் தாட்கோவில் ஏற்படுகிற கால தாமதத்தால் அதாவது இந்த மார்ஜின் மணி தருகிறார்களே, அது இங்கே இருந்து டிக்-கிற்குப் போவதற்குள் காலதாமதம் ஏற்பட்டுவிடுவதால் பல அங்கே ரிஜக்ட் செய்யப்படுகின்றன. இப்போதுகூட அப்படிப்பட்ட காலதாமதத்தால் பலபேருக்கு ரிஜக்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு மாதம் இரண்டு மாதத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை வராது. ஆனால் இவர்கள் மார்ஜின் மணி தருவதற்குள் அவர்களுடைய அந்த ஃபினான்ஷியல் இயர் முடிந்துவிடுகிறது. அதாவது ஓராண்டுக்காலம் அல்லது 6 மாத காலம் எடுத்துக் கொள்கிறார்கள். தருவதற்கு. அதற்குள் அவர்களுடைய ஃபினான்ஷியல் இயர் முடிந்துவிட்டது என்று சொல்லி தர முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள்.. இப்படிப்பட்ட நிலைமை வந்துவிடுகிறது. எனவே இது கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பல கிராமங்களில் கலப்புத் திருமணம் என்கிற போது சமுதாயச் சண்டைகள் வந்துவிடுகின்றன. எனவே கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு உரிய சட்டப் பாதுகாப்பு வழங்குவதற்கு, காவல் துறை பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பெரிய திட்டத்தை கடந்த ஆண்டில் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். உண்மையாகவே மிக்க மகிழ்ச்சியோடு அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்று அதைப்பற்றி நான் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெரிய கொடுமைகள் எல்லாம் ஏற்படுவதற்குக் காரணம் கிராமப்புறத்தில் இருக்கிற, அந்த விவசாயத் தொழிலாளியாக இருப்பவர்களுக்கு சாதாரண சின்ன சொத்து கூட இல்லாமல் இருப்பதுதான். புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு ஒரு பெரிய ஒப்புயர்வற்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு சென்ட்ரல் கோவாக்ப்பரேட்டிவ் பேங்கிலே இருந்து ஷெட்யூல்ட் காஸ்ட்-க்கு கடன் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதாவது எப்படி தொழில் ஆரம்பிப்பதற்கு தருகிறார்களோ, அப்படி நிலம் வாங்குவதற்கும் கடன் தருவோம்.



என்கிற மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஜமீன்தாரி முறையை ஒழிக்கின்ற முறையை விட நில அடிமை முறையை, பிரபுத்துவ முறையை ஒழிக்கிற மிகப் பெரிய சமூகப் புரட்சித் திட்டம் இது. ஆனால் அதற்குரிய அதிகாரிகள் அதைச் சரியாகச் செயல்படுத்தாத காரணத்தால் இதுவரையிலும் பலருக்குத் தரப்படவில்லை. யாருக்குமே தரவில்லை. கடந்த ஆண்டு அறிவித்தார்கள். கேட்டால் வங்கியிலிருந்து பணம் வசூல் ஆகவில்லை, எங்களிடத்திலே பணம் இல்லை என்று கோவாப்பரேட்டிவ் பேங்கிலே அதிகாரிகள் சொல்கிறார்கள் இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. முடிந்த வரை தருவதற்கு, இதைச் செயல்படுத்துவதற்கு அதிகாரிக்ள் முன்வரவேண்டும் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நான் இறுதியாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உலகிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு தீண்டாமைக் கொடுமை இந்தியாவில்தான் இருக்கிறது. மனிதனைத் தொடாத கொடுமை வேறு எங்கும் கிடையாது. இனவெறி உண்டு; நிற வெறி, உண்டு; பொருளாதார வேறுபாடு உண்டு; மதவெறி உண்டு. ஆனால் இந்தியாவில் மட்டும் தான் ஒரே மதத்தைச் சார்ந்தவன் ஒரே மொழியைச் சார்ந்தவன், ஒரே உணவை உண்பவன் என்று இப்படி எல்லா வகையிலும் ஒத்த உணர்வு உள்ளவர்களிடையே ஒருவரை ஒருவர் தொடாத அன்டச்சபிலிட்டி என்கிற நிலைமை இந்தியாவில் மட்டும் தான் இருக்கிறது. இதை ஒழிக்கவேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய அரசியல் சட்டத்திலே காஸ்ட்லெஸ், கலர்லெஸ், க்ளாஸ்லெஸ் அதாவது இன, நிற, வர்க்கபேதமற்ற, சமுதாயத்தை நோக்கி இந்த அரசு போகிறது என்கிற வரியை நாம் சொல்வோம் நான் இவைகளை எல்லாம் சொல்கிறேன் என்றுசொன்னால் நடைமுறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு மனித நேயம் மிக்க துணிச்சல் மிக்க எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்கிற ஒரு தலைமை வேண்டும் அப்படிப்பட்ட ஒரு தலைமை இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவியிடம் இருக்கிறது. அதற்காகத்தான் சொல்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தோடு எந்தவிதமான எதிர்பாப்பும் இல்லாமல் எவர் வரினும் நில்லேன் அஞ்சேன் என்று துணிந்து தான் எடுத்துக்கொண்ட கொள்கையை செயலாக்குகின்ற அந்த தீரம் மிக்க பண்பு இவரிடம் இருக்கிறது. இதற்கும்மேலே சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு சாதிகள் அற்ற ஒரு தலைமையை வேறு எந்தத் தலைவனிடமும் நாம் பார்க்க முடியாது. சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, சாதிகள் அற்ற ஒரு தலைமை இங்கே இருப்பதால் இந்தக் காலம் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவு காலம் (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்தப்

[திரு. செ.கு. தமிழரசன் []1992 ஏப்ரல் 22

பிரச்சினைகளை நான் முன்வைத்து இவற்றைச் செயலாற்றிட வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கைகளையும் முன் வைத்து நன்றியோடு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ச. இராமச்சந் திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் பேசுகிற போது குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். அவர்கள் கும்பகோணத்திற்கு அருகிலே உள்ள குடிதாங்கி என்ற ஊரிலே நடைபெற்ற சம்பவத்தை பற்றிக் குறிப்பிட்டார்கள். அத்தகைய பிரச்சினைகள் எங் களைப் பொறுத்தவரையில் அரசியல் பிரச்சினை அல்ல. சமுதாயப் பிரச்சினை. அது இன்று நேற்று அல்ல, பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற பிரச்சினை. குடிதாங்கியிலே பாட்டாளி மக்கள் கட்சியினரோ அல்லது பாட்டாளி மக்கள் கட்சிக்கு வேண்டியவருமோ இல்லை. அந்தப் பிரச்சி னையை தீர்த்து வைக்கவேண்டும் என்பதற்காகவும், வகுப்பு ஒற்றுமைக்காகவும், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் அவர் கள் இம்மாதம் 12-ம் தேதி அங்கே சென்று ஒரு நாள் முழுவதும் இருந்து வகுப்பு ஒற்றுமையைப் பற்றி அவர்களிடத்திலே பேசி அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ஆகவே இது சமுதாயத்திலே இன்றைக்கு ஆங்காங்கே சாதி கலவரங்கள் வகுப்புக் கலவரங்கள் ஏற்படுகிறது என்றால், இது கடந்த 2 ஆயிரம் ஆண்டுக்காலமாக, நாட்டிலே இந்து மதமும், வகுப்பு பேதமும், வர்ணாசிரம தர்மமும், வேத ஆகம சாஸ் திரமும், இவைகள் எல்லாம் விளைவித்த நோய்களின் அறி குறிகள். இவைகளை எதிர்த்துத் தான் டாக்டர் -அம்பேத் கார் அவர்கள் இந்து மதமே வேண்டாமென்று புத்த மதத் திற்கு போனார். டாக்டர் அம்பேத்கார் வழியிலே குடியரசு கட்சியை நடத்தி வருவதாக சொல்லிக்கொள்ளும் மாண்பு மிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் அத்தகைய சாதி பேதங்கள் வேருன்றி இருக்கக்கூடிய அந்தக் கொடிய நோய் சமுதாயத்தினுடைய ஒற்றுமை கருதியும், நன்மையைக் கருதி யும் அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து அதனை ஒரு நாட்டுப் பிரச்சினையாகப் போராடவேண்டும் என்று பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சி யினுடைய தலைவரைப் பற்றி இதிலே குறை சொல்லி விட்டார் என்பதில் நான் உண்மையிலே வருத்தப்படுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில்....



1992 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் அதை மறுக்க லாம். அதிலே விவாதம் வேண்டாம். நாங்கள் இவ்வாறு பேசவில்லை. எங்களுடைய தலைவர் அவ்வாறு நடக்கவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. தமிழரசனை உங்கள் வழிக்கு இழுப்பது என்பது முடியாத காரியம்.

**திரு. ச. இராமச்சந்திரன்** : இல்லை. எங்கள் வழிக்கு அல்ல. எல்லோருமே அந்த சமுதாய அமைதிக்காகவும், ஒற்றுமைக்ககாகவும் பாடுபடவேண்டும். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் காண விரும்புகின்ற புதிய தமிழ்நாட் டில், இன்றைக்கு மற்றவர்கள் மட்டுமல்ல, மேல் வகுப்பார் என்று சொல்லக்கூடிய பிராமணர்களேகூட தங்களுடைய வகுப்பை மறந்து, எல்லோருமாக தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற நிலையும் மாறி, யார் இறந்தாலும் அவர்களைக் கொண்டு போய் புதைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும். அதைத்தான் நாங்கள் குறிக்கோளாகக் கொண் டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. தமிழரசன் . . .(குறுக் கீடு).

**திரு. போளூர் வரதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இல்லை. அவர் பேசட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். பேசியது அவர். அவர் சொல்லட்டும். அவர் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் வாருங்கள். திரு. தமிழரசன் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார். அவர் பேசட்டும்.

**திரு. செ. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்திலே இன்றைக்கு முதல்வர் அவர் களே நேரடி நடவடிக்கை எடுத்தப் பின்னாலே 80-க்கு மேற் பட்டவர்களைக் கைது செய்துதான் ஒரு பிணத்தை கொண்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாக அங்கே தடுத்தவர்கள் பாட்டாளி மக்கள் கட்சிப் பொறுப்பிலே இருககிறவர். பெயரை சொன்னேன். திரு. கோனதக் கேசவன். துண்டறிக்கையையே வெளியிட்டிருக் கிறார்கள் எனவே நான் அதைச் சுட்டிக் காட்டினேன். நான் வேறு ஒன்றையும் சொன்னேன். அவர்கள் உண்மையாகவே

பேரறிஞர் அம்பேத்கார் படம் எல்லாம் சுவரொட்டிகளாக ஒட்டி இன்று நூற்றாண்டு கொண்டாடுகிறார்கள். உண்மையாக அந்த எண்ணம் இருந்தால் டாக்டர் ராமதாஸ் 'என். தோளிலேயே அந்தப் பிணத்தைத் தூக்கிக் கொண்டு தெருவிலே போவேன்' என்று சொல்லட்டும். அதைச் சொல்லாமல், ஒரு சதாசிவம் என்கிற உயர் அதிகாரி, தாழ்த்தப்பட்டவர், என்பவரை மாற்றி விட்டார்கள் என்பதற்காக நான் போராடுவேன் என்றார்கள். பெரிய அதிகாரி விவசாயத் துறையிலே இருந்து இன்னொரு துறைக்கு மாற்றியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர் அவருக்காக நான் போராடுவேன் என்று திசைத் திருப்புகிறார்களே, இதை செய்வதற்கு என்ன? அது மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முன்னாள் - அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் இங்கே சொல்கிறார்கள். நாங்கள் அங்கே போய் உட்கார்ந்து சமாதானம் செய்தோம் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன். ஒரு அதிகாரியை ஒரே துறையிலே சாகிற வரைக்கும் வைத்து இருக்க முடியாது. ஒரு துறையிலே இருந்து இன்னொரு துறைக்கு மாற்றுகிறபோது, அதற்குப் போராட்டம் இதற்குப் நாங்கள் போய், சமாதானம என்றால், இது என்ன அணுகுமுறை? இதற்கு என்று போராடுவதுதானே.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் புரையோடிப்போன புற்றுநோயினுடைய அறிகுறிதான் அது. அது இல்லை என்று நான் மறுக்கவில்லை. அதிகாரியைப் பற்றி பேசுகிறார். அதிகாரியைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பாட்டாளி மக்கள் கட்சியிலே அங்கே யாரும் கிடையாது. அதோடு மட்டுமல்ல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய அந்த மாவட்டத்தினுடைய செயலாளர் அதைக் கண்டித்து அவரும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஒன்றும் நடக்கவில்லை. எங்கு மக்கள் இருந்தாலும், எந்த கலவரங்கள் நடந்தாலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்றால், அவர்கள் உடனே பாட்டாளி மக்கள் கட்சி என்று ஒரு முடிவிற்கு வருவதா? ஆகையினாலே, குறை சொல்லும்போது, குற்றங்களைச் சொல்கிறபோது, அதுவும் அவையில் இல்லாதவர்களைப் பற்றி சொல்கின்றபோது, அதற்குரிய ஆதாரங்களை ........

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, ஒருவர், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த இன்னார் என்று தான் சொல்லியிருக்கிறார்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட ஒருவருடைய பெயரைச் சொல்லி, இந்தக் கிராமத்திலே இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர் என்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் இல்லையென்றால், அவர், பாட்டாளி மக்கள் கட்சியில் இருக்கிறாரா இல்லையா என்பதை விளக்கவேண்டுமே தவிர—இல்லையென்றே சொல்லவில்லை. அவர் குறிப்பிட்டவர் பெயரைச் சொல்லி, இவர் பாட்டாளி மக்கள் கட்சி, நோட்டீஸ் அடிக்கப்பட்டிருக்கிறது என்று விளக்கம் தந்திருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரைக் கூட இன்றைக்கு எங்கேயோ ஒரு நோட்டீஸ் அடிந்திருக்கிறார்கள். அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா? அவர் பொறுப்பேற்றுக் கொள்ளட்டும். மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு தமிழரசன் பொறுப்பேற்றுக்கொண்டுதான் பேசுகிறேன் என்கிறார்.

திரு.செ. கு. தமிழரசன் : நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெயரையும் சொன்னேன், அவர் 'துணைத் தலைவர்' என்றும் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காக ஆதாரங்களைத் தங்களுக்குத் தருகிறேன். ஆதாரங்கள் சரியில்லையென்றால் உரிமைப் பிரச்சினைக்கு தாங்கள் என்றைக்கு வேண்டுமானாலும் எனக்கு அனுமதி தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் இதில் ஏன் தலையிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. அவர் சொன்னது வேறு பிரச்சினை. தாங்கள் பேசியதில் அவர் ஏதோ ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன் : நான் அவர்களை ஒன்றும் சொல்லவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் கட்சியின் மீது நீங்கள் சொன்னதாக அவர் சொல்லவில்லை. ஆதி திராவிடர்கள் பற்றி நீங்கள் பேசிய சில கருத்துக்களுக்கு அவர் ஏதோ விளக்கம் சொல்ல வேண்டும் என்கிறார்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** தயவு செய்து சொல்ல வேண்டாம். ஏன் என்றால் காங்கிரஸ் காரியக் கமிட்டி விவகாரமே ரொம்ப பெரிய பிரச்சினையாக இருக்கிறது. (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இதிலே வேண்டாம். கட்சிக்குள்ளே போகாதீர்கள். திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிதாங்கியில் ஏற்பட்ட பிரச்சினையை இந்த அவையில் நான் கிளப்பியது எல்லோருக்கும் தெரியும். அன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் தெளிவான ஒரு கருத்தை வெளியிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த இடத்திலே பாதிக்கப்பட்டாலும் யார் இறந்தாலும் உரிய மரியாதையோடு இந்த அரசு அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்து அடைக்கலம் கொடுத்து உத்திரவாதத்தைக் கொடுத்த பின்னாலே கூட அந்தப் பகுதியிலே இருக்கிற தி. மு. க., பி. எம். கே. கட்சியைச் சார்ந்தவர்கள் அந்த அழகன் என்கிறவருடைய உடலை எடுத்துச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அவருடைய வீட்டுக்கு அருகிலேயேதான் புதைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. இங்கே பண்ருட்டியார் அவர்கள் பேசுகின்றபோது எங்களுடைய கட்சிக்காரர்கள் தடுக்கவில்லை, எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எங்களுடைய கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் இராமதாஸ் சமாதான கமிட்டியை போட்டிருக்கிறார் என்ற தவறான தகவலை சொல்கிறார். அழகன் உடல் அவருடைய இல்லத்திற்கு அருகாமையிலேதான் புதைக்கப்பட்டது.

ஒரு வாரத்திற்குப் பின்னாலே பூங்காவனம் என்கிற ஒரு பெண்மணி அங்கே இறந்துவிட்டார். மீண்டும் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு மாவட்ட எஸ். பி. யும், கலெக்டரையும் அனுப்பி, சட்டரீதியாக பொது பாதை வழியாக அந்தப் பெண்மணியின் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவை கடுமையாக பிறப்பித்த பின்னாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த பெண்மணியினுடைய உடல் குறிப்பிட்ட பாதை வழியாக எடுத்துச் செல்லப்படுகிறது. அப்படி எடுத்துச் செல்லப்படுகின்றபோது பாடை கட்டி எடுத்துச் செல்லவில்லை. வாகனத்தின்மீது வைத்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. 500 காவல் துறையினரைச் சார்ந்தவர்கள் நடந்து செல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நடந்து செல்கிறார், எஸ். பி. நடந்து செல்கிறார். அதற்குப் பின்னாலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பி. எம். கே. கட்சியைச் சார்ந்தவர்கள் 80 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை அவர் மறைப்பது ஏன்? (மேசையைத்



தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு அம்பேத்கார் விழாவைக் கொண்டாடட்டும், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல. அவர் அன்று கொண்டு வந்திருக்கிற சட்டங்கள், எழுதிய சட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் சொந்தம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். வரவேற்கிறேன். அதற்காக தமிழகத்தினுடைய முதலமைச்சர் எடுத்திருக்கின்ற அந்த முடிவுக்குப் பின்னாலே தான், அந்த உத்திரவுக்கு பின்னாலேதான் அங்கே பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கடுமையான முறையிலே. அதை மறைத்து, சம்பந்தப்பட்ட கட்சிக்காரரை காப்பாற்ற வேண்டுமென்பதற்காக தன்னுடைய கட்சி நிறுவனர் சமாதானம் செய்ய சென்றார் என்று சொல்கிறாரே, எப்போது சென்றார்? இரண்டு சடலங்களும் அங்கே அடக்கம் செய்யப்பட்ட பின்னாலேதான் சென்றிருக்கிறாரேயல்லாமல் அந்த சடலம் இருக்கின்றபோது செல்லவில்லை. நான் கூறினேன், தமிழக அரசு; தமிழக முதலமைச்சர் கொண்டு வந்த அந்த உத்தரவை பின்பற்றவில்லை என்று சொன்னால், அதிகாரிகள் தோளின்மீது சுமந்து சென்று அந்தப் பிணத்தை புதைப்பேன் என்று சொன்ன பின்னாலே தான் காவல் துறையைச் சார்ந்த அந்த அதிகாரிகள், அந்தப் பகுதியிலே இருந்தவரும் அந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் இன உணர்வோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை இன்றைக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம், தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள முடிவை மாற்றி, அவருக்கு வரக்கூடிய புகழைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறான தகவல்களை இந்த அவையிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னீர்கள். அவர், பாட்டாளி மக்கள் கட்சிதான் என்று அவர் கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) இதில் என்ன மேற்கொண்டு விளக்கம் இருக்கிறது.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்றாலே வன்னியர்கள், வன்னியர்கள் என்றாலே பாட்டாளி மக்கள் கட்சி என்ற கருத்துப்பட பேசுகிறார்கள். அதுவல்ல. அந்தக் கருத்து அல்ல. அதைத்தான் நான் சொல்லிக் கொள்கிறேன் அந்தப்

பகுதியிலே அந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினரே காங்கிரஸ் கட்சி உறுப்பினரே இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிறார். நான் சொல்ல வருவது அது ஒரு சமுதாயப் பிரச்சினை. ஒவ்வொரு ஊரிலும் நடக்கிறது. பல இடங்களில் நடக்கிறது. அதைப் பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் மேலும் பிளவுபடுத்தும் போக்கை கையாள்வதற்குப் பதிலாக வகுப்பு ஒற்றுமையைக் கையாளவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்றாலே வன்னியர்கள், வன்னியர்கள் என்றாலே பாட்டாளி மக்கள் கட்சி என்று தவறாகச் சுட்டிக் காட்ட மாட்டோம். அங்கே கைது செய்யப்பட்டிருக்கிற 81 பேரை பாபநாசம் சிறையிலே மறுநாள் டாக்டர் இராமதாஸ் போய் சந்திக்கிறார். அப்படி என்றால் அவர்கள் யார்? ஏன் அவர்களைப் போய் இவர் சந்திக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன் : தவறான தகவல். 12 ஆம் தேதி தான் அவர் அங்கே போகிறார்.

6. விதி 110 இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

பொது விநியோகத்தில் வழங்கப்படும் குறைந்தவிலை அரிசியை அனைவரும் பெறலாமென்று ஆணை பிறப்பிக்கப்படுவது குறித்தும் குறைந்த விலை அமலாகும் தேதி குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 110-இன் கீழ் ஒரு முக்கியமான அரசின் முடிவைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அத்தகைய முக்கிய முடிவு ஒன்றைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் அரிசி பெறுவதற்கான தகுதி மாத வருவாய் அடிப்படையில் ரூ.750ம், அதற்குக் கீழும் என்று நேற்று அறிவித்திருந்தேன். அதுபோலவே 2½ ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் குறைந்த விலை அரிசி இனி வழங்கப்படமாட்டாது என்றும் அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து



பல்வேறு தரப்பினர் என்னைச் சந்தித்து இந்த முடிவினை
மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்
தனர். இந்த வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு தமிழ
கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும்
வழக்கம்போல் தொடர்ந்து குறைந்த விலை அரிசி பெற
வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்கூறிய நிபந்தனைகளை
நீக்கி ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த
ஆணையின்படி எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் சாதா
ரண அரிசி கிலோ 2 ரூபாய்க்கும், சன்ன மற்றும் மிகச்
சன்ன ரக அரிசி கிலோ 3 ரூபாய்க்கும் விற்கப்படும். (மேசை
யைத் தட்டும் ஒலி) இந்த முடிவின் பயன் விரைவாக
மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்
1—6—1992 முதல் அமலுக்கு வரும் என்று அறிவித்திருந்
ததை மாற்றி, வருகின்ற 1—5—1992 முதலே இந்த
விலைக் குறைப்பு அமலுக்கு வரும் என்பதை மிக்க
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி) இதனால அரசுக்கு கூடுதலாக ஆண்டு
ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவாகும். தற்போது அரசுக்கு
ஏற்பட்டு வரும் மானியச் செலவான 340 கோடி ரூபாய்,
இந்த விலைக்குறைப்பினால் 400 கோடி ரூபாயாக உயரும்
என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மகிழ்ச்சியான செய்தி. திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள்
குடும்ப அட்டைக்கு அரிசி வழங்குவதற்கு ஒரு பொருளாதார
வரம்பை அறிவித்தார்கள். நானும் அதை மறு பரிசீலனை
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இன்றையதினம்
முதலமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அறிவித்திருக்
கிறார்கள். அப்படி மறு பரிசீலனை செய்தமைக்கு நான்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்
டும் ஒலி.)

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையின்
மீதான விவாதம் திரு. வீ. சுப்பிரமணியன். (குறுக்கீடுகள்)
தமிழ்நாடு முழுமையும் உள்ளவர்கள் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களுக்கு, இந்த அறிவிப்பின் காரணமாகத்
தங்களுடைய நன்றியையும மகிழ்ச்சியையும் தெரிவித்துக்
கொண்டிருப்பார்கள். (மேஜையைத் தட்டும் ஒலி)
என்பதைப் பேரவையின் அனைத்து உறுப்பினர்கள் சார்
பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு.வீ. சுப்பிர
மணியன்.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு ஆதிதிராவிடா நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுளள மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த, நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி ஒரு சில கருத்துக்களை இங்கே கூற விழைகிறேன்.

ஆதி திராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அம்மககளின் நலனைக் கருதி, 1992-93 ஆம் நிதி ஆண்டில் ரூ. 114,02,54,000-த்தை ஒதுக்கியுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டு உள்ளேன். அறிஞர்களைப் போற்றாத நாட்டில் அறிஞர்கள் தோன்றுவது எங்ஙனம் என்ற கூற்றுக்கேற்ப தாழ்த்தபபட்ட மக்களுடைய ஒப்பற்ற தலைவராக விளங்கிய டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்கள நூற்றாண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நன்னாளில், அவருடைய பிறந்த நாளான ஏப்ரல் 15 ஆம தேதியை அரசு விடுமுறை யாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களும ஒரு அறிஞராகத் திகழ்ந்துகொண்டிருக் கிறார் என்று கூறினால் அது மிகையாகாது.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக் கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அம்மககளின் மேம்பாட்டுக்காக 10 அம்சத் திட்டமொன்றை கொண்டுவந்து அதை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில ஒளியேற்றுகின்ற புரட்சித் தலைவி அரசை நான் மனதாரப் பாரட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காலத்தின் அருமை கருதி என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன்.

கண்டமங்கலம் ஒன்றியத்திலே உள்ள மிட்டா மண்டகப் பட்டு அரசினர் உயர்நிலைப்பள்ளியில் பயிலுகின்ற மாணவர்களின் நலனுக்காக ஆதி திராவிடர் மாணவர் நல விடுதி ஒன்று அங்கே கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விக்கிரவாண்டி ஒனறியத்தில் தும்பூர் கிராமத்தில் இருக்கிற அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ஆதிதிராவிடர் நல விடுதி ஒன்று வேண்டுமென்று இன்றைய தினம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன். தமிழ்நாட்டில் படிக்காதவர்களே இல்லையென்ற நிலையை உருவாக்கவேண்டுமென்ற உயரிய லட்சியத்தைக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், அவர்களுடைய பொற்கால ஆட்சியில்



கண்டமங்கலம் ஒன்றியத்தில் சின்ன குப்பம் கிராமத்தில் புதி தாக ஒரு ஆதிதிராவிடர் துவக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று வேண்டுமென்றும், விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள வி.சாலை என்ற கிராமத்தில் இயங்கி வருகின்ற ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்கவேண் டுமென்றும் நான் வணங்கும் புரட்சித் தலைவி அவர்களை மிக்கப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

அதுபோலவே, மனைப்பட்டாக்கள் வழங்குவதில் கண்டமங்கலம் ஒன்றியத்தில் உள்ள வி. புதுப்பாளையம், கொத்தாம்பாக்கம், பரசுரெட்டிபாளையம், புராணசிங்கபாளையம் சொர்னாவூர், தென்பேர், ஆவுடையார்பட்டு, ஆகூர் கொங்கராம்பூண்டி ஆகிய கிராமங்களில் மனைப்பட்டா வழங்கி ஏறத்தாழ 20 ஆண்டுக் காலத்துக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால், அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் அவதிக் குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் அந்தப் பகுதியில் இருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து மனைப்பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று மாண்பு மிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மிக்கப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதுமட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச மாக கட்டிக் கொடுக்கப்படுகிற " தாட்கோ " வீடுகள் பல இடங்களில் சேதமடைந்துள்ளன. நிதிநிலை நெருக்கடி அதிகமாக இருந்தாலும் சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே யாவது சேதமடைந்த வீடுகளைச் சீர் செய்வதற்கு ஏதாவது ஒரு வகையில் நிதியை ஒதுக்கி அந்த வீடுகளைச் சீர் செய்து சரித்திரம் படைக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை பணிவோடு வேண்டுகிறேன்.

அதே போன்று மயானப் பாதைகள், மயானங்கள் இல்லாமல் அவதிபட்டுக் கொண்டிருக்கிற விக்ரவாண்டி ஒன்றியத்தில் உள்ள வி. பகண்டை என்ற கிராமத்தில் புதிதாக மயானப் பாதை அமைக்க வேண்டும் என்று, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர் களை மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென் றால் அந்தக் கிராமத்தில் சுடுகாட்டிற்குச் செல்வதற்கு பாதை இல்லாமல் நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதே போலவே விக்ரவாண்டி ஒன்றியத்தில் சிறுவல்லி குப்பம் என்ற ஆதி திராவிடர் மக்களுக்கு மயானம் இல்லாத காரணத்தால் அங்கே இருக்கின்ற வன்னியப் பெருங்குடி மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் அடிக்கடி சண்டை வருகின்ற காரணத்தால் உடனடியாக சிறுவல்லிகுப்பம் ஆதி திராவிடர்களுக்காக நில ஆர்ஜிதம் செய்து தனியாக ஒரு இடத்தில் மயானம் அமைத்துக் கொடுக்க மிக பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

'' தாட்கோ '' மூலமாக ஏற்கனவே 1987 ஆம் ஆண்டு கம்யூனிட்டி ஹால் கட்டுவதற்காக சின்னக்குப்பம் என்ற கிராமத்தையும், விக்ரவாண்டி ஒன்றியத்தில் உள்ள முண்டியம்பாக்கம் என்ற கிராமத்தையும் தேர்ந்தெடுத் தார்கள். இரண்டாண்டுகால தி.மு.க. ஆட்சியில் அந்த உத்தரவை மாற்றி நிறுத்திவிட்டக் காரணத்தால் ஒப்பற்ற தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மீண்டும் அங்கே கம்யூனிட்டி ஹால் கட்டிக் கொடுக்க மிகப் பணிவோடு வேண்டிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. கந்தசாமி.

***திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் இந்தச் சமுதாயத்தில் மற்ற இன மக்களிடையே சமத்துவமாக வாழ்வதற்கு சமமான சமூக அந்தஸ்தை எதிர் பார்க்கிறார்கள். ஆதி திராவிடர்களின் பொருளா தார மேம்பாட்டை உயர்த்துவதன் மூலமே இந்த சமூக அந்தஸ்தை பெற முடியும். ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அரசு இன்னமும் முனைப் பாகச் செயல்பட வேண்டும். இந்த அமைச்சரவையில் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த ஒரு அமைச்சர் மட்டுமே உள்ளார். கடந்த காலங்களில் இரண்டு அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தார்கள். இந்த வகையில் இன்னுமொரு ஆதிதிராவிடருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால் இந்த இன மக்கள் இன்னும் மகிழ்ச்சி அடைவார்கள். மேலும் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த அமைச்சருக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மட்டும்தான் கொடுக்கப்பட வேண்டும் என்பதில்லை. இந்த அரசு அப்படியில்லை. என்று கூறுகிற வகையில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரிடம் பால்வளத் துறையையும், கால்நடைத் துறையையும் கொடுத்திருப்ப தற்குப் பாராட்டுகிறேன். எந்த இலாக்காவாக





கொடுத்தாலும் அதைத் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் ஆளும் கட்சியிலே நிறைய பேர் இருக் கிறார்கள். எனவே இன்னுமொரு ஆதிதிராவிடருக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்று பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே நடத்தும் மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் சேர்ப்பதை ஜூலை மாதத்திற்குள் முடித்து விட வேண்டும். அதே போல இலவச சீருடைகள், இல வசப் புத்தகங்கள் ஆகியவற்றையும் ஜூலை மாதத்திற்கு முன்பாகவே கொடுத்துவிட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்கள் உதவித் தொகையைப் பெறுவதற்கு பெற்றோரின் வருமானத்தை முப்பதாயிர மாக உயர்த்த வேண்டும். விடுதிகளில் தங்கிப் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் ரூ. 105- ஆக இருப்பதை ரூ. 150 ஆகவும், கல்லூரி மாணவர் களுக்கான உணவுக் கட்டணம் ரூ. 155 ஆக இருப்பதை ரூ. 200 ஆகவும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நடப்பாண்டில் 30 புதிய மாணவர்கள் இல்லங்கள் திறக்கின்றபோது தலைவாசல் தொகுதியில் கூடமலை, கிராமத்தில் மாணவர்கள் விடுதி ஒன்றைத் திறக்க அனு மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு அரசு செய்கின்ற உதவிகளிலேயே மிகவும் தலையாய உதவியாக இருப்பது அவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா கொடுப்பதுதான். ஒரு ஏக்கர் 50 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக எங்கும் நிலம் வாங்க முடிவதில்லை. அதிலும், நில ஆர்ஜிதத்தை எதிர்த்து நீதிமன்றங்களில் தடை ஆணை பெற்றுவிடு கிறார்கள். வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுப்பதற்கு, மாநிலம் முழுமைக்கும் நடப்பு ஆண்டில் 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பது நிச்சயமாகப் போதாது. எனவே, இந்தத் தொகையை 6 கோடியாக உயர்த்த வேண்டும். மேலும், நில ஆர்ஜிதம் செய்கின்றபோது நிலத்தின் விலையை நிர்ணயம் செய்வதற்கு மாவட்ட வருவாய் அதிகாரி நேரில் சென்று நிலத்தைப் பார்வையிட வேண்டும். சிலசமயம் நிலத்தைப் பார்வையிட வருகிறேன் என்று கூறிவிட்டு, பிறகு அதிக வேலைப்பளு காரணமாக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் நிலங்களை பார்வையிடச் செல்லாமல் இருந்துவிடுகிறார்கள். இந்த வீண் காலதாமதத்தைத் தவிர்க்க ஆதி திராவிடர்களின்

[திரு. கே. கந்தசாமி] [1992 ஏப்ரல் 22

நில ஆர்ஜிதப் பணிகளுக்கென தனியாக மாவட்டந் தோறும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் தனி மாவட்ட வருவாய் அலுவலர் பதவி ஒன்றை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

சமபந்தி போஜனம் நடத்துவதால் ஜாதி வேறுபாடு கள் மறைந்துவிடும். என்று எதிர்பார்க்க முடியாது. சமபந்தி போஜனங்கள் நடத்துவதை விட்டுவிடலாம். 20 வருடங்களுக்கு முன்பு இருந்த ஜாதிக் கொடுமைகள் இப்போது அதிகம் இல்லை என்றே சொல்லலாம். பொரு ளாதாரத்தில் உயர்ந்த நிலையை உடைய யாரும் ஜாதி வேறுபாடு காண்பதில்லை. எனவே, ஆதிதிராவிடர் நலத் திட்டங்களை நல்லமுறையில் அமல்படுத்தினால் ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாடு உயர உயரத் ஜாதி வேறுபாடுகள் இறங்கி இறங்கி வந்துவிடும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் தொழில் முனைபவர்களை உருவாக்க 5 இலட்ச ரூபாய் வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது. தொழில்களை துவக்க இளைஞர்கள் முன்வரத் தயங்குகிறார்கள். எனவே மாவட்டந்தோறும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் முகாம்களை நடத்த வேண்டும்.

வேலை வாய்ப்புகளில் 18 சதவீதம் அமல்படுத்தப்படு கிறதா என்பதைக் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். 1988-89 ஆம் ஆண்டு அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்த போது மத்திய அரசின் இலாகாக்களில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு ஸ்பெஷல் டிரைவ் நடத்தி 6 மாத காலத்திற்குள்ளாக 17 ஆயிரம் ஆதிதிராவிடர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றார்கள். அதேபோல தமிழ்நாடு அரசும் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட காலி இடங்களை நிரப்பு வதற்கு ஸ்பெஷல் டிரைவ் ஒன்றை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் தொகுதியிலுள்ள பச்சமலை ஊராட்சி ஒன்றியம் ஒரு ஒன்றியத்தின் அளவைக் காட்டிலும் பெரியதாக உள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு பகுதி யிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல 90 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. மலைப் பகுதி யிலுள்ள குக்கிராமங்களைச் சேர்த்து ஒரு ஊராட்சி யாகவும், தரைப் பகுதியிலுள்ள கிராமங்களைச் சேர்த்து ஒரு ஊராட்சியாகவும் பிரிக்க வேண்டும். அப்போதுதான்



1992 ஏப்ரல், 22] [திரு. கே. கந்தசாமி]

அரசின் திட்டங்கள் மலைவாழ் மக்களுக்கு சென்றடையும். பச்சமலை ஊராட்சி ஒன்றியத்தில் வேப்படி என்ற இடத்தில் உண்டு— உறைவிடப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்களாகிறது. ஆனால் ஒரு துரதிருஷ்டம் என்ன வென்று சொன்னால் அந்த உறைவிடப் பள்ளிக்கு மின்சார இணைப்பே இதுவரை கொடுக்கப்படவில்லை. அதனால், இரவில் மாணவர்கள் படிக்க முடியாமல், மாணவர்களின் தேர்ச்சி மிகவும் பின்தங்கி உள்ளது.

இடப்பாடி என்ற கிராமத்துக்கு வளைச்சகல்பட்டி யிலிருந்து பாதை அமைக்காத காரணத்தினால் 6 கிலோ மீட்டர் தூரம் மலையில் ஏறித் தான் செல்ல வேண்டி உள்ளது. குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. காரணம், ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு ரிக் கொண்டுசெல்ல பாதைவசதி இல்லை. அங்குள்ள குட்டையில் இயற்கையாகக் கிடைக்கும் நீரை மலைவாழ் மக்களும் ஆடு மாடுகளும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே வற்றாத நீர் ஊற்று இருப்பதால் இடப்பாடி மேல் பாலாற்றங்கரை, கீழ் பாலாற்றங்கரை மலைவாழ் மக்கள் பயன் அடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த வேண்டும். மேலும், அங்கே வருவாய்த் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை 2 ஏக்கர், 3 ஏக்கர் அளவில் பயிர் செய்துவரும் மலைவாழ் மக்களை அந்த இடத்தி லிருந்து காலி செய்ய வேண்டுமென வனத்துறை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். இந்த மிரட்டலைத் தடுப்ப துடன் அந்த நிலங்களை மலைவாழ் மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும்.

வேப்படி பாலக்காடு மலைவாழ் மக்கள் விளைவிக்கும் காய்கறிகளை தலைவாசலுக்குக் கொண்டுவந்துதான் விற்கவேண்டும். மலைவாழ் மக்கள் நலம் கருதி, தலை வாசலிலிருந்து வேப்படி பாலக்காட்டுக்கு அண்ணா போக்குவரத்துக் கழக டவுன் பஸ் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஆதிதிராவிட நலத் திட்டங்களை உள் ளாட்சித் துறையும் கூட்டுறவுத் துறையும் நிறைவேற்று கின்ற காரணத்தால் இங்கே நான் ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1972-ல் ஏற்படுத்தப்பட்ட பிறகு கடந்த 20 ஆண்டுகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பல்வேறு பகுதிகளிலே இருந்து இருக்கின்றார்கள். 1979-ல் மத்திய அமைச்சரவையில் கூட இரண்டு பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்னும் இரண்டே இரண்டு

பதவிகளைத் தான் அவர்கள் வகிக்காமல் இருக்கிறார்கள். ஒன்று, சென்னையில் மேயர் பதவி, இன்னொன்று, மத்திய கூட்டுறவு வங்கிகளில் தலைவர் பதவி. அந்தப் பதவிகளைத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வகிக்காமல் இருக்கிறார்கள். 20 ஆண்டுகளாக சென்னை மேயராகவோ, அல்லது மத்திய கூட்டுறவு வங்கி தலைவராகவோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் யாரும் இடம் பெற முடியவில்லை. நாம் காவல் நிலையங்களுக்குச் சென்றால், சப்-இன்ஸ்பெக்டர் தலைக்கு மேலே "உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்" என்ற வாசகத்தைப் பார்க்கிறோம். எனவே, இந்த ஆட்சியில் முடியாவிட்டால், வேறு எந்த ஆட்சியில் முடியும் என்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) செய்ய வேண்டும். சென்னை மேயர் தேர்தல் நடைபெற்றால் சுழற்சி முறையில் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் மேயராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கிற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.**

**திரு. இராம. இராமநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய மக்களின் தனிப்பெரும் தலைவியாக விளங்கி, அவர்களின் முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் அயராது உழைத்து, எதிரிகளையெல்லாம் நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள், ஏசியவர்களையெல்லாம் இன்றைக்கு வீசியெறிந்து, என்னுடைய உயிர் எனக்கு வெல்லம் இல்லை. இந்தத் தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு நான் என் இன்னுயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன், இந்த ஏழையெளிய மக்களுடைய நல்வாழ்வு தான் என்னுடைய இலட்சியம் [illegible] சொல்லிக் கொண்டிருக்கிறார்! அப்படி [illegible] பாடுபட்டுக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற தியாக தெய்வத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 22 [திரு. இராம. இராமநாதன்]

மகாமகம் கண்டிருக்கிற மகத்துவ தாயே, உன்னுடைய பொற் பாதம் தொட்டு வணங்குகிறேன். நின் வரவால் என்னுடைய தொகுதி இன்றைக்கு புனித பூமியாக மாறி இருக்கிறது என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற, ஒட்டுமொத்தமான மக்கள் ஆதரித்துக் கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களை ஆதரித்துக் கொண்டிருக்கிற ஒரு சமுதாயம், ஒரு சமூகம் என்று சொன்னால் அது ஏழையெளிய ஆதிதிராவிட மக்கள் என்பதை இங்கே நான் மெத்தப் பணிவோடு, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி 100 சதவீதம் 100 பெர்சண்ட்-ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிற, அந்த ஏழையெளிய. தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மக்களுடைய வாழ்விற்காக நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித்தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களையெல்லாம் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை இன்றைக்கு முன்னேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே ஒரு சமுதாயத்தை, ஏழையெளிய மக்களுக்காக ஒரு சமுதாயத்தை, ஆதிதிராவிட மக்களுக்காக ஒரு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிற ஒரே தலைவி நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தான் என்பதைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு காலனி வீடுகளைக் கொடுத்து கொண்டிருக்கிறோம். ஏழையெளிய மக்களுடைய இன்னல்களைப் போக்க வேண்டும். அவர்கள் வயிறார உணவு உண்ண வேண்டும் என்பதற்காக நம்முடைய ஒப்பற்றத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள், எப்படி தான் கும்பகோணத்தில் வாழ்ந்தபோது. ஒருவேளை உணவுக்கு மிகவும் கஷ்டப்பட்டாரோ, அந்தக் கஷ்டத்தை வேறு யாரும் பெறக்கூடாது என்பதற்காக, யார் எப்படி தரக் குறைவாகப் பேசினாலும்— இந்த ஏழையெளிய மக்களை இந்த தொப்பி பிச்சைக்காரனாக்குகிறான் என்று தரக் குறைவாக பேசிய கருணாநிதி கூட இன்றைக்கு தலை குனிந்து நிற்கிற அளவுக்கு, இங்கே நல்ல திட்டத்தை தீட்டி, அந்த ஏழையெளிய மக்கள் உணவு உட்கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய குழந்தைகளை வாழ்விக்க வேண்டும் என்பதற்காக, தமிழகத்திலே இருக்கிற அத்தனை ஏழையெளிய மக்களுடைய பிரதிநிதியாக, இன்றைக்கு ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் சத்துணவுத் திட்டத்தை எப்படி விரிவாக்கி, அருமையான முறையில் கொடுத்துக் கொண்டிருக்

கிறாரோ, அதைப்போல அவர்கள் வாழ்வதற்கு தொகுப்பு வீடுகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அந்த உயர்ந்த எண்ணத்தைப் பெற்று, பல தொகுப்பு வீடுகளை கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் மெத்த பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம் இன்றைக்கு அவர்களுடைய சமுதாயம், ஏழை எளிய ஆதிதிராவிடர்களுடைய அந்த மொத்த மக்கட் தொகையைப் பார்க்கின்றபோது 5 ஆண்டுக் காலத்திலே இந்த ஆட்சியின் நிரந்தரமான முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதை இங்கே நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக நாம் ஒரு இலக்கை நிர்ணயிக்கவேண்டும். அந்த ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்குப் பல தொகுப்பு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று, நாம் ஒரு ஒன்றியத்திற்கு குறைந்தபட்சம் 180, - 200 வீடுகள் என்று இன்றைக்கு வைத்துக்கொண்டிருக்கிறோமே, அது இந்த அளவிலே போகின்றபோது, 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 800 வீடுகள்தான் கட்டிக் கொடுப்பதற்கு முடியும். ஆனால் நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஒரு ஆண்டிற்கு ஒரு ஒன்றியத்திலே கிட்டத்தட்ட 500-லிருந்து 1,000 வீடு களைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல், இங்கே ** ஆட்சிப் பீடத்திலே........ (குறுக்கீடு)

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ** என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

**திரு. இராம. இராமநாதன் :** காலத்தினுடைய விளைவால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்தப் பணிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காரர்களால் இங்கே தாட்கோவின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதை நிறுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட 3 ஆண்டுக்காலமாக தாட்கோவிலிருந்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இங்கே நாம் யூனியனிலிருந்து கட்டிக் கொடுக்கிறோம். நம்முடைய ஒப்பற்ற தலைவி,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நாம் யூனியனிலிருந்து கட்டிக் கொடுக்கின்ற வீடுகளோடு இணைத்து, தாட்கோவிலிருந்தும் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு நல்ல ஸ்கீமைப் போடுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று என்னுடைய பணிவான கருத்தை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நாம் பல்வேறு சலுகைகளை கொடுத்து இருக்கிறோம். கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அந்தச் சலுகைகளை உரிய முறையிலே முழுமையாகப் பயன்படுத்துகிறார்களா என்பதைப் பார்க்கின்றபோது நிச்சயமாக அந்தச் சமுதாயத்திலே அவர்கள் நல்லவிதமான கல்வியறிவைப் பெற வேண்டும். அந்தக் கல்வியறிவோடு மட்டுமல்லாமல் பொருளாதார அடிப்படையில் அவர்கள் மேம்பாட்டினை எய்தவேண்டுமென்கின்ற அடிப்படையில் நாம் பல திட்டங்களை இன்றைக்குப் போட்டுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள், அந்தத் திட்டங்கள் உரிய முறையிலே நம்முடைய ஏழை எளிய ஆதிதிராவிட மக்களை அடைகின்றதா, அதைச் சரியான முறையில் அதிகாரிகள் அங்கே கொண்டு சேர்க்கின்றார்களா என்பதை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பணிவான முறையிலே கேட்டுக் கொள்கிறேன். அந்த நல்ல முறையிலே நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது சரியான முறையில் நடைபெறுகிறதா என்பதை நாம் கருத்திலே எடுக்கின்ற நேரத்தில், இந்தத் திட்டங்கள் ஆதிதிராவிட மக்களுக்குப் போய்ச் சேர்கின்ற நேரத்தில் அவர்கள் வாழ்க்கையில் நிச்சயமாக மேம்பாட்டினை எய்துவதற்கு இன்றைக்கு சரியான நிலைமை வரும் என்பதை இங்கே நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இங்கே பல இடங்களுக்குச் சென்று ஆதிதிராவிட மக்களைப் பார்க்கின்ற போது அந்தப் பகுதியிலே அவர்கள் யாராவது இறந்துவிடுவார்களேயானால், அவர்களை எடுத்துச் செல்வதற்கு, சுடுகாடு வசதியில்லை. சுடுகாட்டிற்குப் போகின்ற பாதையில் சரியான வசதியில்லை. அப்படிப்பட்ட கோரிக்கைகளை நம்மிடம் கொடுத்து, அதை முதலில் செய்து கொடுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக ஒப்புயர்வற்ற தங்கத் தலைவி, தானைத் தலைவி, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள், ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்றபோது, மிகவும் கஷ்டமான முறையில் வாழ்ந்தாலும், இறந்துவிட்ட பிறகு அவர்களுக்கு நல்ல மரியாதை கிடைக்கின்ற அளவிற்கு அவர்கள் செல்வதற்கு

நல்ல பாதையை நல்ல சுடுகாட்டை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அவர் பாதம் தொட்டு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியாக இல்லாவிட்டாலும்கூட, என்னுடைய யூனியன், கும்பகோணம் யூனியனில் இருக்கின்ற குடிதாங்கி பகுதியிலே நடைபெற்றிருக்கின்ற நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பாட்டாளி மக்கள் கட்சிக்கும், எங்களுக்கும், இங்கே நடந்திருக்கின்ற இந்த நிகழ்ச்சிக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள். அப்படி சம்பந்தமில்லை என்று சொன்னால், இங்கே அவர்களுடைய நிறுவனத் தலைவராக இருக்கின்ற டாக்டர் இராமதாஸ் அவர்களுக்கு அந்த குடிதாங்கிப் பகுதியில் என்ன வேலை என்பதை மட்டும் இங்கே நான் தெளிவாகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக அங்கே வந்திருக்கிறீர்கள்? அங்கே முகாமிட்டிருப்பதாக நீங்கள் சொன்னீர்களே ஒரு நாள் முழுவதும் நீங்கள் முகாமிட்டிருப்பதால் மட்டும் அந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற இடர்ப்பாடுகளை நீங்கள் களையமுடியாது. அந்தச் சமுதாயத்திலே இடர்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்களே நீங்கள்தான். நீங்கள் தான் அந்தச் சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அழகான முறையிலே நம்பிக்கையோடு நம்பிக்கை உணர்வோடு ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிற இனங்களை எல்லாம் நீங்கள் பிரித்துப் பார்த்து அங்கே ஒரு சண்டையை மூட்டிவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் உங்களை நேரடியாகப் பார்க்கின்றேன். அங்கே ஒரு நல்ல வழி இருக்கிறது. அந்தச் சாலை வழியாக அந்த ஆதிதிராவிட மக்கள் செல்கிறார்கள். அதிலே அவர்கள் செல்வதிலே உங்களுக்கு என்ன தவறு? அவர்கள் செல்ல வழிவிட வேண்டியது தானே? நீங்கள் அந்தப் பகுதியிலே மறித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதை ஒப்பற்ற தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நேரிடையாகப் பார்த்து இருப்பதன் விளைவு இன்றைக்கு நம்முடைய அருமை உறுப்பினர் சொன்னது போல 80 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 80 பேர் யாரைச் சேர்ந்தவர்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தயவு செய்து எண்ணி பார்க்க வேண்டும். இதில் திசை திருப்பிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள். ஆகவே தயவுசெய்து சரியான கருத்துக்களை இந்த அவைக்கும்



மக்களுக்கும் கொடுக்க வேண்டும். பல இடங்களில் தவறான செய்திகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தவறான பாதையிலே சென்று கொண்டிருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

அதைப்போன்று இன்றைக்கு எஸ்.சி. மாணவர்களுடைய ஹாஸ்டலிலே 160 ரூபாய் ஒரு மாணவனுக்கு கொடுக்கிறார்கள். அந்தப் பணம் நிச்சயமாக போதாது நாளையதினம் சட்டமன்றத்தைப் பற்றி பேசுகிறபோது எங்களுக்கே போதவில்லை என்று பல உறுப்பினர்கள் இங்கே சொல்ல இருக்கிறார்கள். ஆனால் அந்த ஹாஸ்டலில் இருக்கிற மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். 160 ரூபாய் அவர்களுக்கு நிச்சயமாக பற்றாது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதை மட்டும் தெளிவாக கேட்டுக் கொண்டு, பல கம்யூனிட்டி ஹால்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதே போன்று இறுதியாக ஒப்புயர்வற்ற தங்கத் தலைவி எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வேத ஆகம கல்லூரியை இன்றைக்குத் தொடங்கி, அதில் 18 விழுக்காடு ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கி அவர்களும் கோயிலிலே பூஜை செய்ய வேண்டும். அவர்களும் நல்ல இதயத்தோடு பணியாற்ற வேண்டும், அவர்களும் அனைத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக 18 சதவீதம் கொடுத்திருக்கிற அந்த தங்கத் தலைவியை நீடூழி வாழ வேண்டும் என்று சொல்லி பொற்பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய சுய லாபத்திற்காக ஒன்றைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுய லாபத்திற்காகவெல்லாம் கேட்க வேண்டாம். (குறுக்கீடு) நீங்களே சொல்லி விட்டீர்கள் சுய நலத்திற்காக கேட்கப் போகிறேன் என்று, சுய நலத்திற்காகக் கேட்க வேண்டாம் திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற தமிழ்ச் சமுதாயம் ஒரு காலத்திலே கேட்பாரற்று அடிமைப்படுத்தப்பட்டு, நலிவுற்ற நிலையில் இனி தலை தூக்க முடியாது என்ற விரக்தி மனப்பான்மையில் இருந்த நேரத்தில் இதோ விடிவெள்ளி முளைத்தது காண் என்று இருட்டிலே இருந்து கிளம்பிய ஒரு விடிவெள்ளி தன்னுடைய 95 வயது வரையில் ஏறத்தாழ 70 ஆண்டு காலம் பொதுப் பணியிலே ஈடுபட்டு தள்ளாடித் தடுமாறுகின்ற நிலையிலேயும், நோய்கள் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் வறுத்திக்

கொண்டிருந்த நிலையிலேயும், அந்த நோயைப் பற்றி யெல்லாம் கவலைப் படாமல், இடைக்காலத்தில் தமிழகத் திலே பரவி விட்ட மூட நம்பிக்கை என்ற தொற்று நோயை நீக்குவதுதான் தன்னுடைய தலையாய கடமை என்று சூளுரைத்துக்கொண்டு எதிர்த்தவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு கருத்து மழை பொழிந்து, இந்த நாட்டை மண்ணை சமுதாயத்தை பண்பாட்டை வீணாகாமல் காப்பாற்றினாரே அந்த வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், அவர் பிறந்த இந்த மண்ணில் அவருடைய பாதையில் இன்றைக்கு அடி எடுத்து வைத்துக் கொண்டு வந்திருக்கும் நான் வணங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி, டாக்டர் முதல்வர் அவர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிற அவர்களை நினைத்து, அவர்கள் இருக்கும் இடம் நோக்கி நான் நன்றி சொல்ல கடமைப்பட்டவன் ஆவேன். காரணம் என்னவென்று சொன்னால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த என்னை பெரியார் மாவட்டத்தினுடைய இந்து அற நிலையத் துறையினுடைய வாரியத்தினுடைய தலைவனாக நியமனம் செய்திருக்கிறார்கள். சரித்திரத்திலே எங்காவது உண்டா? பார்த்து இருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) மேட்டுக்குடியைச் சேர்ந்தவர்கள் தான் மேம்பாடான அந்த அற நிலையத்திற்குள்ளே போக முடியும், அந்த பதவி வகிக்க முடியும் என்ற காலம் ஒன்று இருந்தது. நான் வணங்கிக் கொண்டிருக்கிற அந்த கடவுள் என்னை அந்த இடத்தில் 26 ஆண்டுக்காலமாக ஆதிதிராவிட நலத் துறையில் ஆசிரியராக இருந்த என்னை தலைமை ஆசிரியராக இருந்த என்னை சட்டமன்றத்திலே நின்று கொண்டு பேசக்கூடிய வாய்ப்பு எனக்கு கொடுத்திருக் கிறார்களே அந்த தெய்வத்தை வணங்குகிறேன். நன்றியைச் சொல்லுகிறேன்.

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது "

என்பதுபோல, " நன்றி மறப்பது நன்றன்று " என்று சொல்வதைப் போல நானும் என் குடும்பமும் என்றும் என் தாயை வணங்குவோம் என்று சொல்லி உரையை ஆரம் பிக்கிறேன், நம்முடைய மரியாதைக் குரிய மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றக்கூடிய பாங்கினை பெற்றவர். அவர்கள் நம்முடைய ஆதி திராவிட நலத்துறைக்காக ஏறத்தாழ இந்த ஆண்டு 114 கோடியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித்



பிற்பகல் 12-05.

தலைவி அவர்களுடைய நல்லாசியோடு இன்றைக்கு 114.03 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இதுமட்டு மல்லாமல் இத்துறைக்கு சாட்டியக் தொகையாக ரூ. 0.50 கோடியும், மானியக் கோரிக்கை 43-ன் படி பல்வகையிலே 0.72 கோடியும் மானிய கோரிக்கை 61-ன் படி மூலதனச் செலவு 7.70 கோடியும், 61-ன் படி கடன்களும் முன் பணங்களும் 0.91 கோடியுமாக 123.86 கோடி ரூபாயினை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஆதிதிராவிட மக்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக இங்கே நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் சொன்னபடி வேத ஆகம பள்ளி கல்லூரிகளை மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய விடிவெள்ளி இன்றைக்கு ஆரம்பித்து அந்த வேத ஆகம பள்ளிகளில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்களை அங்கே பயிலவைத்து அவர் களையும் கோயிலுக்குள்ளே சென்று நீ அர்ச்சகராக இருக்கலாம் என்று ஆணை பிறப்பித்த தலைவி தான் நாங்கள் வணங்கும் கடவுள் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அளவு மிகச் சிறப்பான முறையிலே திட்டங்களை. மக்களுக்காக தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏராளமாக, போட்டு செயல்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாக பல பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. சிறப்பாக இயங்குகிறது. இருந்தாலும் குறிப்பிட்ட காலங்களில் அதாவது ஜூன் மாதம் முதல் வாரத்திலேயே குழந்தைகளுக்கு புத்தகங்கள் கிடைக்கின்ற விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவுகளை பிறப்பித்து வெல்ஃபேர் ஆபிசுக்கு மே மாதம் கடைசியிலே போய்ச் சேர்ந்து ஜூன் முதல் வாரத்திலே புத்தகங்களை வழங்க வேண்டும். அதேபோன்று இன்றைக்கு மாண்புமிகு அம்மா நான் வணங்கும் கடவுள் அவர்கள் ஏறத்தாழ 30 மாணவர் விடுதிகளை திறக்கவிருக்கிறார்கள். இந்த விடுதிகளையும் ஜூன் முதல் வாரத்திலேயே திறக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அன்றைக்கிருந்த அரசு ஏறத்தாழ டிசம்பர், ஜனவரி மாதத்திலே இந்த விடுதிகளைத் திறந்தார்கள். ஒரு ஆண்டுக்கு 12 திங்களுக்கு போடக்கூடிய திட்டம் ஏறத் தாழ 3 திங்கள் தான் பயன்படுகிறது. மக்களுக்குக் கிடைக்கிறது. எனவே உடனடியாக இந்தத் திட்டம், மாணவர்களுக்குச் சேரவேண்டும் என்ற நல்லஎண்ணத்தோடு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் போடுகின்ற திட்டத்தினை அமல்படுத்த வேண்டும். அதற்காக, ஜூன் மாதத்திலே செலக்ட் கமிட்டியை போட்டு விடுதி யைத் திறக்க வேண்டும். அதே போன்று கடந்த ஆண்டு

நம்முடைய பட்ஜெட்டிலே 50 ஆதிதிராவிடர் நல விடுதி களுக்கு நூலக வசதி அளிக்க வேண்டும் என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 902 விடுதிகளுக்கு நாங்கள் கேட்காமலேயே பணத்தை 12, கோடியே 3 இலட்சத்தை அள்ளி வழங்கிய வள்ளல் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். எதற்காகச் செய்கிறார்கள் என்று சொன்னால் பொது அறிவைப் பெறாத ஆதிதிராவிட மாணவர்கள் பொது அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக அனைத்து விடுதிகளிலும் மாணவர்கள் நூல் நிலையங்களிலே சிறப்பான முறையிலே பொது அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நூல் நிலையங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அதே போன்று மாண்புமிகு தமிழக முதல்வர் சிதம்பரத்திலே ஐ.டி.ஐ. நடத்தி வருகிறார்கள். அரசு, தனியார் ஐ.டி.ஐ.-யிலே மாணவர்கள் 18 விழுக்காடுக்கு மேல் சேர முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால் பல குழந்தைகள் இடம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே மாவட்டந்தோறும் அம்மாவின் பெயரில் ஐ.டி.ஐ.-யை ஏற்படுத்தி தொழிற் பயிற்சிக் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.

அதே போன்று ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போன்ற பயிற்சிகளை சென்னையிலே வழங்குகிறார்கள். இதிலே 7,000 ரூபாய் ஒரு பயிற்சியாளருக்கு அளிக்கிறார்கள். இது அதிகமான தொகையாகும். ஆனால் பம்பாய் போன்ற இடங்களில் ஐ.ஏ.எஸ். பயின்ற ஒரு அதிகாரி தான் இதைச் சொல்லிக் கொடுக்கிறார். ஆனால் இங்கே எம்.ஏ., எம்.எட்., பி.ஏ., பி.எட்., படித்தவர்கள் தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்த 7,000 ரூபாயைத் தவிர்த்து ஐ.ஏ.எஸ். பயிற்சி பெற்ற ஓய்வு பெற்ற அதிகாரியை இந்தத் துறைக்கு நியமனம் செய்தால் பயிற்றுவிக்க நலமாக இருக்கும். இங்கே சென்னையிலே இருப்பதைப் போன்று பெரியார் மாவட்டத்திலே, ஈரோட்டிலே மையமாக வைத்து அங்கேயும், மதுரை யிலேயும் இதே போன்று பயிற்சி நிலையங்களை, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., போன்றவற்றில் மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிந்து நான் இதய தெய்வத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோல் உழவு மாடுகள் வழங்க நம்முடைய தாழ்த்தப்பட்ட இன மக்களுடைய (மணியடிக்கப்பெற்றது) பொருளாதாரத்தை மேம்பாடு செய்வதற்காக ஏறத்தாழ 1500 ரூபாய் இலவசமாகவும் 1,500 ரூபாய் வங்கியில்



கடன் வாங்கிக்கொள்ளலாம் என்றும் உத்தரவு அளித்து இருக்கிறார்கள். தேசிய மயமாக்ககப்பட்ட வங்கிகள் அதை மறுக்கின்றன. இவைகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உடனடியாக பணத்தைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இந்தத் துறை தனித் துறையாக இன்றைக்கு விளங்காமல் இருக்கிறது. ரெவின்யூ துறை பீப்புள் இங்கே உள்ளே நுழைந்து விடுகிறார்கள். எனவே, தனியாக டைரக்டர், உதவி இயக்குநர் டெபுட்டி டைரக்டர், பள்ளி தணிக்கை யாளர்கள் மற்றும் பல்வேறு வகையான அதிகாரிகளை மாவட்ட வாரியாக இந்த வெல்பேர் டிபார்ட்மெண்டு பணிக்காக நியமனம் செய்ய வேண்டும்.

அதேபோல் தாட்கோவில் எல்லாம் அந்த நிர்வாகத் தைச் சேர்ந்தவர்களையே நியமனம் செய்ய வேண்டும். தலைமைச் செயலகத்தில் உள்ள ஆதி திராவிட நலத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு அதிலே சூப்பிரிண் டெண்டெண்டாக பதவி உயர்வு செய்து அவர்களுக்கு டி.டபுள்யூ. ஓ. வாக பணி உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு தனி தாசில்தார் பதவிகொடுத்து அதாவது நிலங்களை கையகப்படுத்தும் வேலைக்கு மட்டும் அவர்களை அமர்த்தவேண்டும். அவர்களுக்கு விடுதிபோன்ற பணிகளைக் கொடுப்பதால் அவர்கள் இந்த வேலையை செய்வதால் கால தாமதம் ஆகிறது. 4 (1) நோட்டீஸ் கொடுத்து ஒரு ஆண்டு காலம் கழித்து, 5 என்கோயரி, 6 என்கோயரி என்று போடுகிறார்கள். இதற்கு ஒரு ஆண்டு காலம் ஆகின்ற காரணத்தால் நிலங்களை கையகப்படுத்த முடியாமல் ஒரு ஆண்டு காலம் கால தாமதம் ஆகிறது. இதை வேகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்த அதிகாரிகள் காலதாமதம் செய்வதைத் தடுப்பதற்கு உடனடியாக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு துரித சட்டத்தைப் போட்டு ஒரே ஆண்டில் அல்ல 3 மாதத் திலேயே இந்த நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்று சட்டம் போடவேண்டும்.

ஏன் என்றால் சிலயிடங்களில் கோவை போன்ற இடங்களில் ஒரு கோடி ரூபாய் கொடுத்து, புதுக்கோட்டை போன்ற இடங்களில் கோர்ட் மூலமாக ஒரு கோடி ரூபாய் ஒரு ஏக்கருக்கு கொடுத்து வாங்குகிறார்கள். இது அதிகமான தொகை ஆகும். அதிகாரிகளின் தவறான

செயலால், அவர்களே அந்த நிலச் சொந்தக்காரர்களைக் கூப்பிட்டு கோர்ட்டுக்குப் போ (மணியடிக்கப்பெற்றது) அதிகமான பணம் கிடைக்கும் என்று அதிகாரிகளே சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்ட வட்டாட்சியர், மாவட்ட நல அதிகாரிகள் இந்த மக்களின் நலனுக்காக உழைக்கக்கூடியவர்களாக உத்தமர்களாக, நல்லவர்களாக, தூய்மை நிறைந்தவர்களாக, தொண்டு மனப்பான்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, இந்த மன்றத்தில் மன்றத்து முன்னவராம், மணி சிறந்த கோமானாம், முல்லைப்பூ எடுத்து முகத்திலே எறிவது போல், இந்த சொல்லை சிலம்பாக்கி எங்களை எல்லாம் சொக்க வைக்க வந்து இருக்கின்ற தமிழே, தீந்தமிழே, தென் பாண்டித்தமிழே, எங்களுடைய வாழ்வும், வளமும் உங்களுடைய கையில்தான் என்று சொல்லி நீங்கள் இருக்கும் இடம் நோக்கி வணங்கி எனக்கு இந்த வாய்ப்பு கொடுத்த நல்லவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. புரட்சிமணி.

*திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானிய கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பத்து அம்ச திட்டத்தை நான் உளமாற வரவேற்கிறேன். இந்தத் துறையின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான தொகையை அதாவது 1,14,02,54,000 ரூபாயில் 66 கோடி ரூபாயை கல்விக்காக செலவிடுவது கண்டு நான் மனமாற வரவேற்கிறேன்.

பிற்பகல் 12-15

நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் பேசிய போது இரண்டு தாலுக்காவுக்கு ஒரு தனித் தாசில்தார் உள்ளார். அந்த நிலையை மாற்றி ஒரு தாலுக்காவுக்கு ஒரு தனித் தாசில்தார் என்ற அளவில் அமைக்கவேண்டும் என்று நான் கோரினேன். அதை அவ்வாறு மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மின் இணைப்புக்கு ரூபாய் 25 ஆயிரம் கட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதில் இந்த மக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில்



அந்தத் தொகையைக் குறைத்து ரூ. 15 ஆயிரமாக கொடுத்தால் அந்த மக்களுக்கு அது பயன்பெறும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது ஆதிதிராவிட மக்களுக்கு எனது தொகுதியின் மிகக்குறைந்த அளவே கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. அதை அதிகரித்து வழங்கவேண்டுமாய் நான் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா தரப்படுகின்ற இந்த நேரத்திலே அந்த நிலங்களுடைய சொந்தக் காரர்கள் நீதிமன்றத்திலே தடையுத்தரவு பெற்று விடுகிறார்கள். அதனால் அந்தத் தடையுத்தரவை நீக்க வேண்டுமாய் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தற்போது அனைத்து இனத்தவரும் தலைமைப் பொறுப்புக்களில் உள்ளனர். இந்த நிலையை மாற்றி தலைமைப் பொறுப்புகளில் மட்டும் ஆதிதிராவிட மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்று பல இடங்களில் ஆதிதிராவிட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் பெண்ணாடத்தில் ஒரு மகளிர் விடுதி அமைத்துத் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெண்ணாடம், திட்டக்குடி போன்ற நகரங்களில் உள்ள விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்டித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தீவளூர், மா. புகடையூர் போன்ற கிராமங்களில் மேல்நிலைப் பள்ளிகளை அமைத்துத்தர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஆர். ராஜேந்திரன்.

*திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மீதான மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களை முன் வைக்கிறேன். உலக மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள், ''கஞ்சி குடிப்பதற்கு இல்லார், இதன் காரணங்கள் இவை என்னும் அறிவும் இல்லார்'' என்று பாடிய மகாகவி புரட்சிக் கவியின் கூற்றுக்கு ஏற்ப வாழ்ந்து கொண்டிருந்த, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து இந்திய மக்களாலேயே இழைக்கப்பட்ட கொடுமைகள், ஏமாற்றங்கள், அவமானங்களை அனுபவித்து, தான் பெற்ற துயரம் இவ்வையகம் பெறக்கூடாது என்னும் நல்லெண்ணம் கருதி தனது படிப்பறிவாலும், கனல் கக்கும் வாதத்தாலும் ஆங்கிலேயர்களையும் நமது தேசத்து பெருந் தலைவர்களையும் கலங்க வைத்து ஏற்படுத்தித் தந்த

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான மானியக் கோரிக்கையில் புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில் என்னைப் பங்குபெறச் செய்த அனைத்து நல் இதயங்களையும் வாழ்த்தி வணங்குகிறேன். இந்தத் துறையின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கும், மதம் மாறிய ஆதிதிராவிட கிருஸ்துவர்களுக்கும், பழங்குடியினருக்கும் கல்வித் தரம் உயரவும் தொழில் துறை, விவசாயம் இவற்றில் ஏற்றம் காண்பதன் மூலம் பொருளாதார மேம்பாடு அடையவும் அரசு மேற்கொண்டுள்ள புதிய திட்டங்களை வரவேற்று, இந்தத் துறையின் இட ஒதுக்கீடு கொள்கைகள் ஏற்கப்பட்டு, 42 ஆண்டுகள் நடைமுறையில் இருந்தும், தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கின்ற நிலையை எண்ணி, எனது புதிய கருத்துக்களையும், நடைமுறையில் இருக்கின்ற குறைகளையும் எதிர்காலத்தில் புரட்சித் தலைவி மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் களைய வேண்டுமென்ற எதிர்பார்ப்போடும் இன்றையதினம் ஒதுக்கப்பட்டுள்ள 114.03 கோடி ரூபாயில் 1222 பள்ளிகளையும், 902 விடுதிகளையும் மாநில அரசு நடத்தி வருவதும் இதற்காக 80 சதவீத பணத்தை செலவிடுவதும் வியப்பாகவும் வேதனை தருவதாகவும் உள்ளது. இனிமேல் ஆதிதிராவிட நலப் பள்ளிகள் புதிதாக உருவாக்கப்படுவதை நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இந்த நலப் பள்ளிகள் பொதுக் கல்வித் துறையின் சுமையைக் குறைப்பதாக இருக்கிறதேயொழிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு உதவுவதாக இல்லை. அதனால் இனி வரும் காலங்களில் புதிய பள்ளிகள் அமைப்பதை விட்டுவிட்டு மாணவ, மாணவியர் இல்லங்கள், ஏழைக் குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், 'டி-பார்ம்' 'பி-பார்ம்' போன்ற ஆதிதிராவிட மருத்துவ நல கல்வி நிலையங்கள் அமைத்தல் தொழில் கல்வி மற்றும் பொறியியல் கல்விகளுக்கு ஆதிதிராவிட நல சிறு தொழில் மற்றும் பெரும்தொழில் நிறுவனங்கள் போன்றவை அமைத்து 19 சதவீத இட ஒதுக்கீட்டை நிரப்பத் தகுதியுடையவர்கள் இல்லை என்னும் நிலையைப் போக்க இனி வரும் ஆண்டுகளில் அரசு செயல்பட முழுக்க முழுக்க ஆதிதிராவிடர்கள் பயன் பெறும் அமைப்புகளை நிறுவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் தற்போது 3, 5, 8, 10 சதவீதம் என்ற சொற்ப அளவிலேயே நிரப்பப்பட்டுள்ள இடம் முழுவதுமாக நிரப்பப்பட ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் 12-2(

ஆதிதிராவிட நல தொழிற்சாலைகள் அமைக்கும் பொருட்டு ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான ஆதிதிராவிடர்கள் தன்னிறைவு படைத்தவர்களாக உருவாகக் கூடும்.



மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் இந்த 114.03 கோடி இல்லாமல், 2,50,000 ஆதிதிராவிட குடும்பங்கள் பயன்பெறும் பொருட்டு மேலும் 1992-93 ஆம் ஆண்டில் 293 கோடி செலவிடப்படுகிறது. இப்படி 42 ஆண்டுகளாக பல கோடி ரூபாய்களை ஒதுக்கிய போதிலும் ஆதிதிராவிடர்கள் இன்னும் வீட்டு மனைப் பட்டாவும், மயானப் பாதையும் கேட்டுக் கொண்டிருக்கும் அவலம் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட சமுதாயம் தாழ்ந்தே இருக்க வேண்டுமென்றோ அல்லது தாழ்ந்த சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொள்ளாமலே ஏற்படுத்தப்படுகின்ற பொருளாதாரக் கொள்கையால் எந்த நாடும் வளர்ச்சி அடைய முடியாது என்ற பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாய் மொழிக்கேற்ப நடைமுறையில் இருக்கின்ற தவறுகளைக் களைய புதிய பொருளாதார மேம்பாட்டுக் கொள்கைகள் ஆதிதிராவிட நலத்துறையில் செயல்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால் கடந்த 91-92 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் ரூபாய் 5 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கும் திட்டத்தில் 650 க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட வகுப்பினர் தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டனர் என்ற செயற் குறிப்பினைப் படித்தேன். இந்தத் திட்டத்தில் அரசுக்கோ அரசு உயர் அதிகாரிகளுக்கோ தெரியாமல் தவறு நடந்திருக்குமோ என அஞ்சுகிறேன். என் போன்றோர் அச்சத்தைப் போக்குகின்ற வகையிலும் அரசின் சேவைகள் அனைவருக்கும் தெரிகின்ற வகையிலும் பயன் பெற்றோர் பட்டியலின் விவரத்தைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தால் அரசின் சாதனைகள் என்ன என்பதை மக்கள் அறிவர்.

மேலும் ரூபாய் 7 கோடி செலவில் தனியார் தொழில் முனைவோர் 2000 பேர் இவ்வாண்டில் உருவாக்கப்படுவர் என அறிவித்துள்ள திட்டத்தை வரவேற்கிறேன். இதனால் சுமார் ரூ. 35,000 ஒவ்வொருவரும் கடன் பெற முடியும். இந்தத் திட்டத்தில் கடன் பெற கடந்த ஆண்டு மக்கள் முயற்சி செய்து 7 மாத காலம் அலைந்த பின், படித்த வேலையில்லா இளைஞர் ஒருவர் தொழில் தொடங்க 3,000 ரூபாய் மட்டுமே கடனாகப் பெற்றார். இதையும், எம்.எல்.ஏ. முதன்முறையாக வந்து சொன்ன கருணை அடிப்படையில் கொடுத்துள்ளார்கள். நமது அரசு செய்கின்ற நல்ல வளர்ச்சித் திட்டங்களையும், மக்களுக்கு அளிக்கின்ற நிதியுதவியும் வங்கிகள் மூலம் கடனாகவும் கொடுக்கச் செய்வதன் மூலம் அது செயல் ஆவது இல்லை. ஆக்கமும், ஊக்கமும், அளிக்கக்கூடியதாக இல்லை. அரசுக்கடனுக்கு ஆதிதிராவிட மக்கள் மனுக்கள் செய்தால் ஐநூறு

மாதங்கள் கடனுக்கு அலைந்த பின், தகுதியற்றவர் என்று
வங்கியால் நிராகரிக்கப்படுபவர்களுக்குப் பண விரயமும்,
நேரச் செலவும், ஏமாற்றமும் ஏற்படுகிறது. அதனால் தகுதி
உடையவர்களின் மனுக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட
வேண்டும் என்ற கட்டளையை அரசு நடைமுறைப்படுத்த
வேண்டும்.

தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு இஸ்திரிப்பெட்டி, துணி
தைக்கும் தையல் இயந்திரம், தோல் தைக்கும் தையல்
இயந்திரம் போன்றவை நேரடியாகக் கொடுக்கும்
திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

அந்த நேரம், கறவை மாடு வாங்கக் கொடுக்கப்படும்
ரூ. 3,200-இல் ரூ. 1,600 அரசு உதவித் தொகையாக
வும், மீதி வங்கிக் கடனாகவும் உள்ளதால் வங்கிகள் கடன்
கொடுக்கும் என்ற நம்பிக்கை இல்லை. கடந்த ஆண்டுத்
திட்டத்தில் உழவு மாட்டுக் கடன் ரூபாய் 3,000
பெற முயன்றவர்களுக்கு பேங்கு ஒப்புதல் இல்லாமல் பலர்
கடன் பெற முடியாமல் உள்ளார்கள். இந்தச் சிரமத்தைப்
போக்க மாடுகள் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம்
வாங்கிக் கொடுத்து, பேங்கு மூலம் வசூல் செய்ய ஏற்பாடு
செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

மேலும் பல மாணவ மாணவியர் விடுதிகளில் ஊழல்
கள் நிறைந்து உள்ளன. காட்டுமன்னார்கோவில் தொகுதி
யில் பெண்கள் விடுதியில் ஒரு நாள் சோதனைக்குச் சென்
றேன். 147 மாணவிகள் இருக்க வேண்டிய நேரத்தில் 72
மாணவிகள் மட்டுமே ஆஜரில் இருந்தார்கள். ஆனால்
அனைவருக்கும் வருகைப் பதிவேட்டில் ஆஜர் செய்து விடுகி
றார்கள். சாதம் போதவில்லை என்று மாணவிகள் குறை
கூறுகிறார்கள். ரசம் மட்டுமே சாதத்திற்கு கொடுக்கப்
பட்டது. அதுவும் சரியான முறையில் சாப்பிடும் அளவுக்கு
இல்லை. 75 மாணவிகளின் அரிசியும் மிச்சமாகியிருக்கும்,
காய்கறிகள் வாங்கும் பணமும் மிச்சமாகியிருக்கும். இந்த
நிலையில் சாப்பாடு போதவில்லை என்ற குற்றச்சாட்டு
வருகிறதே அது நியாயமா என காப்பாளரைக் கேட்ட
போது, என்னை அப்படிச் செய்யத் தூண்டுகிறார்கள்;
நான் உங்கள் பேச்சைக் கேட்பதா? அல்லது சிதம்பரம்
தனித் தாசில்தார் பேச்சைக் கேட்பதா? என்று பதிலளித்
தார். பலமுறை அலுவலகம் சென்றும், தனித் தாசில்தார்
அவர்களைக் காண முடியவில்லை. அங்கிருந்த கணக்க
ரிடம் முறையிட்டேன். அதற்கு அவர் அளித்த பதில்



வியப்பாக இருந்தது. அந்த விடுதி காப்பாளினி ஒரு
வருட அனுபவமே உடையவர் என்றும், அவருக்கு சமாளிக்க
வும் தெரியவில்லை; உங்களுக்கு பதில் எப்படி சொல்வ
தென்றும் தெரியவில்லை; மற்ற வார்டன்கள் திறமை
சாலிகள் என்றும் அங்கு நடக்கிற ஊழல்களுக்கு தானே
பொறுப்பானவர் என்பது போல பதில் அளித்திருக்கிறார்.
இப்படிப்பட்டவர்கள் மீது, நான் எம்.எல்.ஏ., என்ற முறை
யில் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வரும்போது, அதிகாரி
கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற தயவு
தாட்சண்யம் பாராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அதே விடுதியைச் சேர்ந்த 10 மாணவிகள் ஒன்று சேர்ந்து
விடுதி ஒழுங்கீனம் குறித்து தனித் தாசில்தார் அவர்களுக்கு
மனு அனுப்பினர். அதை விசாரிக்க வேண்டிய தாசில்தார்,
அந்த 10 மாணவிகளின் பெயர்களையும் குறித்து எழுதி,
அவர்கள் எல்லாம் உன்மீது குற்றம் சாட்டியுள்ளார்கள்
என்று தெரிவித்துவிட்டு வந்து விட்டார். காப்பாளர்
10 மாணவிகளையும், அவர்கள் பெற்றோரையும் தபால்
மூலம் அழைத்து, ஹாஸ்டலை விட்டு நீக்கி விடுவதாக
மிரட்டி அனுப்பியுள்ளார். இதுபோன்ற ஊழல்கள் அதிக
மாக இருக்கிற காரணத்தால் (மணியடிக்கப் பெற்றது),
உறுப்பினர்கள் கொடுக்கும் குற்றச்சாட்டுகள் உடனடியாக
விசாரிக்கப்பட வேண்டும்.

முன்னாள் பாரதப் பிரதமர் சந்திரசேகர் அவர்கள்,
தனது 2—1—1991 நாளிட்ட கடிதத்தில் எஸ். சி., எஸ்.டி.
இன மக்கள் தங்கள் குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரி
களுக்கு மேல் முறையீடு செய்யும் போது, பெரும்பாலும்
ஆதிதிராவிடர்களுக்கு ஆதரவான பதில்கள் வழங்கப்பெற
வேண்டுமென எல்லா மாநில அரசுகளுக்கும் தெரிவித்
தார்கள். இன்றைய பாரதப் பிரதமர் திரு. பி. வி.
நரசிம்மராவ் அவர்களும் தனது 21—10—1991 நாளிட்ட
கடிதத்தில் அனைத்து மாநில அரசுகளுக்கும் வழங்கிய
ஆணைகளின்படி 19 சதவீத சலுகைகள் நேரடியாக நியமனம்
மூலமும், பதவி உயர்வு மூலமும் 31—3—1992-க்குள்
நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க,
இதை நிறைவேற்ற போதிய கால அவகாசம் நமது
தமிழக அரசுக்கு இல்லையென்றாலும், 1992-ஆம் ஆண்டு
முடிவிற்குள் நடைமுறைப் படுத்தும்பொருட்டு, இந்த
ஆண்டை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
ஆண்டாக அறிவித்து, புரட்சித் தலைவி டாக்டர்
முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்த வேண்டுமெனக்
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மேலும், 1992-93 ஆம் ஆண்டின் மற்றைய
கொள்கைகள் வரவேற்கத்தக்கவையாகவும் பாராட்டத்தக்க
வையாகவும் உள்ளவை என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து
அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. செழியன்:

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்துணைத் துறைகளைத் தன்னகத்தே வைத்திருந்தாலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையில் அதிக ஆர்வமும் தனிக்கவனமும், செலுத்தி வருகின்ற அன்பின் சின்னமாக, பண்பின் சிகரமாக, பாசத்தின் பிறப்பிடமாக, நேசத்தின் இருப்பிடமாக, நெஞ்சகத்தின் கலங்கரை விளக்கமாக, வஞ்சகமே இல்லாத வாஞ்சை கீதமாக அகில உலக தாய்க்குலத்தின் ஒப்பற்ற தலைவியாக, சிங்கத்தின் முழக்கம், சிறுத்தையின் பாய்ச்சல், வேங்கையின் கம்பீரம், புயலின் வேகம், இடியின் கர்ச்சனை, மின்னலின் வீச்சு, அருவியின் ஓட்டம், தென்றலின் தெம்மாங்கு, நிலவின் குளிர்ச்சி இத்துணைக்கும் எத்துணைச் சக்திகள் உண்டோ, அத்துணை சக்திகளையும் தன்னகத்தே ஒருங்கே அமையப் பெற்ற ஒப்பற்ற ஒரே தலைவி மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்.

தாய்குலத்தின் சந்திரனும் அம்மாதானே: தமிழ் குலத்தின் குல விளக்கும் அம்மாதானே; வாய் மணக்க புகழ்ந்திடுவோம் நம் அம்மாதானே; வரலாற்று பொன்னேட்டிலும் நம் அம்மாதானே.

புத்தனின் போதனைகளாக, ஏசுவின் பைபிளாக, நபிகள் நாயகத்தின் குரானாக இவர்களின் மொத்த உருவமாக திகழ்பவர் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி டாக்டர் முதல்வர் அவர்கள்.

இந்திய சரித்திரத்திலேயே குப்தர் காலம் ஒரு பொற்காலம்; அன்பே உருவான மௌரிய மாமன்னன் அசோகனின் காலமும் ஒரு பொற்காலம். அதற்குப் பின்னாலே அகில உலகமே பார்த்து பாராட்டத்தக்க அளவிற்கு தாய்குலத்தின் தாமரையாம் தமிழகத்தின் தனிப் பெரும் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியும் ஒரு பொற்காலமே.

சிந்தனை திறத்தாலும் சுந்தரச் சொல்லாலும்
எங்கள் தாய்மார்களிடையே கப்பிய சாராய
இருளைக் கழுவித் துடைத்திட்ட காவியத் தலைவியே !
காசில்லா ஏழையும் களிப்போடு வாழ்த்திடும்
மாசிறுமணியே!
மகான்களே போற்றும் அறங்காவல் தலைவியே
அறிவுக் குன்றின் அணையா விளக்கே அன்புக் கடலின்



அமுதப்பிரவாகமே.
ஞானியத் தமிழகத்தின் சந்திரோதயமே
உங்களைத் தரிசித்ததற்குப் பின்தானே தெய்வங்கள்
உண்டென்ற தெளிவே எங்களுக்கு வந்தது.

அந்த மனித தெய்வம் இருக்கும் திசைநோக்கி வணங்கி 1992-93 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது பேச விழைகிறேன்.

பிற்பகல் 12–30

இந்த வரலாற்றுப் புகழ் மிக்க இம்மாமன்றத்தில் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த நான், ஆதிதிராவிடர் நலம் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு நான் எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்தின் புனிதர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிவுலக மேதையும் இந்தியாவின் கோடான கோடி ஆதிதிராவிட மக்களின் ஞானஒளியாம் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரைக் கொண்ட திருச்சி, சென்னை, மதுரை, கோவை ஆகிய சட்டக் கல்லூரிகளை இணைக்கும் வகையில் டாக்டர் அம்பேத்கார் பல்கலைக் கழகத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வரவேண்டுமென்ற கோரிக்கையை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த. சமூக சமத்துவத்தை எய்திட, சென்ற 40 ஆண்டிற்கும் மேலாக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டிருந்தாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிவுடன் எம்மின மக்கள் உண்மையான மேம்பாட்டை அடைய 10 அம்சத் திட்டத்தை அறிவித்து, நடப்பு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 114.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, நீதியை நிலை நாட்டியுள்ளார்கள். இதற்காக என் சார்பாகவும் எம்மின மக்களின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வித் துறையின் மூலம் மேம்பாடடைய அரசு பணி நியமனங்களில் 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 18 சதவீத இட ஒதுக்கீடு செய்திருந்தாலும் கூட அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை நாம் பார்ப்போமேயானால் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. எனவே, இட ஒதுக்கீட்டினை 20 சதவீதம் ஆக உயர்த்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்கள் ஒருவரால்தான் முடியும் என்பதனை இந்த மாமன்றத்திலே பேரவைத் தலைவர் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பணி நியமனங்களில் அரசு நடத்தும் நேர்முகப் போட்டியில் தகுதியானவர்கள் கிடைக்கப் பெறாமல் அப் பணியிடங்கள் காலியாகவே விடப்பட்டுள்ளன. துறை அதிகாரிகளோ, வேலை வாய்ப்பு அலுவலகங்களோ, வேலை தேடித்தரும் தனியார் ஏஜென்சிகளோ, தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து, காலிபணியிடங்களை நிரப்பிட வேண்டுமாய் இம்மாமன்றத்தின் மூலம் அறங்காவல் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, அரசின் திட்டங்களைச் சரியாகத் தெரிந்திட வசதி வாய்ப்பு குறைந்த அளவே இருப்பதால், ஆதி திராவிட மக்களுக்கு அரசின் பலன்கள் முழுமையாகச் சென்றடைவதில்லை. எனவே, அரசு அதிகாரிகளே ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதிகளுக்கு நேரிடையாகச் சென்று, தகுதியானவர்களுக்கு அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் சென்றடைய உதவி செய்திட வேண்டும். அப்போதுதான் அவ்வின மக்கள் தங்கள் வாழ்வில் மேம்பாடடைய அது ஏதுவாக இருக்கும் என இம்மாமன்றத்தின் வாயிலாக மனித தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் ஆதி திராவிடர்களுக்கென அரசால் ஒதுக்கப்பட்ட விகிதாச்சார முறையைப் பின்பற்ற வேண்டுமென்று எம்மின வழக்கறிஞர்கள் சார்பாக இம்மாமன்றத்தின் மூலம் வானத்து மட்டும் மனம் படைத்திட்ட எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு நீண்டகால கோரிக்கையான அந்த மக்களுடைய குறைகளை நீக்குகின்ற வகையில் அடுத்த நிதி ஆண்டிலாவது திருச்சியை இரண்டாகப் பிரித்து என்னுடைய தொகுதி பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவள்ளுவர் மாவட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் இந்த வேண்டுகோளைச் சமர்பிக்கின்றேன்.



இம்மாமன்றத்தின் மூலம் காவிரியைத் தன் பூவிரியும் வார்த்தைகளால் அழைத்து வந்த கொடையளி, செங்கோல், வேந்தர்க்கொளி குடியோம்பல், நான்கும் உடையனாம் என்ற குறளுக்கு ஏற்ப ஆட்சி செய்யும் தமிழ்நாட்டின் ஜோதியாகவும் நீதி தேவதையாகவும் விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதங்களில் எனது சார்பாகவும் தொகுதி மக்கள் சார்பாகவும் வேண்டுகோளை நான் சமர்ப்பிக்கின்றேன். பெரம்பலூர் நகரின் முக்கிய குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்திடும் கொள்ளிடம் கால்வாய்த் திட்டத்தைத் துரிதமாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து பெரம்பலூர் மக்களின் தாகம் தீர்த்திட இம்மாமன்றத்தின் மூலம் ஜீவ நதி போலவும் வேதவிதி போலவும் கன்னித் தமிழகத்தை காவல் காத்திடும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வராம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் பணிவான வேண்டுகோளை கனிவான புரட்சித் தலைவியின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பெரம்பலூர் வட்டம் பூலாம்பாடி பேரூராட்சி விவசாயிகளின் நீர்ப்பாசனத் திட்டத்திற்குக் கடந்த 15-8-1958 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு, கிடப்பிலே இருக்கின்ற கலிங்க நீரோடைத் திட்டத்தை விரைவில் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று பெரம்பலூர் வட்டத்தில் அடங்கிய தொண்டமாந்துறை கிராமத்தின் நீர்ப்பாசனத் திட்டமான ராமக்கா கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோன்று பெரம்பலூர் அரசுக் கலைக் கல்லூரியும் அரசு தொழில் நுட்பக் கல்லூரியும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் தொழிற்பேட்டையும் அமைத்துக் கொடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மகத்தில் பிறந்து ஜகத்தை ஆளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இந்த மாமன்றத்தின் மூலம் நான் மீண்டும் கேட்டுக்கொள்வது திருவள்ளுவர் மாவட்டத்தைப் பிரிக்கவேண்டும் என்றுதான். எத்தனையோ பிரச்சினை களைக் கொண்ட எனது தொகுதியின் பிரச்சினைகளை இந்த அவையிலே எடுத்துச் சொல்ல காலம் போதாமை யால் எனது உரைக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு, இந்த வரலாற்றுப் புகழ் மிக்க இந்த மாமன்றத்தில் என் போன்ற சாதாரண இளைஞர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் எங்களது இயக்கத் தின் தலைவி, பொதுச் செயலாளர் புதுமைத் தலைவி, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி என்று சொல்லி முடிக்க முடியாத காரணத்தால் செந்தமிழ் முதல்வர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது சார்பாக வும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் தங்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் விடைபெற்று அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஆதி திராவிடர் பழங்குடி மக்களுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இன்றைய தினம் ஆதிதிராவிடர்கள், பழங்குடி யினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக கல்வியின் மூலம்தான் அவர் களை முன்னேற்ற முடியும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து யாருக்கும் வித்தியாசம் இல்லாத கருத்தாகும். ஆனால் அவர்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கும் முயற்சிக்க வேண்டும். அதாவது இரண்டு விதமாகப் பிரித்துப் பார்க்கவேண்டும். ஒன்று கல்வி வளர்ச்சி. இன்னொன்று பொருளாதார வளர்ச்சி. அப்படி இரண்டாகப் பிரித்துப் பார்க்கிறபோது இன்றைய தினம் கல்வி வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள், அதற்காக ஒதுக்கப்பட்டி ருக்கிற தொகைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இன்றையதினம் ஏறி வருகின்ற விலைவாசி அடிப்படையில் அந்தப் பொருளாதாரத் திட்டங்களை மதிப்பிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து இன்றைய தினம் ஆதிதிராவிட நல விடுதிகள் என்பது, அதாவது மாணவர் விடுதிகள் என்பவை சுகாதார மற்ற வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அப்படி சுகாதாரமற்ற நிலைமையில் பயிலுகிற மாணவர்கள் அங்கே இருக்கக்கூடிய நிலைமையை மாற்றுவதற்காக நல்ல காற் றோட்டம் உள்ள இடமாகப் பார்த்து அவற்றில் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களைக் கட்டுவதற்கு இன்னும் கூடுதலாக அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்த விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர் களின் தரத்தை உயர்த்துவதற்கும், பரிட்சை நேரங்களில் மாலை வகுப்புகளை நடத்தி அவர்கள் அதிக மதிப்பெண் பெறுவதற்கும் அவர்களின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அவர்கள் படித்து முடித்த பிறகும் இன்னும் படித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் அரசு நிர்ண யித்துள்ள இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அனைத்துத் துறைகளிலும் அந்த வாய்ப்புகள் தரப்பட்டிருக்கிறதா என்று பரிசீலித்து அவற்றை விரைவாக வழங்கவேண்டும். அது தனியார் துறையாக இருந்தாலும் அல்லது எந்தத் துறை யாக இருந்தாலும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த இடம் நிறுத்தப்படாமல் வழங்குவதற்கு அரசு முன் வரவேண்டும். அதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில், அவர் களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் ஒரு இலக்கை நிர்ணயித்து அந்த இலக்கைப் பூர்த்தி செய்வதற்கான விசேஷ ஆணை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் என்னுடைய தொகுதியில் திருவாரூர், கீவளூர், கொறடாச்சேரி, அம்மையப்பன் போன்ற பகுதிகளில் உள்ள ஆதிதிராவிட நல விடுதிகள் ரொம்ப மோசமான நிலைமை யில் இருக்கின்றன. அவற்றைப் பொறுத்த வரையில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான முழு முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அது மிகவும் பிற்படுத்தப் பட்ட பகுதி. வெள்ளக் காலங்களில் மழையால் பாதிக்கக் கூடிய பகுதி அவை. ஆகவே அதிக முன்னுரிமை கொடுத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைய தினம் அடித் தளத்தில் இருக்கின்ற அவர்களை பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்கு நிதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் இப்போது சர்வோதயத்தின் மூலம் நிலம் வாங்கி வழங்கப்படுகிறது. அப்படி சர்வோதயத்தின் மூலம் நிலம் வாங்கி வழங்கப்படுவதைவிட அந்த திட்டத்தை மேற்கொண்டு சர்வோதயத்திற்கு மத்திய அரசு மையத்தின் மூலம் வாங்கி கொடுப்பதைப்போல அரசு நேரடியாகவே அதை வாங்கிக் கொடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல டிரஸ்ட் நிலங்கள், கோயில் நிலங்கள், தரிசு புறம்போக்கு நிலங்கள் இப்படியான நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு ஒரு விசேஷதிட்டத்தை உருவாக்கவேண்டும்.

அதேபோன்று தனியார் நிலங்கள் குத்தகை சாகுபடி செய்கின்றார்கள். அவர்கள் நிலத்தை விற்கிறபோது, அவர்களிடத்திலே காசு கிடையாது. ஆகவே அந்த நிலத்தை வேறு ஒருவரிடம் விற்றுவிடுகின்றார்கள். அப்போது அவர்கள் நிலம் அற்றவர்களாக மாறுகிறார்கள். ஆகவே அந்த நிலத்தை அவர்கள் நேரடியாக வாங்கிக்கொள்வதற்கு அரசு முழுத் தொகையையும் கடனாக வழ்ங்கி அந்த நிலத்தை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்ட நேரத்திற்கு மேலேயே கொடுத்துவிட்டேன்.

திரு. வே. தம்புசாமி : அதே போன்று தஞ்சை மாவட்டத்தைப் பொறுததவரையில், மிகவும் தாழ்வான பகுதி. பள்ளமாக இருக்கக்கூடிய பகுதி. ஏறத்தாழ 7 மாத காலம் நீரால் சூழப்பட்டிருக்கக்கூடிய பகுதிகளாக இருக்கிறது. அந்தப்பகுதியிலே குடியிருக்கக்கூடிய அரிசனங்கள், அவர்களுக்கு இன்னமும் கூட, அவர்கள் குடியிருப்புகளுக்கு ஒரு நல்ல பாதை கிடையாது. இன்னமும் சேற்றிலும் சகதியிலும் நடக்கவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அப்படி பள்ளமாக இருக்கின்ற பகுதியில், அரசு விசேஷ கவனம் செலுத்தி அவர்கள் குடியிருப்புக்குச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று குடிநீர், அவர்கள் குடியிருக்கின்ற பகுதிக்கு இன்னமும் குடிநீர் வழங்கப்படாமல் இருக்கிறது. அரசு விரைவாக மதிப்பீடு செய்து அவர்களுக்கு குடிநீர் குழாய்கள் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, சுடுகாட்டிற்கு, இன்னமும் அவர்கள் தனியார் நிலங்களிலேயே பிரேதங்களைத் தூக்கிச் செல்லக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தவிர்த்து, விரைவாக சுடுகாட்





டிற்கு பாதை அமைப்பதற்கான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக தஞ்சை மாவட்டம் மிகவும் தாழ்வான பகுதி, பள்ளமான பகுதி. இன்னமும் சகதியிலேதான் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே விசேஷ திட்டமாகச் செய்ய வேண்டும். அதேபோன்று அரிஜனங்களுக்கு நிலம் எடுக்கிறபோது ஏறத்தாழ 8 ஆண்டுக் காலம் ஆகிறது. அப்படி 8 ஆண்டுக் காலம் கடத்தாமல், ஓராண்டுக் காலத்திற்குள் அந்த நிலத்தை எடுத்து அவர்களுக்கு குடி மனைப் பட்டா வழங்குவதற்கான சட்டத் திருத்தத்தை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற குடியிருப்புகளுக்கு குடிமனை பட்டாக் கொடுக்கிறபோது, இன்றையதினம் அந்த வருவாய் நீதி மன்றத்தில் மனு போட்டால் திருப்பி அனுப்பப்படுகிறது, தொடர்ந்து இதையே இந்த சட்டமன்றத்திலே கூறிக் கொண்டிருக்கிறேன். நிலச் சொந்தக்காரர்களுடைய சம்மத கடிதம் வந்தால்தான் பட்டா வழங்கப்படும் என்று திருப்பி அனுப்பப்படுகிறது. இந்த நிலச் சொந்தக்காரர்களுடைய சம்மதக்கடிதம் பெறவேண்டாம் என்று அரசு விரைவாகப் பரிசீலித்து ஆணைப் பிறப்பித்து அந்தப் பட்டா வழங்கப்பட வேண்டும். ஒரு குடிமனை எடுப்பதற்கு மனு போட்டால், அந்த மயிலாடுதுறையிலே இருக்கின்ற அந்த வருவாய் நீதிமன்றத்திலேயிருந்து என்ன பதில் வருகிறது என்று சொன்னால் '' நீங்கள் குடியிருக்கின்ற மனையினுடைய சொந்தக்காரருடைய சம்மத கடிதம் வாங்கி அனுப்பினால்தான் உங்களுக்குப் பட்டா கொடுக்க இயலும் '' என்று சொல்லி இப்போதும் நூற்றுக்கணக்கான மனுக்கள் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே அரசு நிர்ணயித்திருக்கின்ற, குடிமனைப் பட்டா என்பது அந்த இலக்கு என்பது நிறைவேற்ற முடியாது என்ற நிலை இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது). அதை நிறைவேற்ற முடியாது. அதனாலே தான் அந்த சரத்தைப் பரிசீலித்து விரைவாக அரசு ரத்து செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடி உரிமைப் பட்டா என்பது அவர்கள், அங்கே இருப்பவர்களாக இருந்தால், நிலமற்ற விவசாயத் தொழிலாளராக இருந்தால் அல்லது கிராம கைவினைஞர்களாக இருந்தால் அவர்களுக்கு உரிமை கொடுக்கின்ற குடி உரிமை பட்டாதான் அது. ஆக அப்படி தகராறு இருந்தால், விளக்கமாக தெரிவித்தால், நீங்கள் யார் யாருக்கு என்று தெரிவிக்க வேண்டிய தில்லை. என்னிடத்திலே பட்டியலைக் கொடுங்கள். நானே அதை நேரடியாகவே கவனிக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு நன்றி. இப்போது குடியிருக்கின்றவர்கள் பட்டா கேட்கிறபோது இன்னமும் திரும்பி

வந்துகொண்டிருக்கிறது. அதிலே 4-வது சரத்தில்— அந்த குடிமனைப்பட்டா கோருகின்ற பார்ம்ஸ்-ல் 4-வது சரத்து— ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை மட்டும் நீக்கினாலே போதுமானது. அப்படி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே குடிமனை ஓராண்டு காலத்திற்குள் வழங்கப் படவேண்டும். இன்னும் ஏறத்தாழ நூற்றுக்கணக்கான கிராமங் களிலே அந்த குடிமனைப் பட்டாக்கள் கோருகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை காலம் கடத்துவதால் ஒரு காலனியிலே குடியிருப்பவர்கள் பத்து பேர்களுக்கு நிலம், மனை தேவை என்று கேட்டால் அது 8 ஆண்டுக் காலம் முடிந்த பிறகு அதுவே 25 பேர்களாக மாறுகிறது. ஆகவே, அது முடியாது என்று திரும்பி வருகிறது. அப்படி பண்ண வேண்டும்.

இன்றைய தினம் இந்த இலாகா துரிதமாக செயல்படுவதற்கு அமைச்சர் அவர்கள் முழு முயற்சி எடுத்து செயல்பட வைக்க வேண்டும். ஒரு தபால் எழுதினால்கூட காலத்தில் அந்த தபாலுக்கு பதில் கிடைப்பதில்லை. என்ன தகவல் என்று தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதினால்கூட அப்படியான நிலைமைகள் இருக்கின்றன இவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கைமீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. தா. பொன்னுவேலு.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 31 வது மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தமிழகத்தின் காவல் தெய்வம், ஏழைகளின் இதயத் தெய்வம் நான் வணங்கும் மனிதத் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையினைத் துவக்குகிறேன்.

மலரும் மலரெல்லாம் மணப்பதில்லை, மணம் வீசும் பூக்களெல்லாம் இறைவனின் சன்னதியைச் சென்றடைவதில்லை. அதுபோல, பூமியில் பிறப்பெடுப்பவரெல்லாம் நற்பெயர் எடுப்பதில்லை. நிலைத்த புகழோடு வாழ்ந்ததும் இல்லை. அப்படி புகழோடு வாழ்ந்தாலும் மக்கள் மனதினிலே நிலையாக நிலைத்திருப்பதில்லை. ஆனால் இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவும், ஆற்றலும், அரவணைக்கும் அன்பான பாங்கும், மன்னித்தருளும் மனப்பக்குவமும், நினைத்ததை முடிக்கும் செயல்பாடும், மாற்றாரும் மருளும் வல்லமை ஏற்ற



எளிய பாட்டாளி மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பெற்று 5½ கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

" அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை "

என்ற வள்ளுவனின் வரிகளுக்கு புரட்சித் தலைவியின் பெருந் தன்மையே ஒரு புது இலக்கணமாக திகழ்கின்றது.

"தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"

என்று பாடிய பாடல்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் இலக்கணமாக விளங்குகின்றார்கள் என்றால் மிகையாகாது.

"நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத செருக்கு"

என்று பாரதி பாடிய பாடலுக்கு ஏற்ப புரட்சித் தலைவி. பொன்மனச் செல்வி பெண்களுக்கு உறுதியும், உயர்வினையும், ஊக்கத்தையும் ஊட்டும் உயர்வான உள்ளத்தை பெண்ணினத்தின் பெருமைதனை பறைசாற்றுகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதியின்படி ஏழை எளியத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்து, தாலிக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் எடுத்த எடுப்பிலே மதுவிலக்கை அமுல் படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தமிழகத் தாய் மார்கள் நன்றியினை காணிக்கையாக்குகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை அடக்கியும், தீவிர வாதிகளின் கொட்டத்தை அடக்கியும் காவல் துறையில் சிறப்பான திட்டத்தை கொண்டு வந்து நாட்டின் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

காவிரி நீர் பங்கீட்டில் நடுவர் மன்ற தீர்ப்பைப் பெற்ற தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு அயராது பாடுபட்டு வருகிற தம்முடைய புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

கல்வியிலே ஓர் ஆசிரியர் பள்ளி ஈராசிரியர் பள்ளியாக உயர்த்தியமைக்காக மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். மாநிலத்தில் 1400 இடைநிலை ஆசிரியர் பதவி ஏற்படுத்தி, 20 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப் படும் என்று அறிவித்திருப்பது பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது.

3 கோடி ரூபாய் அளித்து, 64 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்டம் தீட்டியுள்ளார்கள். மாணவர்கள் இடையிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டால் மீண்டும் தொடருவதற்கு பள்ளிச்சாரா கல்வித் திட்டத்தை கொண்டு வந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடன் வாடிக்கிடந்த பயிர்கள் எல்லாம், வறண்டு கிடந்த ஏரிகள் எல்லாம் பசுமை பெற்று, நீர் நிறைந்து பொலிவுற்றன.

பெண்கள் சமுதாயத்திலே உட்யுபெற, பெண்கள் மேம்பாடு திட்டத்தையும், விவசாயிகள் தங்களுடைய உடமை நிலங்களை சரியாகவும், முழுமையாகவும் அறிய, பட்டா, பாஸ் புத்தகம் வழங்குதல் போன்ற நிலப்பதிவேட்டு மேன்மை திட்டத்தையும் கொண்டுவந்துள்ளது, புரட்சித்தலைவி அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

சென்னை சட்டக்கல்லூரியை டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரியாக பெயர் மாற்றியதும் அவரது பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவித்ததும் அவருடைய பெருந்தன்மையைக்காட்டுகின்றது என்றால் அது மிகையாகாது.

புரட்சித் தலைவி நலத்திட்டத்தின் மூலம் தொலைகோடியில் உள்ள கிராம மக்கள் மருத்துவ வசதி கிடைக்கச் செய்தது இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நடத்தப்படாத ஒரு சிறந்த திட்டமாகும்.

ஏைழயெளிய விவசாய மக்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது சிறப்புமிக்க செயலாகும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, சிறப்பு தன்னிறைவுத் திட்டம், சாலை வசதிகள், வீட்டு வசதிகள், மகளிர் மேம்பாடு, ஆதி திராவிட பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன்களை காத்துவரும் தமிழகத்தின் காவல் தெய்வம் அவர்களுக்கு நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, எனது தொகுதியின் கோரிக்கைகளைக் கூற விழைகின்றேன்.

தமிழகத்திலேயே எனது தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதியாகவும், சாலை வசதிகள் இல்லாத கிராமங்களும், பேருந்து வசதியே இல்லாத ஊர்களும், குடிநீர் வசதி இல்லாத குக்கிராமங்களும் நிறைந்த தொகுதியாகவும் இருக்கிறது. மருத்துவ வசதி இல்லாத சில ஊர்களிலே மக்கள் படும் துன்பங்கள அளவிட முடியாது. என்னுடைய தொகுதியிலே ஆன்ை முருக்கல்குடி கிராமத்திலே இருக்கின்ற சுகாதார நிலையம்



வாடகைக் கட்டிடத்தில் இருப்பதனால், அங்கே பணி புரிகின்ற
மருத்துவர்கள் சரியாக மருத்துவமனைக்கு வந்து கவனிப்ப
தில்லை என்ற குறை பொதுமக்களிடமிருந்து வந்து கொண்டிருப்
பதனால், அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான சுகாதார
நிலையத்திற்குக் கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கை
யினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதல்வரவர்களைப்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலே கீழப்பெரம்பலூர் கிராமத்
திலே ஒரு துணை சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்க வேண்டு
மென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது வரகூர் தொகுதியில் வேப்பூர், பரவாய், கல்லை,
ஓலைப்பாடி போன்ற கிராமங்களில் சுமார் 100 ஏக்கர் நிலப்
பரப்பில் சுண்ணாம்பும் கிடைக்கிறது. இந்தச் சுண்ணாம்புக் கல்
சிமென்ட் தயாரிக்கவும், பேப்பர் மற்றும் பீங்கான்கள் செய்வதற்
கும் பயன்படுகிறது. இதை பள்ளிப்பாளையம், பாண்டிச்சேரி,
வாலையார், கரூர், திருநெல்வேலி, டால்மியாபுரம் போன்ற இடங்
களுக்கு தனியார்கள் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள்.
இந்தப் பகுதியிலே சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்தி சிறு
பீங்கான் தொழிற்சாலை ஒன்றை நிறுவினால் அந்தப் பகுதியில்
உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வசதியாக இருக்கும்
என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்
என்னுடைய தொகுதியில் இருக்கின்ற எரையூர் சர்க்கரை ஆலையி
லுடைய கச்சாப் பொருளைக் கொண்டு, கரும்பினுடைய சக்கை
களைக் கொண்டு, ஒரு மினி காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்
தினால், வேலையில்லாமல் பரிதவிக்கும் அந்த மக்களுடைய
பொருளாதார நிலையை மேம்படுத்த முடியுமென்று இந்த நேரத்
தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஆலத்தூர் ஒன்றியத்திலே இலுப்பைக்குடிக்கும் கொளத்
தூருக்கும் இடையில் ஒரு பாலம் அமைத்துத் தருமாறு மிகப்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூருக்கும் இலுப்பைக்
குடிக்கும் இடையில் மருதையாற்றில் ஒரு பாலம் அமைத்தால்
தான் அந்தப் பகுதி மக்கள் அரியலூர் சென்று, பெரம்பலூர்
சென்று தங்கள் அத்தியாவசியத் தேவைகளையும், மருத்துவ
வசதியையும் செய்து கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில்
சொல்லி, அங்கே பாலம் ஒன்றை அமைத்துத் தரும்படி மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.
பெண்ணக்கோணத்திலிருந்து வடக்கலூர் வழியாகச் செல்லும் கீழ
மத்தூர் செல்லும் சாலை குண்டும் குழியுமாக மிகவும் மோசமான
நிலையில் உள்ளது. இந்தச் சாலையைச் சீரமைக்க ஆவன செய்யு
மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எரையூர் சர்க்கரை
ஆலை அருகாமையில் ஓடுகின்ற சின்னாற்றின் குறுக்கே அணை
தடுத்து, விவசாயத்தைப் பெருக்க பாசன வசதி செய்து தருமாறு
அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக்கொண்ட திருவள்ளுவர் மாவட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அத்தியூர் கிராமத்தில் உள்ள ஏரி வெள்ளாற்று நீர் வரத்து இல்லாமல் வறண்டு கிடக்கிறது. பல ஆண்டுக் காலமாக வெள்ளாற்றில் நிறைந்த தண்ணீர் வந்தும் ஏரி நிரம்புவது இல்லை. எனவே கீழக்குடிக்காடு அருகாமையில் உள்ள வெள்ளாற்றில் ஒரு மொட்டை குழுங்கு கட்டி, அந்த நீர் ஒழுங்காக வந்துசேர இரண்டு பக்கமும் கருங்கல்லால் ஆன கரைகள் அமைத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விவசாயத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ஆர். சிங்காரம்) : உறுப்பினர் அவர்கள் 2 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மேலும் என்னுடைய தொகுதியில் சுமார் 13 கிராமங்கள் தீப்பிடித்து எரிந்துள்ளன. அந்த மக்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித்தர ஒரு சிறப்பான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

மேலும் தாட்கோ நிறுவனத்தில் மானியத்திற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை மீண்டும் அந்த நிறுவனத்திற்கே ஒப்படை செய்யப்படுகிறது. காரணம் என்னவென்றால் இன்றைக்கு அதை நல்லமுறையில் பயன்படுத்த முடியாமல், வங்கிகள் கடன்கொடுக்க முன்வராத காரணத்தால், அந்த வங்கிகளில் மானியத்திற்காகக் கொடுக்கப்பட்டத் தொகை திரும்பவும் தாட்கோ நிறுவனத்திற்கே செல்லுகிறது. ஆகையால் அந்த மானியத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் படித்த இளைஞர்களுக்கு ஒரு பயிற்சி கொடுத்து, தனிப் பயிற்சி என்ற அளவில் ஏற்படுத்தி, நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே, சட்டமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறியதற்கு இணங்க, 18 விழுக்காடு நிரப்பப்படாத சில துறைகள் இருக்கின்றன. அந்தத் துறை



களிலே எல்லாம் 18 சதவீதத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல சுடுகாடுகள், இடுகாடுகள் என்று இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிராமப்புறங்களிலே இல்லாமல், இறந்த மனிதனுடைய சடலத்தை நல்லமுறையில் மரியாதையாக எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிலைமை இருந்தும், இப்படிப் பட்ட அவல நிலைமைக்கு இன்னும் ஆளாகிக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய அன்பு வேண்டுகோளாக வைக்க விரும்புவது, அவர் களுக்கு சுடுகாட்டுக்குச் செல்ல வசதியும் மயான வசதியும் செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்) : நானும் தங்களை விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக இலவசப் பட்டா வழங்குவதில் நில உடைமையாளர்கள் 'ஸ்டே' வாங்கிவிடுகிறார்கள். தடை ஆணையின் மூலம் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கின்ற சலுகைகள் தடைப்பட்டுப் போகின்றன. ஆகவே, இலவச பட்டா வழங்க நிலம் எடுக்கும்போது இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க சரியான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அவர்களுக்கும் ஏதாவது வழிவகைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைமீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே நம்முடைய குறிப்பிலே இருக்கிற கணக்குப்படி 94 இலட்சம் பேர்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று இருக்கிறது. இதைவிட அதிகம் இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் 94 இலட்சம்தான் இருக்கிறது. இந்தக் கணக்கு 1981 ஆம் ஆண்டுக் கணக்கா என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தக் கணக்கை

மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இந்த 94 இலட்சம் மக்களுக்கும் இன்றைக்கு இந்த மானியத்தின் மூலமாக 114.03 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை ஒதுக்கி அவர்கள் பொருளாதாரத் துறையிலே, கல்வித் துறையிலே சகலத் திலும் எல்லா வகையிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு—இந்தப் பணம் போதாமல் இருந்தாலும், இன்னும் கொஞ்சம் கொடுக்க வேண்டிய நிலைமை இருந்தாலும்—இன்றைக்கு இருக்கிற பொருளாதாரத்திலே ஏராள வுக்கு இதை வைத்து பல காரியங்களைச் செய்ய முடியும்.

இந்த மக்களுக்கு இருக்கிற கஷ்டங்களை நான் ஏற்கெனவே இங்கே பலமுறை சொல்லியிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசியமாண்புமிகுஉறுப்பினர்கள் எல்லாம் அவைபற்றி தெளிவாகக் கூறினார்கள். ரோடு வசதி, சுடுகாட்டு வசதி பற்றி மிகவும் அழுத்தந்திருத்தமாகப் பேசினார்கள். இவை எல்லாம் மிகவும் வேதனைக்குரியவை. சென்ற முறையிலேகூட நான் பேசும்போது சொன்னேன். மதிப்பிற்குரிய அம்மாள் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்து அம்சத் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த பத்து அம்சத் திட்டத் டத்தை அறிவித்து ஓராண்டு முடியாவிட்டாலும் அது முடிந்த மாதிரிதான். வரக்கூடிய இரண்டு ஆண்டுக்குள்ளாக ஒவ்வொரு ஊரிலேயும், அரிசன மக்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ அங்கே எல்லாம் அவர்களுக்கு ரோடு வசதி, சுடுகாட்டுக்கு இடம், சுடு காட்டுக்கு பாதை வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு வசதி, கல்வி வசதி இப்படிப்பட்ட வசதிகளை நாம் செய்து கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று ஒரு திட்டத்தை, அதாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுகிறோம் அல்லவா, அதைப்போன்று மூன்றாண்டுத் திட்டத்தைப் போட்டு, இந்த 3 ஆண்டுகளுக்குள்ளாக அவர்களுக்கு ரோட்டுப் பிரச்சினை, சுடுகாட்டுப் பிரச்சினை, குடிநீர் பிரச்சினை இல்லை என்ற நிலையை உருவாக்கித் தருவோமானால் அந்த மக்களுக்கு நாம் மிகப்பெரிய காரியங்களைச் செய்தவர்களாவோம் என்பதை இந்த நேரத்திலே இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற் காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி ஒரு திட்டத்தைத் தயார் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் நாம் சலுகைகள் அளிக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அன்றையதினம் வெள்ளையர்களுடைய ஆட்சிக் காலத்திலே சாதிக் கொடுமையின் காரணத்தினாலே அவர்கள் மதத்தை மாற்றிக் கொண்டாலாவது அந்தச் சாதிப் பிரச்சினை தீராதா என்ற எண்ணத்திலே அவர்கள் மதம் மாறி னார்கள்.





பிற்பகல் 1-00

இப்போது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகையை, இந்த அரிசன மக்களுக்கு எப்படிக் கொடுக்கிறோமோ, அந்த அடிப்படையிலேயே அவர்களுக்கு கொடுக்கும் நிலைமையை உருவாக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அவர்கள் படிப்பதற்காக 1,722 பள்ளிகள் மொத்தமாக இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய குழந்தைகள் ஆண் பெண் இருவரும் 2,57,048 பேர் இருக்கிறார்கள். இது இல்லாமல், தமிழகத்தில் இருக்கிற எல்லாப் பள்ளிகளிலும் அரிசனக் குழந்தைகள், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படித்து வெளியில் வந்தவுடன் ஆண்களுக்காக 10 ஐ.டி.ஐ.யும், பெண்களுக்காக 2 ஐ.டி.ஐ.யும் (அதாவது தொழில் பயிற்சிக் கல்லூரி) நாம் வைத்திக்கிறோம். ஆனால் எல்லா பிள்ளைகளும் அதிலே சேரு வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. அவர்கள் படித்து வெளியில் வந்தவுடன் இதுபோன்ற பயிற்சிக்குப் போகவும் முடியா மல், தொழிலும் செய்ய முடியாமல், மீண்டும் தன்னுடைய தகப்பனாருடைய தொழிலான உழவுத்தொழில் செய்யமுடியாம லும் வரப்பு வெட்ட முடியாமலும் கஷ்டப்படுகிற நிலைமையை உருவாக்குகிற காரணத்தாலே, அவர்கள் விரக்தியடைந்து என்ன செய்யலாம் என்று தெரியாமல் வேறுவிதமான நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. இந்த தொழில் பயிற்சி நிலையங்கள் ஆண்களுக்கு என்று 10 இருப்பதை இந்த ஆண்டிலே 5 உயர்த்தி, 15 ஆக உயர்த்த வேண்டும். அதேபோல் பெண்கள் இப்போது அதிக அளவில் படித்து வெளியில் வருகிறார்கள். அந்த இரண்டு பெண்கள் தொழில் பயிற்சி நிலையத்தை 5 ஆக உயர்த்தவேண்டும். அதை இந்த நடப்பு ஆண்டிலேயே செய்து கொடுத்தால், அவர்கள் கொஞ்சம் அதிகமான பேர் சேர்ந்து படிக்க வாய்ப்பாக இருக்கும்.

எந்தத்துறை மானியக் கோரிக்கை வந்தாலும், அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு தனியாக ஒரு மருத்துவக் கல்லூரி, ஒரு இன்ஜினியரிங் கல்லூரி, ஒரு விவசாயக் கல்லூரி என்று ஒவ்வொரு துறையில் உள்ளவர்களுக்கும் ஆரம்பிக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று ஆதி திராவிடர்களுக் கும் தனியாக ஒரு இன்ஜினியரிங் கல்லூரி, ஒரு மருத்துவக் கல்லூரி, ஒரு விவசாயக் கல்லூரி இப்படி ஆரம்பித்தால் அதில் 75 சதவீதம் பேர் அரிசனக் குழந்தைகளைச்சேர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். 15 சதவீதம் பின்தங்கியோர், 10 சதவீதம் முற்பட்டவர்கள் என்று சேர்ந்து படிக்க இடம் கிடைக்கும் நிலைமை ஏற்படும். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலவர் அவர்களிடம் பேசி நல்ல நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, பாடப்புத்தகங்கள் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஜுன் மாதம் 3 அல்லது 5 தேதிகளில் பள்ளிகள் திறந்தால், 10-ந் தேதிக்குள் அந்தக் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டிய புத்தகங்களைக் கொடுத்துவிட வேண்டும். அப்படி இருந்தால்தான் அது நன்றாக இருக்கும். அதுபோன்று பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டும். நூற்றுக்கணக்கான ஹாஸ்டல்கள் இருந்தாலும், அவர்களுக்கு போதிய இடவசதி கிடைப்பதில்லை. இந்த மானியக் கோரிக்கை புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள இந்த ஆண்டு இலக்கான 40 ஹாஸ்டல்கள் திறப்பதாகக் குறிப்பிட்டிருப்பதில், நான் விசாரித்த வகையில் 10 குறைக்கப்பட்டுவிடும் என்று கேள்விப்பட்டேன். அந்த 10-ஐக் குறைக்காமல் இந்தப் புத்தகத்தில் என்ன இலக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறதோ அதை அப்படியே செய்து 40 ஹாஸ்டல் ஆரம்பிப்பதற்கான நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். நாங்கள் எல்லாம் சுதந்திரம் வாங்குவதற்கு முன்பும் பின்பும் ஹாஸ்டலில் தான் படித்தோம். நான் சிதம்பரம் நந்தனார் ஹாஸ்டலில்தான் படித்தேன். அப்போது காலையில் கஞ்சியை துவையலுடன் சேர்த்துக் கொடுப்பார்கள். மத்தியான வேளைகளில் நெய்யுடன் சாப்பாடு போட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை அப்போது இருந்தது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் நாம் கஞ்சி கொடுப்பதில்லை. இட்லி, தோசை, பொங்கல், உப்புமா போன்றவைகளைக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் சில விடுதிகளில் மாவு அரைக்கும் கிரைண்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல விடுதிகளில் கிரைண்டர்கள் கொடுக்கப்படவில்லை. சில இடங்களில் இதை வாங்கினால் அதிகச் செலவாகிறது என்று சொல்வதாக அறிகிறேன். அதை தயவுசெய்து மாற்றி எந்தெந்த விடுதிகளில் மாவரைக்கும் கிரைண்டர்கள் இல்லையோ அத்தனைக்கும் கிரைண்டர்கள் வாங்கிக் கொடுத்தால் அந்தக் குழந்தைகள் இட்லி சாப்பிட்டுவிட்டு பள்ளிக்குச் செல்கிற நிலைமை உருவாகும். எனவே அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

இப்போது 25 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இதில் ஆய்வுக் கூடங்கள் கட்டாயமாக இருக்க வேண்டும். ஆய்வுக் கூடம் இல்லாமல் இருந்தால் இன்னொரு இடத்திற்குச் சென்று நேரடியாக விஷயங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே அந்த மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

துப்புரவுத் தொழிலைச் செய்பவர்களின் குழந்தைகள் 1,500 பேர் நமது மாநிலத்தில் படிப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கான செலவு முழுத் தொகையையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. ஆகவே எங்கெங்கெல்லாம் பெரிய நகரங்கள்



இருக்கின்றனவோ அந்த மாவட்ட தலை நகரங்களில் இந்தருப்புரவு தொழில் செய்கிற பெற்றோர்களுடைய குழந்தைகளையும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து, அவர்களை மீண்டும் அந்த தொழிலைச் செய்யவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்து எல்லா பெரிய நகரங்களிலும் துப்புரவுத் தொழில் செய்யும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு பள்ளிகள் ஆரம்பித்து அதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்று மத்திய உதவி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொடுக்கும்போது, ஏனோ தெரியவில்லை, இந்த சாதியினுடைய கோளாறா என்றும் தெரியவில்லை. அவர்களுக்கு சம்பளம் நிறைய கொடுக்கிறோம்.

பிற்பகல் 1-05

ஆனால் அதிலே படித்துவிட்டு வெளியே வரக்கூடிய குழந்தைகளை நாம் வெளியே அழைத்துக் கொண்டு போய் கல்லூரிகளிலோ, தொழில் கல்லூரிகளிலோ சேர்ப்பதற்காக கொண்டு போனால் மார்க் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒரு திட்டத்தை, பரிசு திட்டத்தை அறிவிக்க வேண்டும். எந்தப் பள்ளியிலே படிக்கக் கூடிய குழந்தைகள் நல்ல திறமை வாய்ந்தவர்களாக வருகிறார்களோ அந்தப் பள்ளியிலே சொல்லி கொடுக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் பரிசு கொடுக்கிறோம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தால் அந்த குழந்தைகளுக்கு நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கான நிலைமை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் தொண்டு நிறுவனங்கள். அரிசன சேவா சங்கம் மதுரையில் இருக்கிறது. அந்த அரிசன சேவா சங்கம்தான் என்னை பள்ளிக்கூடத்திற்கே அனுப்பியது. 1940, 1942 ஆம் ஆண்டு நாங்கள் சிறு பிள்ளையாக இருக்கும்போது, மூன்றாம் வகுப்புக்கு பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால், தொண்டு நிறுவனம்தான். அந்த தொண்டு நிறுவனம்தான் என்னை பள்ளிக்கு அனுப்பினார்கள். அவர்கள் நடத்தக்கூடிய பள்ளிகளில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு, அவர்கள் வைத்திருக்கக்கூடிய ஹாஸ்டலில் உள்ள குழந்தைகளுக்கு இப்போது நாம் வெறும் எழுபது ரூபாய் மட்டும்தான் கொடுக்கிறோம். அதைச் சற்று உயர்த்தி, தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகிற, தனியாரால் நடத்தப்படுகிற விடுதிகளில் தங்கி படிக்கும் குழந்தைகளுக்கு ரூ. 130 அளவிற்காவது பணம் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு பொருளாதாரம். பொருளாதாரத்திலே நாம் இன்னும் சற்று முன்னுக்கு வரக்கூடிய நிலைமைகளை உருவாக்க வேண்டும். ஏனென்றால் பொருள் இருந்தால், படிப்பு இருந்தால் அங்கே சாதி இல்லை. பொருள் இல்லாமல், படிப்பு இல்லாமல் இருந்தால் அங்கேதான் சாதிக் கொடுமை இன்றைக்கும் தாண்டவ மாடிக் கொண்டிருக்கிறது. நானே சில இடங்களுக்குச் சென்ற போது பார்த்திருக்கிறேன். சில இடங்களில் திண்ணையில் உட் கார விடாமல் சிலர் திடீரென்று சேரை போட்டுவிடுவார்கள். எங்கள் வீட்டிலேகூட சிலபேர் வேலை செய்கிறார்கள். சேர் போட்டு திண்ணையில் உட்காராத அளவிற்கு நிலைமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏன் சொல்லுகிறேன் என்றால், பொருளாதாரத்திலே அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவ தற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இதற்காகத்தான் ஆடுகளை வாங்கிக் கொடுக்கிறம். அதற் காகத்தான் பால் மாடுகளை வாங்கிக் கொடுக்கிறோம். அதற் காகத்தான் உழ்வு மாடுகளை வாங்கிக் கொடுக்கிறோம். அப்படி வரும்போது பால் மாடு வைக்கிறோம். இந்த பால் மாட்டுக்கு ஒரு மாட்டுக்கு ரூ. 200 என்று இலக்கு வைத்து மாடு வாங்கி கொடுத்துக் கொண்டிருக்கிறாம். அதிலே பாதி மானியமாகவும் மீதி பணத்தை பாங்க் மூலமாக கடன் வாங்கி கொடுத்து தொழில் செய்வதற்கான உதவிகளைச் செய்கிறோம். நல்ல வேளை நான் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். காணவில்லையே என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். இன்னும் யாரிடத்திலே சொல்ல வேண்டுமோ அங்கே சொன்னால்தான் வேலை நடக்கும். இப்போது நம்முடைய மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் இங்கே வந்துவிட்டார்கள். அப்படி ரூ. 3,200 கொடுக்கும்போது அதிலே 1,600 ரூபாயை இனாமாகவும், 1,600 ரூபாயை கடனாகவும் கொடுக்கிறோம். பாங்க் மூலமாகக் கொடுக்கிறோம். சில இடங்களில் அங்கே போனாலே அவர்க ளுக்கு அலர்ஜி ஏற்படுகிறது, என்ன இவர்களுக்கெல்லாம் கொண்டு வருவது என்று. ஏன் இந்த அம்மா திட்டம் போட்டது என்று இப்படி நினைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதே மாதிரி ஆடு வாங்கி கொடுப்பதற்கு உதவி செய்கிறோம். அதுவும் என்னுடைய தொகுதியில் இதுவரைக்கும் இந்தக் கொடுமை நடந்ததே இல்லை. நானும் 1957 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். இப்போது உள்ள பல எம்.எல்.ஏ.-க்கள் அப்போது பிறந்து இருக்கவே மாட்டார்கள். பல அதிகாரிகள்கூட பிறந்திருக்க மாட்டார்கள். நான் 1957-ல் இருந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே இந்தக் கொடுமை நடந்ததில்லை. அங்கே மெர்கென்டைல் பேங்க என்று ஒரு பேங்க். விராலிப் பட்டி கிராமத்திலே, அந்தக் கிராமத்துக்கு பக்கத்திலே உள்ள மூன்று ஊர்களைச் சார்ந்த நபர்கள் எங்களுக்கு ஆட்டுப் பண்ணை வேண்டும் என்று சொல்லி, ஏழாயிரம், ஏழாயிரம் சில பேருக்கும்



ஒன்பதாயிரம் ரூபாய் என்று கடன் போட்டார்களாம். கடன் போட்டு இதற்கு வேண்டிய கையெழுத்து வாங்க அங்கே போக, இங்கே போக என்று கிட்டத்தட்ட 800 ரூபாய் செலவழித்திருக் கிறார்கள. இவ்வளவு செலவழித்து இவர்கள் கடன் போட்டிருக் கிறார்கள். பெட்டிஷனைக்கூட வைத்திருக்கிறேன். இத்தனை யும் செலவழித்து அவர்கள் கடன் போட்டு விராலிப்பட்டி மெர்க் கென்டைல் பேங்கில் போய் மனுக்களை எல்லாம் கொடுத்து விட்டார்கள். மனுக்களை எல்லாம் கொடுத்த பிறகு அங்கே கிட்டத்தட்ட 20 இடங்களில் ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்து வாங்கிவிட்டார்கள். 20 இடங்களிலே கையெழுத்தை வாங்கிய பிறகு— அவர்கள் அதற்கு ஏஜென்ட்டுகளை வைத்திருக்கிறார்கள் — அந்த ஏஜென்ட்டுகள் அவர்களைக்கூப்பிட்டுபோய்கையெழுத்து போட்டு விட்டார்கள். கையெழுத்து போட்ட பிறகு— அதற்குப் பிறகு இரண்டு நாள் கழித்து மீண்டும் அந்த ஆட்கள் பணம் கொடுங்கள் என்று கேட்கப் போயிருக்கிறார்கள. அப்படிப் போனால் அந்த மானேஜர் சொன்னாராம், '' உங்களுக்கு பணம் சாங்க்ஷன் செய்யப்படவில்லையே, நீங்கள் போய்விடுங்கள் '' என்று சொல்லியிருக்கிறார். அப்போது நூறு, நூறு ரூபாயைக் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அந்த நூறு ரூபாயைக் கொடுத்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப் பட்டு நான் கொதித்துத்தான் போனேன. ' ஏன் ஐயா இப்படி பண்ணினீர்கள் ? ' என்று கேட்டால் என்னோடு அவர் பேசவே மறுத்துவிட்டார். பிறகு நான் தூத்துக்குடி சென்று அந்த மெர்க் கென்டைல் பேங்க் சேர்மனைப்பார்த்து '' என்ன ஐயா, போயும் போயும் இந்த அரிசனங்கள், தாழ்ந்த மக்கள், ஒரு வேலையும் இல்லாத மக்கள், அந்த மக்களுக்கு அரசு கொடுக்கும் பணத்தி லிருந்து இப்படி பணத்தை எடுத்துக் கொண்டு கடைசியில் அவர்க ளுக்கு, ' வாங்கிய பணத்தை திருப்பிக் கட்டுங்கள் ' என்று நோட் டீஸ் அனுப்பக்கூடிய அளவிற்கு தமிழகத்திலே வருமானால் இதை விடக் கொடுமையான நிலைமை வேறு எந்த மாநிலத்திலே வர விருக்கிறது ? '' என்று கேட்டேன் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அப்பேற்பட்டவர்கள், அந்த பேங்க்கை மூட வேண்டும். அந்த பேங்க்குக்கு யார் தலைவராக இருக்கிறார்களோ, அந்தத் தலைவ ரிடத்திலே சென்று நான் கேட்டேன் '' ஐயா, நான் பொன்னம் மாள், தயவு செய்து எப்படியாவது ஒரு சூழ்நிலையை நீங்கள்தான் உருவாக்க வேண்டும் என்று.

பிற்பகல் 1-10

அந்த பாங்கு கிளை மேலாளரை அழைத்துப் பேசி னேன். இந்த ஏழைகளுக்குக் கொடுத்த பணத்தை முழுவதும் எடுத்துக்கொண்டு இப்போது அவர்கள் மீது நோட்டீஸ் அனுப்புகிறீர்கள் ; இது கொடுமையிலும் கொடுமை என்று அவரிடம் சொன்னேன். அவர்

நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி விட்டு ஒன்றுமே, நடவடிக்கை எடுக்கவில்லை. இது இப்படி இருக்க, நான் இதையெல்லாம் சொல்வதில்லை; ஆனால் இன்றைக்கு ஏனோ மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்பதால் சொல்ல வேண்டுமென்று மனசுக்கு பட்டுவிட்டது.; அதைச் சொல்லித் தான் தீர வேண்டும். நம்முடைய ஆதி திராவிட நலத்துறை அமைச்சரிடமும் சொல்லி இருக்கிறேன். இந்த பணம் கொடுக்கும்போது தாட்கோ மூலமாக பணம் கொடுக்கிறோம். அப்போது ஒரு தொகுதிக்கு, ஒரு யூனியனுக்கு ஒரு கோடி ரூபாய் என்று, பல வேலைகளை செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த உயர்ந்த எண்ணத்தோடு—ஏனென்றால், குடிநீர்ப் பிரச்சினை தீரவேண்டும், ரோடு பிரச்சினை தீர வேண்டும், லைட் பிரச்சினை தீர வேண்டும், சுடுகாட்டுப் பிரச்சினை தீர வேண்டும் எல்லா மக்களுக்கும் என்ற அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அந்த கமிஷ்னர் என்னிடம் வந்தார். அப்போது நான் பலருடன் பேசிக் கொண்டு உட்கார்ந்து இருந்தேன். ''அக்காகிட்ட தனியாக சொல்லவேண்டும்' என்று சொன்னார். ''என்ன தம்பி ?' என்று கேட்டு உள்ளே போனேன். ''அக்கா என்ன விரும்புகிறீர்கள் ?, அக்கா என்ன விரும்புகிறீர்கள் ?'' என்று கேட்டார். நான் இதுபற்றி ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லி இருக்கிறேன். ''என்ன தம்பி, எனக்கு ஒன்றும் புரியலையே ? நான் ஏன் விரும்புகிறேன் ? எனக்கு ஒன்றும் தெரியலையே'' என்று சொன்னேன். ''இல்லை, அக்கா, எல்லா இடத்திலும் நடக்கிறதுதான்; உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்றார். நான், ''உட்காருங்க முருகேசு, இப்படிக் கேட்டுவிட்டாயே, அப்பா ! உனக்கு ரொம்ப தைரியம் தம்பி; இந்தமாதிரி நீ கேட்டுவிட்டாயே ? நான் அரிசனாக இருப்பதால் கேட்டுவிட்டாயா தம்பி ? நான் ரொம்ப வேதனைப் படுகிறேன். நான் தெரு தெருவாக பிச்சை எடுத்தால் கூட, இந்தப் பணத்தை வாங்க மாட்டேன். தயவுசெய்து அஞ்சிக்கொண்டு, பழுது இல்லாமல் வேலையை பாருங்கள்'' என்று சொன்னேன். அப்படி சொன்ன பிறகு அவர் என்ன செய்தார் ? அவர் கிராமங்களுக்குச் சென்று ''நான் என்ன செய்ய ? இந்த பணத்திலே பங்கு கொடுக்க வேண்டும்; எம்.எல்.ஏ.-வுக்கு பங்கு கொடுக்க வேண்டும்; இருக்கிற மேலதிகாரிகளுக்கு பங்கு கொடுக்க வேண்டும்; இதற்கு நான் ஒன்றும் பொறுப்பு இல்லை'' என்று கிராமங்களுக்குச் சென்று, எனக்கு பங்கு கொடுக்க வேண்டுமென்றே அந்த ஒரு அதிகாரி சொல்லி இருக்கிறார். நான் வேறுவிதமாகவும் செய்ய முடியும். நான்



எங்கேயாவது போய் தூக்கிக்கொண்டுகூட கொண்டுவர முடியும். ஆனால், நான் அதைச் செய்யத் தயாராக இல்லை. இந்த அரசுக்கு ஒரு களங்கம் வந்துவிடக் கூடாது. இந்த சட்டசபையிலே மாண்புமிகு முதல்வர் தலைமையிலே நான் ஒரு அங்கம் வகிக்கின்றேன். கடந்த 1957 ஆம் ஆண்டிலிருந்து இப்படிபட்ட ஒரு கொடுமையான நிலைமை எனக்கு வந்ததே கிடையாது. வந்து என்னைக் கேட்டது மாத்திரமல்ல....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய உடனேயே அது பற்றி விசாரணை செய்து, அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** ரொம்ப நன்றி. இதை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரிந்து இருந்தாலும்கூட, இதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற காரணத்தினாலே தான் இதை நான் சொன்னேன். ஆகையினாலே, இப்பேர்பட்ட அதிகாரிகளாலேதான் அந்த ஜனங்களுக்கு நாம் என்ன செய்கின்றோமோ, நாம் யாருக்கு என்ன பணம் ஒதுக்குகின்றோமோ, அந்தப் பணம் சரியான முறையில் அவர்களுக்குக் கிடைக்காத ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டு, பிறகு அரசியல்வாதி மேலே ஒரு களங்கத்தை உண்டாக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை ஞாபகமூட்டுவதற்காகத்தான் நான் இதை இந்த நேரத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதன் மீது நடவடிக்கை எடுத்ததற்காக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தையும் அவர்களுக்கு என்னுடைய நல்லாசியையும் கூறிக் கொள்கிறேன்.

பிறகு அவர்கள் பொருளாதாரத்திலே முன்னுக்கு வர வேண்டும். (மணியடிக்கப் பெற்றது). முடித்துவிடுகிறேன். அவர்கள் பொருளாதாரத்திலே முன்னுக்கு வருவதற்கு, பல துறைகளிலே இன்றைக்கு பல வகைகளிலே அப்படி

வந்தால் தான், அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற முடியும். அவர்களுக்கு கடன் கொடுத்து, தொழில் செய்வதற்கு ஒரு சூழ்நிலை அவர்களுக்கு உருவாக்கியாக வேண்டும்.

பிறகு நான் பலமுறை இங்கே சொல்லி இருக்கிறேன். அதாவது இந்த 18 சதவீதம்—அது எந்தத் துறையிலேயும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அதேபோன்று பெண்களுக்கு 30 சதவீதம் —அதுவும் பூர்த்தி செய்யப் படவில்லை. ஏனென்றால், பெண்கள் கணவனால் கை விடப்பட்டால் 2 குழந்தைகள் இருக்கும். கணவன் வந்து அவளை போ என்று அடித்து விரட்டிவிடுவான். இன் னொரு கல்யாணம் பண்ணுவதற்கு அவனுக்கு உரிமை இருக்கிறது. அந்த மாதிரி உள்ளவனை கொண்டுபோய் ஜெயிலிலே போட்டாலும், அது இல்லை என்று மறுத்து விடுவார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லு கிறார்கள் ? ஏதோ சமையல் வேலைக்கு வைத்து இருக்கிறேன் ; அந்த அம்மா பொய் சொல்லுகிறார்கள் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் நாட்டில் இருப்பதாலே, இந்த அரிசன சமுதாயத்தை சேர்ந்த, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு 18 சதவீதம்—அதை, இந்த மாண்புமிகு முதல்வருடைய ஆட்சிக் காலத்திலேயே, இப்பொழுதே ஓராண்டு, ஈராண்டுகளுக்குள் பூர்த்தி செய்தாலொழிய, பிறகு எப்போதுமே அதற்கு ஒரு விமோசனம் கிடைக்காது என்பதைத் தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகையினால், ஒவ்வொரு துறையிலும் 18 சதவீதம் பூர்த்தி செய்து இருக்கிறார்களா ? அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து இந்த துறையில் 18 சதவீதம் கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிந்து, அதைத் தெரிந்து, அதை உடனே பூர்த்தி செய்ய கூடிய நிலைமையை உருவாக்கினால் நிச்சயமாக இந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

பிறகு, இந்த நிலம் எடுத்து வீடு கட்டுகிறோம். இந்த வீடு கட்டுவதிலே முன்னாடியே பணம் வாங்குகிறார்களாம். அது ரொம்ப கொடுமையாக இருக்கிறது. அதை தாட்கோ மூலம் கட்டுவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் அது நன்றாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் யோசனை செய்து பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம். ஏனென்றால், அந்த பஞ்சாயத்து யூனியனில் சில பேர் இருக்கிறார்கள். முன்பு நான் சொன்னேன் அல்லவா ? அப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எல்லாம், பஞ்சாயத்து யூனியனில் வேலை



செய்யக்கூடியவர்கள் எல்லாம் இதற்கு ஒரு களங்கத்தை கற்பிக்கும் அளவிலே அங்கே போய் பணம் வசூல் செய்து கொண்டு, வேறு ஒருவிதமாக செய்கின்ற காரணத் தினாலே, இதை மாற்றி தாட்கோ மூலமாகவே இந்த வீடுகளை கட்டுவதற்கு ஒரு நடவடிக்கை எடுப்போமே யானால், அது இன்னும் சற்று நன்றாகவே இருக்கும் என்ற ஒரு விஷயத்தை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு —அவர்களுக்குதான் நன்றி சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தான். இருந்தாலும் இந்தத் திட்டங்களை மனதிலே வைத்து அவற்றை நிறை வேற்றக் கூடிய தகுதியும், திறமையும், பொறுப்பும் முதல்வர் அவர்களுக்கு அமைந்திருக்கிற காரணத்தால், இவைகளுக்கெல்லாம் நல்ல விடிவுகாலம் வேண்டும். நல்ல நிலைமை உருவாக வேண்டுமென்று கூறி, எல்லோருக்கும் நன்றி கூறி, உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்பு மிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஐந்தரை கோடி மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு சற்று கூடுதலாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றுள்ள இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித் தரவும், பல்வேறு நலத்திட்டங் களைத் தீட்டி, இத்துறையின் மூலம் சிறப்புடன் செயல் படுத்தி வருகிறார்கள். அத்திட்டங்களின் விவரங்களை இம்மாமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

திராவிட இயக்கத்தின்பால் மாணவப் பருவத்திலிருந்தே பற்று கொண்டு, புரட்சித் தலைவர் அவர்கள் இயக்கம் ஆரம்பித்த நாள் முதல், கட்சி உறுப்பினராக இருந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆசியால், அவர்களுடைய பக்தனாக, அவர்களுடைய தொண்டனாக பணியாற்றிய என்னை, அமைச்சர் பொறுப்பு கொடுத்து, இன்று ஆதிதிராவிட நலத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை வழங்கும் வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள்.

163180

[திரு. எம் ஆனந்தன்] [1992 ஏப்ரல் 22

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்நிலைக்கு என்னை உயர்த்தியுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். இன்றைக்கு நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறைகொண்டு 24 அறிவிப்புகளை தந்திருக்கிறார்கள் இன்றைக்கு ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க அவர்களுக்கென்று சிறப்பாக இரண்டு தொழில் பேட்டைகள் அமைக்கும் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இதற்கான விளக்கங்களை நான் பின்னால் தருகிறேன்.

அடுத்து இரண்டு. அதிக இலாபம் ஈட்டித்தரும் இறால் வளர்ப்பு தொழிலில் ஆதிதிராவிடர்களை ஈடுபடுத்த சிறப்பாக ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

3. பட்டுப் புழு பண்ணைகள் அமைக்கும் திட்டத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

4. புதியதாக 30 மாணவ, மாணவியர் விடுதிகளை அமைக்க உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

5. ஏற்கனவே உள்ள விடுதிகளில் மேற்கொண்டு 1,000 மாணவ மாணவியர்களைச் சேர்க்க உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

6. புதியதாக 50 ஆசிரியர் பணியிடங்கள் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

7. தந்தை பெரியார் பிறந்த மாவட்டமான பெரியார் மாவட்டத்தில் புதியதாக ஓர் உண்டு—உறைவிடப் பள்ளி தொடங்க உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

8. மேல்நிலைப் பள்ளிகளில் புதியதாக ஏழு ஆய்வுக் கூடங்களைச் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு உறுப்பினர் திருமதி



1992 ஏப்ரல் 22] [திரு. எம். ஆனந்தன்]

பொன்னம்மாள் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

9. திருச்சி மாவட்டம் காட்டூர், பாப்பாக்குறிச்சியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு தொகை சாங்ஷன் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

10. அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் 1992-ல் நூலகங்கள் திறக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

11. அதேபோல 1992-93-ல் அனைத்து ஆதிதிராவிட பள்ளிகளுக்கும் நூலகங்கள் திறக்கப்பட வேண்டுமென்று உத்தரவு கொடுத்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

12. 1992-93 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 1.61 கோடி சாங்ஷன் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

13. 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் மாணவ, மாணவியர் விடுதிகளைக் கட்டுவதற்கு உத்தரவு தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-20

14. 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் ஆதிதிராவிட மக்கள் பயன்பெறுகின்ற வகையில் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

15. சென்ற ஆண்டு அறிவித்த 10 அம்ச சிறப்பு திட்டத்தினை மிக வேகமாக நடைபெறுவதற்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

16. தனி நபர் தொழில் முனைவோர் திட்ட இலக்கிட்டை ரூ. 2,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.

17. தேசிய தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக உதவி பெறுமுகத்தான் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள ரூ. 10 கோடிக்கான ஒட்டுமொத்த உறுதி உத்தரவாதத் திட்டத்தை தமிழகத்திலே ஒரு முக்கிய பெரிய திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

18. 1992-93-ஆம் ஆண்டில் 100 மாணவ மாணவியர்
விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களைக் கொடுத்
திருக்கிறார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் திருமது.
பொன்னம்மாள் அவர்களுடைய கோரிக்கையை நிறை
வேற்றுவதாக நான் திருப்தியடைகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

19. ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளில் பயிலும்
மாணவ மாணவியர்களுக்கு முக்கிய வினாக்கள்—விடைகள்
வழங்கி அவர்களுடைய தரத்தை உயர்த்தவேண்டுமென்று
உத்தரவு தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
20 புதியதாக மேலும் ஒரு அகில இந்திய
பணிதேர்வுக்கான ஐ.ஏ.எஸ. தேர்வுக்கான பயிற்சி மையத்தை
துவக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி).

21. 1992-93-ல் உதவிப் பணியிடங்கள்
இல்லாத 7 மேல்நிலைப் பள்ளிகளுக்கு 7 உதவியாளர்களை தற்போது
சாங்ஷன் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி).

22. இன்றைக்கு அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்
களின் நினைவாக சமுதாயக் கூடம் ஒன்றை சென்னை
மாநகரில் அமைக்கவேண்டுமென்றும் உத்தரவு கொடுத்திருக்
கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பழங்குடியின மக்களின் நலனுக்காக அரசு 215 உண்டு
உறைவிடப் பள்ளிகளை நடத்துகிறது. பெரும்பாலான
இப்பள்ளிகள் போதிய போக்குவரத்து வசதியில்லாத மலைப்
பகுதியில் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகள் முறையாக
இயங்கவில்லை என்றும் இப்பள்ளிகளில் நியமிக்கபபட்டிருக்
கின்ற ஆசிரியர்கள் பள்ளிக்கு முறையாகச் செல்லவில்லை
என்றும் அங்கு தங்கிப் பயிலும் மாணவர்களுக்குச் சரியான
முறையில் உணவு வழங்கப்படவில்லை என்றும்
போன்ற பல முறையீடுகள் அரசுக்கு வந்ததைக் கருத்தில்
கொண்டு, இவ்வாறு சிறு சிறு பள்ளிகளாக பலயிடங்களில
இயங்குவதை ஒன்றாக இணைத்து, பெரிய அளவிலான
உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியாக உருவாக்குவதன்
மூலம் அம்மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த
இயலும் என மாண்புமிகு முதல்வர் கருதி, இந்த நிதி
யாண்டில் திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதியிலுள்ள
சில உண்டு உறைவிடப் பள்ளிகளை ஒன்றாக இணைத்து
தகுதி வாய்ந்த இடத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளியைத்
தொடங்க வேண்டுமென புரட்சித் தலைவி
அவர்கள்



உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).
இப்பள்ளிக்கு ஆதிதிராவிட மக்களின் மேல் பற்றும்,
பாசமும் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின்
பெயரால் டாக்டர் ஜெ. ஜெயலலிதா என்று பெயர்
வைக்கப்படும் என்பதையும் அறிவிக்க விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்
துறையின் கீழ் 902 விடுதிகள் இயங்கிவருகின்றன.
இவற்றில் 324 விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்
களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 578 விடுதி
கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடங்
களில் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் மின்
சாரம், குடிதண்ணீர், கழிவறை போன்ற அடிப்படை
வசதிகள் இல்லாமல், அங்கு தங்கிப் பயிலும் மாணவ
மாணவியர் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள் என்பதை
அறிந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் இந்த ஆண்டு இந்த கல்வி ஆண்டு
அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டுமென்று
உத்தரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை
கல்வி வசதியே. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின
மக்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்கள்
உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தாலும், அம்
மக்கள் இன்னும் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே
இருந்து வருவதற்கு, அவர்களிடையே நிலவிவரும் போதிய
கல்வியின்மையே மிக முக்கியமான காரணம் என்பதை
நன்கு உணர்ந்துள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களின் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின
மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக சிறப்புக் கவனம்
செலுத்தி, அதன்மூலம் அவர்கள் பொருளாதார மேம்
பாடும், சமுதாயத்தில் சம அந்தஸ்தும் பெறவேண்டும்
என்று முனைந்து பாடுபட்டு வருகிறது. கல்வித் துறையின் கீழ்
இயங்கி வருகின்ற கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில்
பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ,
மாணவியர்க்கு இலவசக் கல்வி, உதவித் தொகை, ஊக்கப்
பரிசுகள். இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடை
போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
இவையன்றி இத்துறையின் நேரடி நிர்வாகத்தில் இயங்கி
வருகிற 1,222 பள்ளிகள் மற்றும் 902 விடுதிகளில்
பயிலும் மாணவ, மாணவியரின் கல்வித் தரம் உயர
பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளையும் மாண்புமிகு
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு
மேற்கொண்டு வருகிறது.

பிற்பகல் 1-25

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு நீண்ட காலத் திட்டம் குறுகிய காலத் திட்டம் என்ற இரு வழிகளில் முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறது.

நீண்டகாலத் திட்டமாகத் தனியார் மற்றும் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளுக்கு இணையாக இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுத்து 75 கோடி செலவில் பல திட்டங்களை இந்த அரசு எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தீட்ட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றுள் புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல், தற்போதுள்ள கட்டிடங்களில் தண்ணீர் வசதி, கழிப்பிடவசதி போன்ற அடிப்படை தேவைகளை நிறைவு செய்தல், ஆய்வுக் கூடங்கள் அமைத்தல், கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல், புதிய விடுதிகளை நிறுவுதல், ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல், கல்வி புகட்டத் தேவையான உபகரணங்களை அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்குதல் போன்றவைகள் அடங்கும்.

இவ்வசதிகள் அனைத்தும் உருவாக்கப்பட்ட பிறகு, தனியார் பள்ளிகளுக்கு இணையான கல்வித் தரத்தை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும் அடையும் என்ற உறுதி யான நம்பிக்கையுடன் அதற்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

இதற்கிடையில் குறுகியகாலத் திட்டமாக இப்பள்ளி களில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு களில் பயிலும் எல்லா மாணவர்களும் அரசு பொதுத் தேர்வுகளில் வெற்றி பெறச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கீழ்க்கண்ட சிறப்பு ஏற்பாடுகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு செய்துள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தில் அரசுப் பொதுத் தேர்வுக்கு இணை யாக இத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவ மாணவியருக்கு ஒரு முன்னோடி மாதிரித் தேர்வு நடத்தப்பட்டு விடைத் தாள்கள் மைய மதிப்பீட்டு முறையில் (சென்டிரல் வேல்யூவேஷன்) திருத்தப்பட்டு மாணவர்களின் படிப்புத் திறன் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி குறைவான மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கு தனியாக அந்தந்தப் பாடங்களில் சிறப்பு வகுப்புகள் நடத்தி வாராந்திரத் தேர்வுகள் நடத்தப் பட்டன. மற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் முக்கிய



மாதிரி வினா—விடைகளைத் தயாரித்துப் பொதுத் தேர்வுக்கு முன் இம்மாணவர்களுக்கு வழங்கினால் அது அவர்கள் தங்களைத் தேர்வுக்கு மிகவும் தெளிவாகத் தயார் செய்து கொள்வதற்குப் பெரிதும் உதவும் என்ற கருத்தின் அடிப்படையில் இத்துறையில் பணியாற்றுகிற அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு குழுக்கள் அமைத்து ஒவ்வொரு பாடத்திற்கும் மாதிரி வினா—விடை புத்தகங்கள் தயாரித்து அச்சிடப்பட்டு ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு உரிய நேரத்தில் இலவசமாக வழங்கப்பட்டது. இத்திட்டம் ஒரு சராசரி மாணவனும் தன்னை எளிதாகத் தேர்வுக்குத் தயார் செய்து கொள்ள பெரிதும் உதவுகிறது. இதன் காரணமாக இந்த ஆண்டு ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் தேர்ச்சி விகிதம் மிகக் கணிசமான அளவு உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு மாணவர் களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட இச்சலுகையை நடப்பு நிதி ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் நலத்துறையினர் விடுதிகளில் தங்கி மற்ற பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கும் விரிவு படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி அறிவைப்பெருக்கவும், இவர்களது சிந்தனைகள், செயல்பாடுகளைச் செம்மைபடுத்தவும் பள்ளிப் பாடங்களை ஒட்டிய புத்தகங்கள் மட்டுமல்லாது அறிவு வளர்ச்சிக்கு உகந்த நூல்கள் பலவும் கொண்ட "நூலகங்கள்" ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை யிட்டதைத் தொடர்ந்து ரூ. 12.33 இலட்சம் செலவில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும் நூலகங்களை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் நடப்பு நிதியாண்டில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்துப் பள்ளிகளிலும் இதே போன்று நூல் நிலையங்களை ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் வீடுகளில் போதிய வசதியற்ற நிலையில் கல்வி கற்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு உதவும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடப்பு நிதி ஆண்டில் கூடுதலாக 1,500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேலும் 30 புதிய விடுதிகளை அமைக்க உத்திர விட்டுள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டு மின்றி ஏற்கனவே இயங்கி வருகிற விடுதிகளில் இந்த நிதி ஆண்டில் கூடுதலாக ஆயிரம் மாணவ மாணவியரை சேர்த்துக் கொள்ளவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உன்னத நோக்குடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களின் அரசு பொறுப்பேற்ற பிறகு ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அமுல்படுத்தி இருக்கிறது என்பதையும்....

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக் கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** அதன் முதல் கட்டமாக ஏற்கனவே சிதம்பரம், திருச்சி, மதுரை, ஆகிய மையங்கரளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நடப்பு நிதியாண்டிலும் இத்திட்டம் மற்ற மையங்களிலும் தொடர்ந்து அமல்படுத்தப்பட உள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இத்துறையின் கீழ் இயங்கும் எல்லா மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ. 2.3 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டிடங்கள் கட்ட உத்திரவிடப் பட்டு கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதையும், அதே போல்.. நடப்பு நிதியாண்டில் ரூ. 3 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதே போல மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ. 1.65 கோடி செலவில் 12 புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, அப்பணிகள் நடைபெற்று வருகின்றனயென்பதையும், நடப்பு நிதியாண்டில் ரூ. 1.61 கோடி செலவில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறேன். தரமான கல்வியை உறுதிசெய்ய ஆசிரியப் பெருமக்களின் முழு ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு அவர்களது நலனைப் பேணிக்காப்பதிலும், அக்கறை காட்டி வருகிறது. அதன் ஒரு கூறாக சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக கல்வி ஆண்டின் இடையில்கூட எந்த நேரத்திலும், பொருத்தமான காரணமின்றி மாறுதல்கள் நிகழலாம் என்று இருந்துவந்த நிலையினை முற்றிலும் மாற்றிப் பொது மாறுதல் தவிர மற்ற நேரங்களில் தேவையின்றி ஆசிரியர்கள் இடமாற்றம் கண்டிப்பாக இராது என்ற உறுதிப்பாடு இந்த அரசால் உருவாக்கப் பட்டுள்ளது. இதன் பலனாக ஆசிரியர்கள் இடமாற்றல் களுக்காகவும், மாற்றல் உத்தரவுகளை ரத்துச் செய்வதற் காகவும் ஆண்டு முழுவதும் அலைந்து திரிந்த நிலை மாறி, ஆசிரியர்கள் எவ்வித தடங்கலும் இன்றி கல்வி கற்பிக்கவும் அதன் மூலம் கல்வித் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு மான ஒரு நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்ற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு 1991-92-ம் நிதி யாண்டில் ரூ. 14 கோடி உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது என்பதையும், இது 1990-91-ல் வழங்கப் பட்டதைவிட ரூ. 2 கோடி அதிகம் என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

பொருளாதார முன்னேற்றம், சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமூகத்தினர்க்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளும் விரைவாகப்பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடும், பொருளாதாரத்தில் அவர்கள் விரைந்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத் தோடும் நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே 10 அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். இத் திட்டத்தின் ஓர் அம்சமாக ஐந்து ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டு உதவிகளை வழங்க வேண்டும் என்றும், இதில்

1991-92 ஆம் ஆண்டில் 65 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். அதன்படி 65 ஆயிரம் குடும்பங்களுக்கும் மேலாகவே பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் 1992-93ம் ஆண்டில் மேலும் 70 ஆயிரம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏழை ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் பாசன கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், அக்கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து இதுவரை சுமார் 3,000 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், மீதம் உள்ள கிணறுகள் நடப்பு நிதி ஆண்டில் வெட்டி முடிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் ஓர் ஆண்டிற்கு 1,000 பேர்கள் வீதம் 5,000 பேர்களுக்கு தொழில் தொடங்க நிதி உதவிகள் செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை 670 பேருக்கு பல்வேறு தொழில்கள் தொடங்குவதற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, மேற்கண்ட 670 பேர்கள் டிராக்டர்கள், லாரி, டாக்சி, ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங்களின் உரிமையாளர்களாகவும், ஆடைகள் தயாரித்தல், தோல் பதனிடுதல், பனியன் முதலிய பின்னலாடைகள் தயாரித்தல் போன்ற தொழிலகங்களின் உரிமையாளர்களாகவும் இன்று உருவெடுத்துள்ளனர் என்பதையும் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இது ஒரு சிறப்பான திட்டம் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு நடப்பு நிதியாண்டில் மேலும் 2,000 பேருக்கு இத்தகு நிதியுதவிகளை வழங்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-35

மற்றும் ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி பெற்ற ஆதி திராவிட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக் கொடுக்க உதவும் வகையில் அவர்களுக்கு கூடுதல் பயிற்



அளிப்பதற்காக அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளது என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கேட்ட கோரிக்கையை இது நிறைவு செய்யும் என்று நான் நம்புகிறேன்.

மேலும், 5 ஆண்டு காலத்தில் 4 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு நிர்ணயம் செய்து, அதில் 1991-92 ஆம் ஆண்டு 75 ஆயிரம் பேர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்க வேண்டுமென்றும் முடிவு செய்தது. இந்த இலக்கை இரண்டு மடங்குக்கும் மேலாக விஞ்சி, கடந்த 1991-92 ஆம் ஆண்டில் 1,87,144 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்) கிறேன். இனிவரும் ஆண்டுகளிலும், இதே வேகத்தோடு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் 5 ஆண்டு காலத்தில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு கட்டித்தர வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை 37,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1992-93 ஆம் நிதியாண்டில் 37,000 வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குடிநீர் வசதியைப் பொருத்தவரை மாண்புமிகு முதலமைச்சரின் போர்க்கால நடவடிக்கையின் பயனாக குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது இல்லாத ஆதி திராவிடர் குடியிருப்புகளே தமிழ்நாட்டில் ஏதும் இல்லை என்ற நிலை உருவாக்கியிருக்கிற நமது தமிழக முதல்வர் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்கு உங்கள் பாராட்டுகள் கிடைக்கும் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தாட்கோ—ஆதிதிராவிட இன மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தாட்கோ நிறுவனத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அமல்படுத்தி வருகிறது.

மாநில அரசின் நிதி ஆதாரத்துடன் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வங்கிகளில் கடன் உதவி மூலம் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

சுய வேலை வாய்ப்புத் திட்டம் : இத்திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான மளிகைக் கடைகள் நடத்துதல், சைக்கிள் ரிக்ஷா வழங்குதல், துணிக்கடைகள் துவக்குதல், சிற்றுண்டி விடுதிகள் துவக்குதல், தச்சுத் தொழில் நடத்துதல், தோல் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்தல், பாய் பின்னுதல், கயிறு தயாரித்தல், கூடை முடைதல போன்ற தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பமும் ரூ. 10,000 வரை நிதி உதவி பெறலாம்.. இதில் ரூ. 5,000 மானியமாகவும் மீதி ரூ. 5,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 8 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேங்ஷன் செய்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் : இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும் மகளிருக்கும் குறிப்பாகப் படிப்பைப் பாதியில் நிறுத்த நேர்ந்தவர்களுக்கும் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளித்து அவர்கள் சொந்தமாகத் தொழில் துவங்க வகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கம்ப்யூட்டர் பயிற்சி, தையல் பயிற்சி, வாகனங்கள் பழுது பார்த்தல் பற்றிய பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி, கைத்தறி நெசவு, தச்சுவேலை, பாய் முடைதல், அச்சடித்தல் வேலை, நூல் நூற்பு, பனை ஓலை பின்னுதல் முதலிய தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதன்படி 1991-92 ஆம் ஆண்டில் 2183 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பொதுவாகவே கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள ஏழை ஆதிதிராவிடக் குடும்பங்களைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் தங்களது அன்றாட வாழ்விற்குப் பிறரை நம்பி இருக்கவேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதையும் அது எவ்வளவு பெரிய சமுதாயப் பிரச்சினை என்பதையும் நன்கு உணர்ந்துள்ள கருணை



உள்ளம் படைத்த நமது முதல்வர் டாக்டர் புரட்சித், தலைவி அவர்கள் இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டில் 3,500 பேர்களுக்குப் பயிற்சிகள் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும், ஒலி) அதில் குறிப்பாக பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் உத்தரவு இட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்திட்டத்திற்காக இந்த நிதியாண்டில் ரூ. 1 • கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயம் மற்றும் விவசாயத் தொழில்களுக்கான உதவிகள்.— இத்திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டில் உழவுமாடுகள், டயர் வண்டிகள் மற்றும் மாடுகள் வாங்குதள், சைக்கிள்களுடன் கூடிய பவர்ஸ்ப்ரேயர்கள் வாங்குதல், மின்சாரம் மற்றும் டீசல் பம்பு செட்டுகள் வாங்குதல், பில்டர் பாயின்ட் மற்றும் ஆர்ட்டிஷன் கிணறுகள் அமைத்தல் முதலியவற்றிற்கு மானியம் மற்றும் கடன் உதவி 8,635 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நடப்பு நிதி ஆண்டில் ரூ. 11 கோடி செலவில் இதே அளவுக்கு உதவிகள் வழ்ங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-40

தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் : இத்திட்டத்தின் கீழ் வருவாய் ஈட்டித் தரத்தக்க பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்கு ஆதிதிராவிட மக்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வுதவிகளைப் பயன்படுத்தி இதுவரை தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பனியன் தொழிற்சாலைகள், இன்ஜினியரிங் தொழிற்சாலைகள், மரம் அறுக்கும் தொழிற்சாலைகள், அச்சகங்கள், ஜெராக்ஸ் நிறுவனங்கள், கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனங்கள், லாரிகள், டிராக்டர் டிரெயிலர்கள், கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், வேன்கள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் தொழில் தொடங்குவதற்கு ரூ. 5 இலட்சம் வரை முதலீடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 15,000 மானியமாகவும், ரூ. 85,000 மொத்த மதிப்பீட்டில் 20 விழுக்காடு இதில் எது குறைவோ அது 4 சதவீத வட்டியில் விளிம்புத் தொகையாக வழங்கப்படுகிறது. மொத்த முதலீட்டில் இவை போக மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகப்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் நலிவுற்ற ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர் குடும்பங்கள் நல்ல வருமானத்தை ஈட்டுவதற்கும், பிறருடைய தயவு இன்றி தம் சொந்தக்காலில் நிற்பதற்குமான வாய்ப்பும் ஏற்படுத்தும் என்பதோடு இன்னும் பல ஆதி திராவிட மக்கள் இந்நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வாய்ப்புக்களும் கிடைக்கும் என்பதையும் உணர்ந்துள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 670 பேருக்கு தொழில்கள் தொடங்குவதற்கான உத்தரவை வழங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டில் மேலும் இரண்டாயிரம் பேருக்கு ரூ. 31 கோடி அளவில் சேங்ஷன் செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த அரசு பொறுப்பேற்றபோது அமலில் இருந்த வயது வரம்பு மற்றும் வருமான வரம்பு ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறவே ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், ரூ. 5 இலட்சத்திற்கு மேற்பட்ட முதலீட்டுடன் பெரிய அளவில் தொழில் துவங்கவும், பல ஆதி திராவிடர் தொழில் முனைவோர் முன் வருகின்ற சூழ்நிலை தற்போது உருவாகி வருகிறது.

அவர்களது தொழில் திட்டங்கள் '' தாட்கோ '' மூலமாகவும் டெல்லியிலுள்ள தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு (என்.எஸ்.எஃப்.டி.சி.) பரிந்துரை செய்யப்படுகின்றன. மேற்படி கழகம் தான் வழங்கும் நிதி உதவிகளுக்கு மாநில அரசின் உத்தரவாதம் தேவை என்று வலியுறுத்தியது. அதன்படி ஒவ்வொரு நிதியுதவிக்கும் மாநில அரசை அணுகி உத்தரவாதம் பெறக்கூடிய சூழ்நிலை எழாதிருக்க வேண்டுமென்பதற்காக ஆதிதிராவிடர் நலனிலே மெய்யன்பு கொண்டுள்ள



நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒட்டுமொத்தமாக 10.00 கோடி ரூபாய்க்கு பிளாக் கியாரண்டி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இது பெரிய அளவில் தொழில் தொடங்க முன்வரும் ஆதி திராவிடர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

இவை தவிர மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதி உதவி திட்டத்தின் மூலம் கால்நடைத்துறை, பால்வளத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சித் துறை முதலியவற்றின் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் சுமார் 2.50 இலட்சம் குடும்பங்களுக்குக் ரூ. 272 கோடி செலவில் பல்வேறு உதவிகள் வழங்கப் பட்டுள்ளன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் நடப்பு நிதியாண்டில் ரூ. 293 கோடி செலவில் 2.50 இலட்சம் குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**பழங்குடியினர் நலம் :** 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.20 இலட்சம் பழங்குடியினர் வசிக்கிறார்கள். இம்மக்களின் முன்னேற்றத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தனி முக்கியத்துவம் எடுத்துப் பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் 13 மாவட்டங்களில் ஆங்காங்கே பரவலாக வசிக்கிறார்கள்.

பழங்குடியினர் அதிகமாக வாழும் சேலம், தர்மபுரி, வடாற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர் தென்னாற்காடு, திருச்சி ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மேலும் பண்டைய பழங்குடி மக்களுக்காக தனித் திட்டம் ஒன்றும், சிதறி வாழும் பழங்குடியினருக்கு தனித் திட்டம் ஒன்றும் சீராக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடி இன மக்களின் ஒட்டுமொத்தமான முன்னேற்றத்திற்கு

கல்வியே அடிப்படையானது என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இம்மக்களுக்கு 215 உண்டு உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இவைகளில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடி இன மாணவ மாணவியர்கள் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர். இத்தகைய உண்டு உறைவிடப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தோடு திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதிகளில் உள்ள பல்வேறு உண்டு உறைவிடப் பள்ளிகளை இணைத்துப் பெரிய அளவில் மையமான ஓர் இடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு பள்ளியை இந்த ஆண்டில் உருவாக்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

பிற்பகல் 1-45

இதன் மூலம் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கிக் கல்வி பெறுவதற்கு நல்ல வசதிகள் உருவாக்கித் தரப்படுமென்பதோடு அது அவர்களது கல்வியின் தரத்தையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முன்னோடித் திட்டத்தின் செயல்பாட்டினைக் கருத்திற்கொண்டு அத்தகு பெரும் பள்ளிகள் பிற பழங்குடியினப் பகுதிகளுக்கும் வரும் ஆண்டுகளிலும் விரிவுப்படுத்தப் படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் 1991—92 ஆம் ஆண்டில் பதினெட்டு லட்சம் ரூபாய் செலவில், 9 புதிய உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட புரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டிருக்கிறார்கள். என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதி ஆண்டில் முதன் முறையாக பகுதி-2 திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேராத பகுதியில் உண்டு உறைவிடப் பள்ளி ஒன்றைப் புதியதாகத் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பு ஏற்ற பிறகு மிகவும் பின் தங்கிய பகுதியாக தர்மபுரி மாவட்டம் பர்கூரில் இருளர் என்ற பண்டைய பழங்குடி இன மக்களுக்கு 68 வீடுகள்



ரூ. 9.30 லட்சம் செலவில் கட்டித்தர முடிவு எடுத்து அதற்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

1992-93 ஆம் ஆண்டில் மலைவாழ் மக்கள் முன்னேற்றத் துணைத் திட்டத்தின் கீழ் 19.33 கோடி ரூபாய் செலவில் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு, பால் மாடுகள் வளர்ப்பு போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சிதறி வாழும் பழங்குடியினருக்கு 1992—93 ஆம் ஆண்டு 25.66 இலட்சம் செலவில் 171 வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிறப்பால் உயர்வுத் தாழ்வு இல்லை என்ற உண்மையை உலகறியச் செய்தவர் பாரத ரத்னா உலக மாமேதை அண்ணல் அம்பேத்கார் அவர்கள்—தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய் விளங்கும் அண்ணலுக்குத் தமிழக அரசு ஓராண்டு முழுவதும் நூற்றாண்டு விழாவெடுத்து மகிழ்ந்ததோடு அவரின் சிறப்புக்கு மேலும் புகழாரம் சூட்டும் வகையில் சிறப்பான நூற்றாண்டு நினைவு மண்டபம் ஒன்றினை ஒரு கோடி ரூபாய் செலவில் எழில்மிகு சென்னை நகரில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிட மக்களின் ஒளி விளக்காக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

தென்னாட்டு அம்பேத்காராக விளங்கக் கூடிய நமது இதய தெய்வம் டாக்டர் முதல் அமைச்சரவர்கள் வேதாகமக் கல்லூரியை நிறுவி ஆதிதிராவிடர்களும் அர்ச்சகர்களாகலாம் என்னும் நிலையை உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை நீக்கி நமது இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் வரலாறு படைத்திருக்கிறார்கள் என்பது நாமறிந்ததே.

தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களிடையே நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பெருகி வரும் நல்லாதரவினைக்கண்டு பொறுக்க முடியாத அரசியல் எதிரிகள் புரட்சி தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப் பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் பாதிக்

கப்படும் என்ற கட்டுக் கதைகளை உலவி விட்டனர். அந்தக் கற்பனை கதைகளை நம்ப மறுத்துவிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மக்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தங்களது ஏகோபித்த நிரந்தரத் தலைவியாக இதயத்தால் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வின மக்கள்பால் தனக்கிருக்கும் பாசத்தையும் பரிவையும் வெளிக்காட்டும் வகையில பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் மிகவும் அடிமட்டத்திலிருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் ஏனைய சமூகத்தினரோடு அவர்களுக்கு இணையாகப் பொருளாதாரத் துறையில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு நம் தானைத் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுவரை இந்திய வரலாறு கண்டிராத முப்பெரும் பொருளாதாரத் திட்டங்களை இம்மக்களுக்காக இன்று உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியும், பூரிப்பும அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்திட்டங்கள் அகில இந்தியாவிற்கே வழிகாட்டித் திட்டங்களாக அமையும் எனபது மட்டுமல்ல, இவை இம் மக்களின் பொருளாதார, சமூக மறுமலர்ச்சிக்கு ஒரு நுழைவு வாயிலாக அமையும் என்பதிலும் எள்ளளவும் சந்தேகமில்லை.

''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்ற தமிழ் மறைவாக்கின மெய்ப்பொருளை நன்கு உணர்ந்த நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆதி திராவிட மக்களையும் பொருள் நிறைந்தோராக ஆக்க வேண்டும் என்பதற்காக ஆதி திராவிடர்களுக்காகவே இரண்டு தொழிற்பேட்டைகள் அமைத்தல், இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்தல் மற்றும் பட்டுப் புழு பண்ணை அமைத்தல் ஆகிய இந்த மூன்று அரும் பெரும் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள்.

பிற்பகல் 1-50

தொழிற்பேட்டைகளை அமைத்தல், நிதி மிகுந்தோருக்காக தொழிற் பேட்டைக்ள் அமைக்கப்படுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆயின், நிதியற்ற, ஏழை எளிய, ஆதிதிராவிடர்களுக்காகவும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகிற அதிசயத்தை இன்றும் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே காண்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).



ஆதிதிராவிட மக்களுக்காக பின்னலாடையை (Knit wear) அடிப்படையாகக் கொண்டு, இருபெரும் தொழிற்பேட்டைகள் அதற்கேற்ற இடங்களாகிய கோவை மாவட்டத்தில் ஒன்றும் பெரியார் மாவட்டத்தில் ஒன்றுமாக அமைக்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு தொழிற்பேட்டையும் சுமார் 35 முதல் 40 ஏககர் நிலத்தில் நிறுவப்படும். ஒவ்வொரு தொழிற் பேட்டையிலும் 100 தொழிற்கூடங்கள் அமைத்துத் தரப்படும். ஒவ்வொரு தொழிற்கூடம் அமைப்பதற்கும் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கும் நடைமுதல் செலவிற்குமாக சுமார் 40 லட்சம தேவைப்படும். இரண்டு தொழிற்பேட்டைகளுக்குமாக ரூபாய் 80 கோடி முதலீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும ஒலி.)

ஆதிதிராவிட மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியும் ஆர்வத்தையும் ஊட்டி, அவர்களிடையே நாளாவட்டத்தில் பெரும் தொழிலதிபர்கள் உருவாவதற்குமான நல்வித்தாக இது அமையும் என்பதில் ஐயம் இல்லை.

இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்தல். இறால் வளர்ப்பு இலாபகரமானதென்பதும் அந்நிய செலாவணியை பெருமளவு நாட்டிற்கு ஈட்டித்தர வல்ல ஒரு திட்டம் என்பதும் நாம் அறிந்ததே. ஆயின் இத்தொழில் செய்வதற்கு மிகுந்த முதலீடு தேவை. எனவே, பொருள் வளம் மிக்கோரே இத்தொழிலில் ஈடுபட்டு இலாபம் ஈட்ட இயலும் என்ற நிலையை மாற்றி, ஏழை எளிய ஆதி திராவிடர்களும் இதிலே துணிந்து ஈடுபட வேண்டும், அதற்கான அத்தனை வாய்ப்புகளையும் அரசே முன்னின்று ஏற்படுத்தித்தர வேண்டும் என்னும் தாயன்பு நோக்கத்தோடு நம் இதயதெய்வம் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்காக இத்திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். (மேசையைத்தட்டும் ஒலி.)

இத்திட்டத்தின் கீழ் இறால் வளர்ப்பதற்கு தகுதிவாய்ந்த 1000 ஹெக்டேர் தனியார் நிலங்கள், தமிழகத்தின் கடற்கரை மாவட்டங்களில் விலைக்கு வாங்கப்பட்டு, இத் தொழிலுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆதிதிராவிடர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஹெக்டேர் நிலம் வீதம் வழங்கப்படும்.

இறால் வளர்ப்பதற்கு ஏற்றவகையில் இந்நிலங்கள் பண்படுத்தப்பட்டு தேவையான ஆழத்திற்குக் குட்டைகள் (Rearing Ponds ) உருவாக்கப்படும். இறால் வளர்ப்பதற்குத் தேவையான இறால் குஞ்சுகள், அதற்குத்

தேவையான உணவு, இதர இயந்திரங்கள் ஆகியவை பெறுவதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். வளர்க்கப் படும் இறால்களுக்குரிய நியாயமான விலை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும். ஒரு ஹெக்டேர் நிலம் பரப்பில் இறால் வளர்க்க நடைமுறைச் செலவுடன் சேர்ந்து ரூ.3 இலட்சம் சேங்ஷன் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு 1,000 ஹெக்டே ருக்கு ரூ. 30 கோடியாக சேங்ஷன் செய்திருக்கிறார்கள், புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 1,000 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் உருவாவர்.

ஆண்டொன்றிற்கு இரண்டு சாகுபடிகள் செய்வதன் மூலம் குறைந்தது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2 லட்சம் லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் இம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பட்டுப்புழு வளர்க்கும் திட்டம். நீர்ப்பாசன வசதி யுடன் கூடிய ஒரு ஏக்கர் நிலத்தில் மல்பெரி செடி சாகுபடி செய்து, பட்டுப்புழு வளர்த்தால், ஆண்டொன்றுக்கு குறைந் தது ரூ. 30,000 இலாபம் கிடைக்கும். இதை ஆதி திராவிட மக்களிடையே பெருமளவு ஊக்குவிக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு தமிழ்நாட்டில் பல மாவட்டங்களி லும் நிலத்தடி நீர் வசதியுடன் கூடிய தகுதி வாய்ந்த 3,000 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கப்படும். தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்படும். தேவையான பாசன வசதிகளும் செய்து தரப்படும். அத்தோடு பட்டுப்புழு வளர்ப்பதற்குத் தேவையான தனித் தனிக் கூடங்களும் அமைத்துத்தரப் படும். இயந்திரங்களும் வாங்கித் தரப்படும். இதன் மூலம் 3,000 குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றுவதோடு அவர்களும் எதிர்காலத்தில் தொழில் முனைவோர்களாக உரு வாவதற்கு இது அடித்தளமாக அமையும் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட மூன்று திட்டங்களையுமே தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தாட்கோவும் இணைந்து வங்கிகளின் உதவியுடன் செயல்படுத்தும். மற்றும் இத்திட்டங்களைச் செயல்படுத்து வதில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். குறிப்பாக கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு நம் இதய



தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆணைக்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இதுவரையில் இத்துறையின் மூலம் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைப் பேணிக் காக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அதன் மூலம் அவர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்தவும் என்னென்ன நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, என்னென்ன சாதனைகள் புரியப்பட்டுள்ளன என்னென்ன திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்பட உள்ளன என்பனவற்றையெல்லாம் விரிவாக விளக்கிக் கூறியிருக்கிறேன்.

பிற்பகல் 1–55

இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறி, அதே நேரத்தில் அவர்கள் தெரிவித்த அத்தனை கருத்துக் களும் யோசனைகளும் உரியாங்கு ஆய்வு செய்யப்பட்டு தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்கள் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருக்கும் நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இத்துறை யின் மூலம் பல்வேறு நன்மைகளைச் செய்து கொடுக்க சிறப்பாகத் திட்டமிட்டுச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது தலைமையின் கீழ் இந்த அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் அவ்வின மக்களின் நலனுக்காக தொடர்ந்து சிறப்புடன் செயல்பட உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்றும் குடியிருப்புகளுக்கு மின்வசதி மற்றும் குடிநீர் வசதிகள் வேண்டும் என்றும் கோரி, மாண்புமிகு உறுப்பினர் கள் திரு. சோ. இராசாராமன், திரு. ஆர். சிங்காரம், திரு. சா. பன்னீர்செல்வம், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஆர். தங்கராஜ், திரு. சி. சுவாமிநாதன்,

[திரு. எம். ஆனந்தன்] [1992 ஏப்ரல் 22

திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. பி.வி. இராஜேந்திரன் மற்றும் திரு. ச. புரட்சிமணி ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்துள்ளார்கள். ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம், 'தாட்கோ' மூலம் செயல்பட்டு வந்தது. அதன்படி இத்திட்டம் துவக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை மொத்தம் 78,718 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. தற்போது 'தாட்கோ' மூலம் வீடுகள் கட்டப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1989—90 முதல் வீடு கட்டும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசின் ஊரக வளர்ச்சித் துறையால் அந்த அந்தப் பஞ்சாயத்துக்களின்மூலம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகிறது. இதற்கான மாநில அரசின்தொகையை தாட்கோ வழங்குகிறது. தாட்கோ மூலம் வீடு கட்டும் செயற்குறிப்பு தனியாகப் பரிசீலனையில் இல்லை. தாட்கோ நிறுவனம் மானியமும் விளிம்புத் தொகையும் வழங்கிட வங்கிகள் கடன் உதவி வழங்குவதில்லை என்பதால் தாட்கோவிற்கு முழு கடன் உதவியை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கராஜ் கோரியுள்ளார். தாட்கோ பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களின் கீழ் மானியமும் குறைந்த வட்டியில், அதாவது 4 1/2 சதவீதம் வட்டியில் விளிம்புத் தொகையும் வழங்குகிறது. இதற்காக 1991—92-இல் சுமார் 9.39 கோடிக்கு மானியமும் 3.09 கோடிக்கு விளிம்புத் தொகையும் ஆக மொத்தம் 12.48 கோடிக்கு நிதி உதவி வழங்கியது. அந்த அளவுக்கு இன்று திட்டங்களுக்கு வங்கிகளின் பங்கு 19.37 கோடி ஆகும். கடன் உதவி முழுவதும் தாட்கோ வழங்க வேண்டுமெனில் 31.84 கோடி தேவைப்படும். ஆனால் ஓராண்டுக்கு மைய சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் தொகை ரூ. 16 கோடி மட்டுமே. இந்நிலையில் கடன் முழுவதையும் தாட்கோ நிறுவனமே வழங்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இங்கே வெட்டுத் தீர்மானங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தால், நான் பொறுப்பேற்றிருக்கிற துறையில் பல மணி நேரம் எடுத்துக்கொள்வது முடியாது என்றாலும்கூட, எங்கள் இதய தெய்வம் டாக்டர் முதல்வர் அவர்கள் போல் என்னால் இந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு இத்தருணத்தில் பதில் அளிக்க இயலாத நிலையில், நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களின் மேல், நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு இந்த அளவுக்கு வாய்ப்புத் தந்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



1992 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. செ. கு. தமிழரசன்.

**திரு. செ. கு. தமிழரசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையான அண்ணல் அம்பேத்காரின் பெயரிலே மண்டபம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ரூ. 1 கோடி அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நிகழ்ச்சியை உருவாக்கித் தந்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கார் அவர்களின் லட்சியங்களை நிறைவேற்றுகிற வகையிலே 80 கோடி அளவிலே இரண்டு தொழில் பேட்டைகளை உருவாக்கி, ஒடுக்கப்பட்ட மக்களைத் தொழில் அதிபர்களாக மாற்றுகிற (மேசையைத் தட்டும் ஒலி) உயரிய எண்ணம், தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தாழ்த்தப்பட்ட மக்களின் கலங்கரை விளக்கம், ஏன் தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் எங்கள் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு என். ஜி. வேணுகோபால்.

**திரு. என். ஜி. வேணுகோபால்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொழிற்பேட்டைகளை அமைத்திருக்கின்ற இந்த நேரத்தில், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற காரணத்தினால் தொழிற்பேட்டையான இராணிப்பேட்டையில் இதை அமைக்க வேண்டும். இன்னொரு தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் மு.சினியம்மாள்.

**டாக்டர் மு. சினியம்மாள்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் நந்தா விளக்கே,
பந்தமில்லா அனைவருக்கும் சொந்தமாய் நானிருப்பேன்

என்று புத்தாடை வழங்கிட்டீர்
புதுமனைப் பட்டாக்கள் வழங்கிட்டீர்
போதாததற்கு இனிப்புடன் சத்துணவு
இந்தா 75 ரூபாய் செலவுக்கு என்று தந்திட்டீர்
கணவன் இறந்த பின்னால் கைபிசைந்து நிற்காமல்
கலங்கரை விளக்கமாய்க் காலமெல்லாம்
நான் வருவேன் என்று சொல்லி சொந்தக் காலில்
நிற்பதற்கு தொழிலைப் பந்தக்காலாய் நட்டு வைத்தீர்

இந்த ஏழை எளிய மக்களுக்காக இரண்டு தொழிற்பேட்டைகளைச் செய்து கொடுத்த உங்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கங்களை உங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பித்து.

தூண்டாத மணிவிளக்காய்
துருவ நட்சத்திரமாய்
பட்ட மகிஷியாய்
நீங்கள் பதவி ஏற்றது முதற்கொண்டு
அற்பர்களே, இந்த துருவ நட்சத்திரம்
உங்கள் பொய்க் கண்களுக்குத் தெரியாதோ
அற்பர்களே, உங்களுக்கு இந்த ஆட்சிப்பீடம்
வெகு தூரம், நீங்கள் அருகில் வந்தால்
போக, போக பஸ்பமாய் ஆகிவிடுவீர்கள்
அது உங்களுக்குத் தெரியாதோ

என்பதை நான் சொல்லிக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெண்களுக்குக் கொடுமை இழைத்த இந்த துச்சாதனர்களை....

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். அவர் கவிதை நடையில் ஒரு வார்த்தை சொல்கிறார். சில நேரங்களில் கவிதை பாடுகிற போது மிக உயர்ந்தவர்களை நீ. போ, வா, என்று சொல்லித்தான் பாடுகிறோம். அதுபோல் கவிதையில் வருகின்ற சொற்கள் அவை. திருமதி சீனியம்மாள் சீக்கிரம் முடியுங்கள்.



டாக்டர் மு. சீனியம்மாள் : இந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய தர்மமிகு தமிழகம் 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாள் தலைகுனிந்தது. எங்களது புனிதத் தலைவி தமிழக முதல்வர் (குறுக்கீடு) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் கேட்க வேண்டும்.

டாக்டர் மு. சீனியம்மமாள் : வீறுகொண்ட புரட்சித் தலைவி அவர்கள வீர சபதம் ஏற்று கொடுங்கோல் அரசை ஒழிப்பேன், கொற்றவை அரசியாய் இங்கு வந்து அந்தக் கொடுங்கோலர்களை ஒழிப்பேன் என்று கூறி அதற்கிணங்க இறைவன் அருளோடு இன்று பதவி ஏற்று, அவர்கள் வேள்வித் தீ வளர்த்து அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள் தளபதியாய் மற்ற அமைச்சர் பெருமக்களுடன், வீரர்தம் படையுடனே தேர்தல் என்னும் யாகம் செய்து, அந்த யாகத்தில் தீர்க்கத்திலே, முன்னால் ஆண்ட வர்கள் அரக்கர்கள் அழிந்துவிட்டார்கள். அவர்களை காகிதப் பூக்களாய்க் கருகச் செய்து, அவர்களை வடிந்த கண்ணீராய் தேங்கவிடாமல் சிதறுண்டு போகச் செய்து, உலர்ந்த சருக்காய் மீண்டும் துளிர்க்க விடாமல் செய்து, புதைந்துபோன கல்லறைச் சவங்களாய் புதைத்துவிட்டு, மீண்டும் எழவிடாமல் செய்த தாயே எதிரிகளின் மௌனம்தான் இந்த மக்களின் சம்மதம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் கேளுங்கள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : எதிரிகளின் மௌனம் தான் இந்த மக்களின் சம்மதமோ இந்த மௌனத்தைக் கலைக்காதீர், மனநிறைவாய்த் தூங்கட்டும் எழவேண்டாம் என்று கூறி எங்களது புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் லோன் வாங்குவதற்கு பேங்குக்கு சிபாரிசு செய்யும் தாட்கோ நிறுவனம் என்று சொன்னார்கள். அது முடியாத காரணத்தால் தாட்கோ நிறுவனமே அந்த பேங்கைத் தத்தெடுத்து ஏழை. எளிய மக்கள் எளிதாய் லோன் வாங்குவதற்கு ஆவன செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முயலுவார்களா என்று கேட்டு விளக்கம் கோரி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைச் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வங்கிகள் மூலம் கடன் பெறுவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே தாட்கோ மூலமே அந்தக் கடனைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலுரையிலேயே அதைக் கூறி இருக்கிறேன் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண். 31. பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்.

திரு எம் எம். எஸ். அபுல்ஹசன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு ஜி. பழனிச்சாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 114,02,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



[பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரியதொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் நாளை 23—4—1992 காலை 9.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

65. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 21—5—1991 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

66. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 8—5—1991 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

67. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1989—90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்ப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

68. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

69. காவல் கைதிகள் சங்கரும் ஏனைய நால்வரும் 20—8—1990 அன்று இரவு அல்லது 21—8—1990 அன்று அதிகாலையில் தப்பித்துச் சென்றது குறித்து விசாரணை

செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி திரு. மு.மு.இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

138. கோரிக்கை எண். 31—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

139. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1992-93. (ஆங்கிலம்.)

140. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. 1991-92.

141. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை. 1991-92.

142. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. 1991-92.

143. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991—92.

144. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991—92.



(421 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

'' சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்.''

—மகாகவி பாரதியார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அதன் பல்வேறு நலத் திட்டங்களின் வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் கல்வி, பொருளாதார சமூக மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளைச் செவ்வனே செய்வதற்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கணக்குத் தலைப்பின் கீழ் 1992–93 ஆம் ஆண்டு ரூபாய் 114.03 கோடி வழங்குவதற்கான மானியக் கோரிக்கை எண். 31 ஐ நான் முன்மொழிகிறேன். இவர்களின் நலனுக்கான, வீட்டு வசதி மற்றும் ஏனைய பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம், கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டம் ஆகிய சில முக்கிய வளர்ச்சித் திட்டங்களையும், மேம்பாட்டு நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை 484 இலட்சம் ஆகும். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை முறையே 88.81 இலட்சமும் 5.20 இலட்சமும் ஆகும். இது, முறையே 18·35 சதவீதம் என்றும் 1.07 சதவீதம் என்றும் கணக்கிடப்பட்டது. 1991 ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்கள் சமூக சமத்துவத்தை எய்திட வேண்டும் என்ற நோக்குடன் சென்ற நாற்பதாண்டுகளுக்கும் மேலாக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டுள்ளன.

சென்ற ஆண்டு, வரவு-செலவுத் திட்ட அறிக்கையை அளிக்கும்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காகப் பத்தம்சத் திட்டமொன்றை அறிவித்தார்கள் என்பதை இந்த அவையின்

மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இத்திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அதனோடு தொடர்புடைய ஏனைய துறைகள் ஆகியவை அம்மக்களின் நீண்ட கால குறிப்பிடத்தக்கத் தேவைகளின்பால் தங்கள் நாட்டத்தைச் செலுத்தி அவற்றைக் கணிசமான அளவு நிறைவேற்றி சாதனை படைத்திட தூண்டுகோலாய் அமைந்தது என்பதை சுட்டிக் காட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப் பத்தம்சத் திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் பன்மடங்கு அதிக ஊக்கமுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி சமுதாயத்தினரின் நீண்டகால அடிப் படைத் தேவைகளான இணைப்புச் சாலைகள், போதிய குடிநீர் வசதிகள், இடுகாட்டு வசதி, இடுகாட்டிற்குச் செல்லும் நடைபாதை, தெருவிளக்குகள், வேலை வாய்ப்புகள் முதலியன போன்ற அனைத்து வசதிகளுக்கும் வகைசெய்யும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

சில சமூக விரோத சக்திகளின் கொடுமைக்கு ஆளாக்கப் பட்ட நலிவுற்ற இம்மக்களின் சுயமரியாதையைப் பாதுகாக்கும் பொருட்டு தலைமைச் செயலகத்தின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும், காவல் துறையின் குடியுரிமைகள் பாதுகாப்புப் பிரிவின் மூலம் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைகளிலிருந்து பாதுகாத்தல்) சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்த அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நீதியை நிலைநாட்டி, தீண்டாமையை அகற்றத் தனி நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1989 ஆம் ஆண்டு புதிய சட்டத்தின் கீழ் இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கு தனி மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தனியாக அரசு வழக்கு நடத்துநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி தமிழ் நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரில் கல்வியறிவு பெற்றவர்கள் 29.6 சதவீதத்தினர் மட்டுமே என்பதாலும் கல்வியால் மட்டுமே இச்சமூகத்தினரின் வாழ்க்கையை மேம்படுத்த முடியும் என்பதை நாம் நன்கு உணர்ந்திருப்பதாலும், கல்விக்கு நாம் அதிக முன்னுரிமை அளித்து வருகின்றோம். இத்துறையின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை, அதாவது, ரூபாய் 114·03 கோடியில் ரூபாய் 66.00 கோடி கல்விக்காகச் செலவிடப்படுகிறது என்பதிலிருந்து இது தெரியவரும். ஆதிதிராவிட-பழங்குடி மாணவர்களின் நலனுக்காக கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி இத்துறை, 1,222 பள்ளிகளையும் 902 விடுதிகளையும் நடத்தி வருகிறது. அதன் விவரம் வருமாறு:—



அட்டவணை

| பள்ளிகள். | பள்ளிகளின் எண்ணிக்கை. | வயது | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தொடக்கப் பள்ளிகள் | 1,066 | 6லிருந்து 11 | 1,70,914 |
| 2. நடுநிலைப்பள்ளிகள் | 73 | 11லிருந்து 14 | 27,378 |
| 3. உயர்நிலைப்பள்ளிகள் | 55 | 14லிருந்து 16 | 24,351 |
| 4. மேனிலைப்பள்ளிகள் | 28 | 16லிருந்து 18 | 35,048 |
| மொத்தம் .. | 1,222 | | 2,57,691 |

மாணவர் இல்லங்கள்:

| பள்ளிகள். | எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| உயர்நிலைப் பள்ளிகள் | 574 | 258 | 42,324 | 17,769 |
| கல்லூரிகள் | 41 | 17 | 5,007 | 982 |
| தொழிற் பயிற்சி நிலையங்கள் | 10 | 2 | 790 | 68 |
| மொத்தம் | 625 | 277 | 48,121 | 18,819 |

இதைத்தவிர இம்மாநிலத்தில் கல்வித் துறை நடத்தும் அனைத்துப் பள்ளிகளிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளில் மாணவர்-ஆசிரியர் விகிதத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, 1992-93 ஆம் ஆண்டு ரூபாய் 7.45 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 34 பி.டி. ஆசிரியர்களையும் 13 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களையும் 3 தமிழாசிரியர்களையும் நியமிக்கக் கருதப்பட்டுள்ளது. 50 சிறுவர் பயனடையும் வகையில் ரூபாய் 1.78 இலட்சம் செலவில் 1992-93 ஆம் ஆண்டு பெரியார் மாவட்டம் மகப்பாளையத்தில் பழங்குடி சிறுவர் தங்கிப்பயிலும் அரசினர் பள்ளி ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்நத 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவியரும் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவரும் 1992-93 ஆம் ஆண்டு, இலவசமாக இரண்டு சோடி சீருடைகளை தொடர்ந்து பெறுவர். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1.97 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்துறை நடத்தி வருகின்ற 1,222 பள்ளிகளில் 1,137 பள்ளிகள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. எஞ்சிய 85 பள்ளிகளும் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்ற எஞ்சிய 85 பள்ளிகளுக்கான சொந்தக் கட்டிட வசதி ஏற்படுத்துவதும் ஏற்கனவே சொந்தக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்ற பள்ளிகளுக்குத் தேவைக்கேற்ப கூடுதல் கட்டிட வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதும் அரசின் நோக்கமாகும். 1992-93 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென 1.61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள் மற்றும் அவற்றிற்குரிய பதில்கள் அச்சிடுவதற்காக 6.55 இலட்ச ரூபாய் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில், 10 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட கட்டிடங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள 7 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் 12.25 இலட்ச ரூபாய் செலவில் ஆய்வுக்கூட கட்டிடங்கள் கட்டப்படும்.

1992-93 ஆம் ஆண்டில் தற்போது உதவியாளர்கள் பதவிகளைக் கொண்டிராத 5 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் 1.36 இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து உதவியாளர்கள் பதவிகள் உருவாக்கப்படும்.



**படிப்புதவித் தொகைகளும் சலுகைகளும்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை, கல்விக் கடன் உதவித் தொகை மற்றும் பல்வேறு நிதி விதி விலக்குகள், சலுகைகள் ஆகியவற்றை அளித்து யுதவி அளிக்கப்படுகிறது. அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய (Pre-Matric) படிப்பிற்காக படிப்புதவித் தொகை 1 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்புவரை படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**பிற சலுகைகளாவன:**

1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுதல், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையால் இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுதல், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உண்டு உறைவிட உதவித் தொகை வழ்ங்கப்படுதல் மற்றும் பொதுப் பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. ரூ. 3.95 கோடி செலவில் 12.72 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களும் இத் திட்டங்களினால் பயனடைகின்றனர்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000 வரை உள்ளவர்களின் குழந்தைகள், மாநில உறைவிட படிப்புதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 250 லிருந்து 350 வரை பெறத் தகுதியுள்ளவராவர்.

சாதிமத வேறுபாடின்றி, சுகாதாரமற்ற (கழிவறை சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் பெருக்குதல்) பணிபுரிவோரின் குழந்தைகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 1,500 குழந்தைகள் பயனடைவதற்காக, ரூ. 24.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு அக்டோபர் வரையில் உண்டு உறைவிட உதவித் தொகை பெறும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் பயன் கிட்டும், 1—11—1991 முதல் இத்திட்டம், விடுதிகளில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கும்

நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான வருமான வரம்பை 1—11—1991 முதல் மத்திய அரசு மாத வருமானத்தை ரூ.1,000லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தியுள்ளது இத்திட்டத்தின்கீழ் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்கள் பயன் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மெட்ரிக் படிப்பிற்குப் பிந்தைய (Post Matric) படிப்பிற்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தைப் பெருவாரியாக இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவை.

(1) மத்திய அரசு நிதியுதவி வழங்கும் திட்டம்.

(2) மாநில அரசின் திட்டங்கள்.

1. மத்திய அரசு நிதியுதவி பெரும் திட்டங்கள்.

(அ) மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளாவன (1) பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். (2) ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே இச்சலுகை பெறத் தகுதியுள்ளவர் (ஆ) விடுதிகளில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 65-லிருந்து ரூ. 125-ம் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 115-லிருந்து ரூ. 280-ம் பராமரிப்புப் படியாக மத்திய அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றிற்குத் தோராயமாக 87,000 ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்கள் பயனடைகின்றனர்.

2. மாநில அரசின் திட்டங்கள்.

(அ) நிதியுதவி பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகள்.

(1) பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் 15,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். (2) மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களும், ஆதிதிராவிடர் இந்து/பழங்குடியினர் பெற்றோர்களின் மூன்றாவது மற்றும் அதற்குப் பிந்தைய குழந்தைகளும் நிதியுதவி பெறத் தகுதியானவர்கள் ஆவார்கள்.

இம்மாநிலத் திட்டத்தின் கீழ் மொத்தம் 8,000 மாணவர்கள் பயனடைகின்றனர்.





ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கும், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களுக்கும் பட்டமேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது,இதற்கென 1992-93-ல் ரூ. 67.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் கல்வி பயில விழையும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்து வரும் முதல் பட்டதாரி மாணவருக்கு அவர்களின் பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000 க்கும் மிகாமல் இருக்குமாயின், அத்தகைய மாணவருக்கு தொழிற்கல்வி வரையில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 0.95 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் கல்வி படிப்பு வகுப்புக்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் தேர்வில் முதல் முறையில் 60 சத விகிதம் மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேற்பட்டு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது, அதன் விபரம் வருமாறு.

| பாடம். | தொகை. | பயனடையும் மொத்த மாணவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | |
| (i) பட்டப்படிப்பு.. .. | 1,000 | 500 |
| (ii) பட்டமேற்படிப்பு .. | 1,250 | 300 |
| (iii) தொழிற்கல்வி பாடமுறைகள் | 1,500 | 200 |
| வேளாண்மை .. 25 | | |
| கால்நடை .. 25 | | |
| மருத்துவம் .. 50 | | |
| பொறியியல் .. 100 | | |

ஒவ்வொரு வகைப் பாடமுறையின் கீழ் பல்வேறு வகைப் பட்டங்களையும் சேர்க்கவும் தற்போது கருதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பட்டப்படிப்பு பாடமுறை .. | அனைத்து பட்டப்படிப்பு பாடமுறைகள் (மூன்றாண்டு காலம்) கொண்டவை. |
| 2. பட்டமேற்படிப்பு பாடமுறைகள். | எம். ஏ., எம். எஸ். சி. (எல்லா பாடங்கள் எம். காம்., எம். பி. ஏ., எம். எஸ். சி., (Applied subjects) எம். எஸ். சி., (மூன்றாண்டு பாடமுறைகள்) உடல் கூற்றியல், உடலமைப்பியல், மருந்தாக்கியல், நுண்ணுயிரியல் உயிர்வேதியியல்) செவிலிப் பணி மற்றும் மருந்துப் பொருளில் பட்ட மேற்படிப்பு, எம்பில் முதலியன. |
| 3. தொழில்கல்வி. | எம்.பி.பி.எஸ்., பி. டி. எஸ். பி. ஈ., பி. வி. எஸ். சி., பி. டெக் பி. ஆர்க், பி. எஸ். சி. (வேளாண்மை), பி. எஸ். சி., (தோட்டக்கலை), பி. ஈ., (வேளாண் பொறியியல்), பி. எஃப், எஸ்ஸி. பி. எல்., எம். எஸ். சி., (வேளாண்மை), எம். வி., எஸ்ஸி, எம். டெக். எம். எஃப். எஸ்.ஸி. எம். ஈ., எம். பில்., முதலியவை போன்ற உயிர்த் தொழில் நுட்ப தொழிற்கல்வி. |

மாணவர்களுக்கு வழங்கப்படுகிற படிப்புதவித் தொகையி
லிருந்து மாணவரில்லத்திற்காகும் செலவு முழுவதையும் மேற்
கொள்ள இயலா நிலையிலுள்ள மாணவர்களுக்குக் கடன் உதவித்
தொகை வழங்கப்படுகிறது. ஆண்டிற்கு 750 ரூபாயிலிருந்து
1,750 ரூபாய் வரை கடன் உதவித் தொகை வழங்கப் படுகிறது.
இதற்கென ஆதிதிராவிடர் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாண
வர்களுக்கு ரூ. 87.35 இலட்சம் ரூபாயும், கிருத்துவ மதத்
திற்கு மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்
களுக்கு 3.5 இலட்ச ரூபாயும், 1992-93 ஆம் ஆண்டிற்கு ஒதுக்
கீடு செய்யப்பட்டுளளது.

புத்தக வங்கித் திட்டத்தின் கீழ் மருத்துவ-பொறியியல்
கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர்: பழங்குடியினத்தை
சேர்ந்தவர்களும் மத்திய அரசின் மெட்ரிக் படிப்பிற்குப்
பிந்தைய படிப்பிற்கான படிப்புதவித் தொகை பெறுபவர்
களுமான மாணவர்கள் மூவர் கொண்ட குழுவிற்கு ஒரு செட்
புத்தகங்கள் வாங்கப்பட்டு, அவர்கள் பயனுக்கென கல்லூரி



புத்தக வங்கிகளில் வைக்கப்படுகின்றன. மத்திய அரசு
1990-91 ஆம் ஆண்டு வரை ஒரு செட் புத்தகங்களுக்கு 5,000
ரூபாய் அனுமதித்து வந்தது. 1991-92 ஆம் கல்வியாண்டி
லிருந்து இத்தொகை ஒரு செட் புத்தகங்களுக்கு ரூ. 7,500
ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு 1991-92 ஆம்
ஆண்டிலிருந்து வேளாண்மை, கால்நடை மருத்துவம், பல
தொழில் பயிற்சிப் படிப்புகள் ஆகியவற்றிற்கும் இத்திட்டத்தை
விரிவுபடுத்தியுள்ளது.

ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு
மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி
களுக்குச் சொந்தமாகச் சட்டத் தொழிலைத் தொடங்க மாநிலத்
திட்டத்தின் கீழ் ரூ. 750 கடனாகவும், ரூ. 750 மானியமாக
வும் கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த
இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தப் சட்டப்
பட்டதாரிகளுக்குச் சொந்தமாகச் சட்டத் தொழிலைத்
தொடங்க மத்திய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்
தின் கீழ் ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000 மானியமாக வழங்
கப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 193 மாண
வர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு
கல்லூரி அளவில் சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள் மூலம் பயிற்சி
அளிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
பயிற்சி வகுப்புகள், அனைத்துக் கல்லூரிகளிலும் கல்லூரிக்
கல்வி இயக்குநர் மூலமும், பொறியியற் கல்லூரிகளில்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மூலமும் நடத்தப்படுகின்றன.
சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்,
மதுரை, ஆகிய ஐந்து முக்கிய மாநகரங்களில் உள்ள தெரிந்தெடுக்
கப்பட்ட ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த
மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு
வருகின்றன. இத்திட்டம் மேலும் தொடர்ந்து செயல்படுத்
தப்படும்.

மாணவரில்லத்தில் இடவசதி:

ஆதிதிராவிடர், பழங்குடி மக்களில் பெரும்பாலானோர்
கிராமப்புறங்களிலும், ஓரளவு நகரத்தன்மை வாய்ந்த பகுதி
களிலும், வனப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்
கின்ற இடங்களுக்கு அருகில் கல்வி நிலையங்கள் பெரும்பாலும்
இருப்பதில்லை. இரண்டாவதாக ஆதிதிராவிடர், பழங்குடியினர்
வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் பொதுவாக
படிப்பறிவில்லாதவர்களாகவும், மிகவும் ஏழ்மை நிலையில்
உள்ளவர்களாகவும் இருப்பதால் தங்கள் பிள்ளைகளைப் பள்ளி
களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக தங்களின் அன்றாட வரு
மானத்தைப் பெருக்க அவர்களைப் பயன்படுத்தவே கருதுகின்
றனர். மூன்றாவதாக அவர்கள் வசிக்கும் இல்லங்களில்

போதிய வெளிச்சம், இடம், உணவு போன்ற வசதிகள் குறைவாக உள்ளதால் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிள்ளைகளுக்குக் கல்வி கிடைத்தற்கரிய ஒன்றாக உள்ளது. ஆகவே, தமிழ்நாடு அரசு, இம் மாணவர்கள் எந்தவோர் இடர்பாடும் இன்றிக் கல்வி பெற மாணவர் இல்லங்களைக் கட்டித் தந்துள்ளது. ஆதிதிராவிட மாணவர்களுக்கு 879 மாணவர் இல்லங்களும், பழங்குடி மாணவர்களுக்கு 23 மாணவரில்லங்களும் இத்துறையால் நடத்தப்படுகின்றன. இந்த மாணவரில்லங்களில் ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்களுக்கும் இடவசதியளிக்கப்படுகிறது. இத் துறை நடத்தும் மாணவரில்லங்களில் தற்போது 66,000 மாணவர்கள் தங்கியுள்ளனர். பள்ளிகளிலுள்ள மாணவரில்லங்களில் தங்குமிடவசதியுடன் உணவுச் செலவுக்கும் சேர்த்து ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு அரசு ரூ. 105 செலவிடுகிறது. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இருப்பிட வசதியோடு குளியல் சாதனப் பொருட்களான சோப்பு, சிகைக்காய், எண்ணெய் மற்றும் இரண்டு ஜோடி சீருடைகள் ஆகியவற்றை இலவசமாகப் பெறுகின்றனர்.

அரசு, சென்னை மாநகரில் பயிலும் கல்லூரி மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 160-ம் பிற ஊர்களில் பயிலும் கல்லூரி மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 155-ம் உணவுக் கட்டணமாக வழங்குகிறது. இம்மாநிலத்தில் கல்லூரி மாணவர்களுக்கென 58 மாணவரில்லங்களை இத்துறை நடத்தி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தவாறு 902 மாணவரில்லங்களுக்கும் 1991-92 ஆம் ஆண்டில் நூலக வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில், 43.81 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு மாணவரில்லத்திலும் 50 மாணவர்கள் தங்கும் வகையில் புதிதாக 30 மாணவரில்லங்களை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாணவரில்லங்களுக்கு 'இன்டேன்' எரிவாயு இணைப்பு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் 3.45 இலட்சம் ரூபாய் செலவில் 10 மாணவரில்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புகளும், 2,69 இலட்சம் ரூபாய் செலவில் 50 மாணவரில்லங்களுக்கும் மாவரைக்கும் எந்திரங்களும் வழங்கப்பட்டு உள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் 5.50 இலட்சம் செலவில் 100 மாணவரில்லங்களுக்கு மாவரைக்கும் எந்திரங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

மாணவரில்லங்களில் இடவசதி கோரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இத்தேவையை ஓரளவாவது நிறைவு



செய்யும் பொருட்டு புதிய மாணவரில்லங்களை ஏற்படுத்துவதுடன், தற்போதுள்ள மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அரசு ஒவ்வொராண்டும் அதிகரித்து வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் மாணவரில்லங்களில் கூடுதலாக 1,000 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 1,000 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 11.15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களின் நலனுக்காக அரசினர் மாணவர் இல்லங்களுடன் தொண்டு நிறுவனங்களும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் நிதி உதவியுடன் மாணவர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இம் மாநிலத்தில் இதுபோன்று 42 மாணவர் இல்லங்கள் உள்ளன.

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான தற்போதுள்ள 609 மாணவர் இல்லங்கள், 270 மாணவியர் இல்லங்கள் ஆகியவற்றில் 218 மாணவர் இல்லங்களும், 138 மாணவியர் இல்லங்களும், அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. எஞ்சிய 391 மாணவர் இல்லங்களும், 132 மாணவியர் இல்லங்களும், வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 2 மாணவர் இல்லங்கள் 5 மாணவியர் இல்லங்களுக்கு கட்டிடங்கள் கட்ட ரூ. 229.96 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 1992-93-ல் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார மேம்பாடு :**

வறுமையில் வாடும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மக்களுக்கு உதவி செய்ய, வருமானம் தரக்கூடிய திட்டங்களை உருவாக்குவது அவசரத் தேவையாகும். பல்வேறு தொழில்களுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**உழவு மாடுகள் வாங்கவும் ஏனைய வேளாண் திட்டங்களைச் செயல்படுத்தவும் உதவித் தொகை வழங்குதல்.**

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு, வேளாண்மை உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உழவு மாடுகளின் விலையில் 50 சதவீதத் தொகையை
உதவித் தொகையாக அரசு வழங்குகிறது. எஞ்சியுள்ள
தொகையை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற ஏற்பாடு
செய்யப்படுகிறது. உழவர் ஒருவர் ஒரு ஜோடி காளை மாடு
களை வாங்கலாம். இதற்காக அரசு, 1,500 ரூபாயை
உதவித் தொகையாக வழங்குகிறது.

இத்திட்டத்திற்கு 1992-93 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்
பழங்குடியினருக்கு முறையே ரூபாய் 13.00 இலட்சமும், ரூபாய்
1.38 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர
கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களுக்கு, இதே
நோக்கத்திற்காக, ரூபாய் 0.98 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித்தொகை.

தொழிற்பயிற்சி பெற்றவர்கள் அல்லது தொழில் திறமை
பெற்றவர்கள், இஸ்திரி பெட்டி, துணி தைக்கும் தையல்
எந்திரம், தோல் தைக்கும் தையல் எந்திரம் போன்ற
வற்றை இத்திட்டத்தின் கீழ் இலவசமாகப் பெறலாம்.

இத்திட்டத்திற்கு, 1992-93 ஆம் ஆண்டில் ரூபாய் 16.46
லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் :

ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
ஆதிதிராவிடர், கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்
ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், இவர்
களுக்கான வேலை வாய்ப்பைப் பெருக்கவும், பால் உற்பத்தி
யாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஆதி
திராவிடர், கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்
ஆகிய ஒவ்வொருவருக்கும் கறவை மாடு வாங்க மாடு ஒன்றுக்கு
ரூபாய் 3,200 வழங்கப்படுகின்றது. இதில், 50 சதவீதத்
தொகையை அரசு உதவித் தொகையாக வழங்குகின்றது.
எஞ்சியுள்ள ரூ. 1,600 தொகையை நாட்டு உடைமையாக்கப்
பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற ஏற்பாடு செய்
கிறது.

மேற்கண்ட உதவியைப் பெறும் ஒவ்வொருவரும் இரண்டு
மாடுகள் வரை, வாங்குவதற்குக் தகுதியுடையவராவர். இந்
நிதி உதவி பெறுவதற்குக் ஆண்டு வருமானம் ரூ. 6,400 என
அரசு 1990-ஆம் ஆண்டில் நிர்ணயித்தது. பால் உற்பத்தி
பால் பண்ணை வளர்ச்சித் துறை ஆணையர் இத்திட்டத்
தினைச் செயல்படுத்துகின்றார்.





இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களில் ஆதிதிராவிடர்
கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின்
ஆண்டு வாரியான எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| ஆண்டு. | | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. ஆதிதிராவிடர். | கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1983—84 | .. | 3,885 | 143 |
| 1984—85 | .. | 3,823 | 136 |
| 1985—86 | .. | 3,634 | 120 |
| 1986—87 | .. | 4,016 | 120 |
| 1987—88 | .. | 3,936 | 120 |
| 1988—89 | .. | 4,686 | 120 |
| 1989—90 | | 5,886 | 145 |
| 1990—91 | | 8,044 | 124 |
| 1991—92 | .. | 8,000 | 93 |

1991-92 ஆம் ஆண்டில் இதற்காக ஆதிதிராவிடர், கிருத்துவ
மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோருக்கு ரூபாய் 51.50
இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்
கான நிதி ஒதுக்கீடு ரூ. 51.50 இலட்சமாகும்.

குடிசைத் தொழில்கள் :

குடிசைத் தொழில் பயிற்சி நிலையங்கள் தொடர்ந்து
பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களைப்
பராமரிப்பதற்குத் தேவைப்படும் நிதியை ஆதிதிராவிடர் பழங்குடி
யினர் நலத்துறை, சமூக நல இயக்குநரிடம் அளிக்கிறது.

இதற்காக 1992-93 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்குப்
பயிற்சி அளிக்க ரூ. 5.06 இலட்சமும் பழங்குடியினருக்குப்
பயிற்சி அளிக்க ரூ. 0.70 இலட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 22

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் தையல் நெசவு பயிற்சி மையம் ஒன்று ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் தொடர்ந்து நடந்தப்படுகிறது.

**பயிற்சியும் வேலைவாய்ப்பும் :**

அரசுப் பணிகள், கணிப்பொறி பயிற்சி கப்பல் வானொலி அலுவலர் பயிற்சி, செவிலியர் பயிற்சி, வாகனப் பொறியியல் பயிற்சி, மருத்துவமனை நிருவாகப் பயிற்சி போன்ற அமைப்பு ரீதியிலான, முன்னேறிய துறைகளில் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சித் திட்டங்கள், படித்த வேலை வாய்ப்பற்ற ஆதிதிராவிடர் இளைஞர்களுக்குரிய வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளன. சிறப்பு மத்திய உதவி நிதியைக்கொண்டு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்கத்தால் நிறைவேற்றப்படும் ஒரு சில பயிற்சி திட்டங்கள் பற்றிய விவரம் பின் வருமாறு:



1992 ஏப்ரல் 22]

| தொடர் எண். | பயிற்சி வகுப்பின்/ திட்டத்தின் பெயர். | பயிற்சிக்கு அனுமதிக் கப்பெற்றவர்களின் எண்ணிக்கை. | பயிற்சி பெற்றவர்கள்/ பயிற்சி பெற்று வருவோரின் எண்ணிக்கை. | பயிற்சிக் காலம் (மாதங்களில்). | இன்றுவரை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்திற்கு சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து வழங்கப்பட்ட மொத்தத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | கணிப்பொறி பயிற்சி .. .. | 550 | 550 | 12 | 16,78,000 |
| 2. | மருத்துவமனை நிருவாகத்தில் மேல் பயிற்சி .. .. .. | 30 | 30 | 24 | 3,75,000 |
| 3. | கனரக ஊர்தி எந்திரவியல் பயிற்சி (நான்கு சக்கரவண்டிகள்) .. | 679 | 679 | 3 | 23,16,000 |
| 4. | சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி அளித்தல் .. .. | 277 | 277 | 48 | 9,57,000 |
| 5. | மூல முன்மாதிரி பயிற்சி/மேம்பாடு .. | 32 | 32 | 3 | 9,600 |
| 6. | காவல் / ஆயுதந்தாங்கியபடை .. | 100 | 100 | 2 | 1,26,050 |
| 7. | செவிலியர் .. .. .. .. | 30 | 30 | 12 | 1,73,500 |
| 8. | வாகனப் பொறியியலில் பட்டயப் படிப்பு .. .. .. .. | 10 | 10 | 36 | 4,11,200 |
| 9. | கப்பல் வானொலி அலுவலர் பயிற்சி | 200 | 200 | 12 | 14,64,000 |

சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி :

ஆதி திராவிடர்/பழங்குடியினத்தைச் சேர்ந்த 20 சட்டப் பட்டதாரிகளுக்கு நீதி நிருவாகத் துறையில் 4 ஆண்டுக்காலப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரசினால் அமைக்கப்பட்ட குழுவினால் இப்பயிற்சிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒரு முதுநிலை வழக்குரைஞரின் கீழ் இரண்டு சட்டப் பட்டதாரி மாணவாகள் வீதம், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் 1988-89-லிருந்து சிறந்த முறையில் செயல்படுத்தபட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் மாணவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை வழங்கப்படுகிறது. சட்டப் பட்டதாரிகள் இருவருக்குப் பயிற்சி அளிப்பதற்காக மூத்த வழக்குரைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுதோறும் ரூ. 5,000 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சட்டப் பட்டதாரிகள் வீதம் 42 நபர்களுக்குப் பயிற்சியளிக்க, 1989-90 ஆம் ஆண்டில் மைய அரசின் சிறப்பு நிதியுதவியின் கீழ் ரூ. 3.78 இலட்சம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது 37 நபர்கள பயிற்சி பெற்று வருகின்றனர். இதன்படி, ஒவ்வொரு சட்டப் பட்டதாரியும் ஒரு மூத்த வழக்குரைஞரிடம் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்காக மூத்த வழக்குரைஞருக்கு வருடத்திற்கு ரூ. 2,500 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. சட்டப் பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

அரசுப்பணி :

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், ஸ்டாஃப் செலக்ஷன் கமிஷன் முதலியவை நடத்தும் போட்டித் தேர்வுகளை எழுத விழையும் மாணவர்களுக்கு பயிற்ச்சி அளிக்கப்படுகிறது.

(ஆ) 1991-92 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகையான ரூ. 86,050-ஐக் கொண்டு 559 மாணவர்களுக்கு 1991 ஜூன் திங்களில் மருத்துவம்/பொறியியல்/வேளாண்மை இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்கான நுழைவுத் தேர்வுகளை எழுதப்பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(இ) ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கானத் தேர்வுக்கு முந்தைய பயிற்சி நிலையத்தில் ஒவ்வோராண்டும் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி முதலிய அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வை எழுத விழையும் 60 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில்





1991-92 ஆம் ஆண்டில 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்கள் 1992 ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ள முதல்நிலைத் தேர்வு எழுத இருக்கின்றனர். இதுவரையில 25 தொகுதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் 59 பேர் பணியில் நியமிப்பதற்கு இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வீட்டு வசதித் திட்டம் :

வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தருதல் என்பது உலகின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ள ஒரு பிரச்சினையாகும். நம் நாட்டில் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ள போதுமான நிதி வசதியில்லாத மக்கள அதிக அளவில் இருப்பதால், அவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டியது அவசரத் தேவையாகும். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழக அரசு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தை 1974 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து, 1988-89 ஆம் ஆண்டு வரை 78,673 வீடுகளைக் கட்டி அவற்றை ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. 1989-90 ஆம் ஆண்டிலிருந்து "தாட்கோ", ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வீடுகளைக் கட்டவில்லை அவர்களுக்கான வீடுகளை, ஊரக வளர்ச்சித்துறை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடுகளாகக் கட்டி வருகிறது. 1989-90 ஆம் ஆண்டில், ஊரக வளர்ச்சித் துறை, ஆதி திராவிடர்களுக்காக 42,000 வீடுகளைச் கட்டியது. மேலும் 47,000 வீடுகள் 1990-91 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டில் மேலும் 50,000 வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டம், 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கான்கிரீட் மேற் கூரை அமைக்க, வீடு ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் இத்துறை வழங்குகிறது. இதற்காக 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 11.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகளை அளிப்பதுடன்; வீட்டு மனைகள் வழங்க, அரசு, நிலங்களையும் கையகப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆதி திராவிடர் குடும்பத்துக்கும் 3 சென்ட் நிலம் வீட்டு மனையாக வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டு வரை 16,93 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கையகப்படுத்திய நிலங்களிலிருந்தும், அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்தும், 1991-92 ஆம் ஆண்டில் 29-2-1992 வரை 1.11 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில், நிலங்களைக் கையகப்படுத்த, வரவு-செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் முதலில் நிதியொதுக்கம் செய்யப்பட்டது. அதிகரித்து வரும் தேவையை நிறைவு செய்ய, நிலங்களைக் கையகப்படுத்த, மேலும் 1 கோடி

ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியது. 19-9293 ஆம் ஆண்டில் 75,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் வழங்க 4 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தீண்டாமை ஒழிப்பு.

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நீதியும், சமத்துவமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை முறையாகவும், திறம்பட்ட வகையிலும் நிருவகிக்க, தமிழ் நாட்டில் 25 நடமாடும் காவல் படைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 4 தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, வழக்குத் தொடரும் 8 குழுக்களும் செயல்பட்டுவருகின்றன.

இந்திய அரசால் இயற்றப்பட்ட 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் பழங்குடியினர் (வன்முறைகள் தடுப்பு) சட்டம், 31-1-1990 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. இச்சட்டம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு, மேற்சொன்ன சட்டத்தின் தமிழாக்க நகலை அச்சிடுவதற்கு, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு சட்டத்துறையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தீண்டாமை என்னும் சமூக கேடு, நயத்தக்க நற்பண்பு, சீர்காண் நன்மதிப்பு நீதி, ஆகிய மனிதப் பண்புகளுக்கு முரண்பட்டதாகும். இக்கொடிய பழக்கம் சமுதாயம் முழுமைக்கும் ஊறு விளைவிக்கக்கூடியதாகும். ஒவ்வோராண்டும் ஜனவரித் திங்கள் 24 ஆம் நாளிருந்து 30-ம் நாள் வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இது, தீண்டாமையினால் ஏற்படக் கூடிய சமூகக் கேடுகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகக் கருதப்படுகிறது. தேவையான பணியாளர்கள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்ட இரண்டு விளம்பரப் பிரிவுகள், நமது மாநிலத்தில் தீண்டாமையை ஒழிப்பது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றன.

தீண்டாமைக் கொடுமைகள் நிலவுகின்ற பகுதிகளைக் கண்டறிவதற்காக தீவிர ஆய்வு நடத்த 1989-90 ஆம் ஆண்டில் சிறப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் 4,293 கிராமங்களில் தீண்டாமைக் கொடுமைகள் உள்ளன என்பது இந்த ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் அடிப்படையில், இப் பகுதிகளில் இனக் கலவரங்களைத் தடுக்கவும், இன ஒற்றுமையை வளர்க்கவும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பு நடவடிக்கைகளாவன :

(1) தீண்டாமைக் கொடுமை பற்றி மக்களுக்குப் பல்வேறு விளம்பரச் சாதனங்களின் மூலம் அறிவுறுத்தல் ;



(2) இக்கிராமங்களில் வாழும் ஏனைய மக்களோடு இயல்பாகக் கூடி வாழ உதவும் வகையில் இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் ;

(3) சம பந்தி போஜனத்திற்கு ஏற்பாடு செய்தல் ;

(4) அமைதியை நிலைநாட்டவும், பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளச் செய்யவும், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்களை அமைத்தல் ;

(5) பொதுவாக இச்சமூகத்தினருக்கு உதவும் வகையில் பல்வேறு தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்து தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் ஆகியனவாகும்.

(6) தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாகச் செயல்படும் 3 கிராமங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றுக்குப் பரிசாக மூன்று வானொலிப் பெட்டிகள் ஒலி பெருக்கியுடன் வழங்கப்படுகின்றன ;

**இட ஒதுக்கீடு விதிகள் ;**

அரசுப் பணிகளில் எ, பி, சி, டி. பிரிவுகளுக்கு நேரடி நியமனங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட பதவிக்கான இடங்களைப் பிற வகுப்பினரைக் கொண்டு நிரப்புவதற்கு 1-4-1989 முதல் அரசு தடை விதித்துள்ளது.

பணி மாற்றம் /பதவி உயர்வு மூலம் செய்யப்படும் நியமனங்களுக்குத் தகுதி வாய்ந்த ஆதி திராவிடர், பழங்குடியினர் கிடைக்காவிடில், அக்காலியிடங்கள் 4 நியமன ஆண்டுகளுக்கு (நியமன ஆண்டு + அடுத்து வரும் 3 நியமன ஆண்டுகள் என்ற கணக்கில்) தொடர்ந்து கொண்டு வரப்பட வேண்டும்.

பொதுப் பணிகளில் நியமனம் ,கல்வி நிறுவனங்களில் மாணவர்களை அனுமதித்தல் ஆகியவற்றில் ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கென தனியாக 1 சதவீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது..

**பழங்குடியினர் :**

தமிழ்நாட்டில் பழங்குடியினரின் மக்கட் தொகை மிகவும் குறைவாக உள்ளது. பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஆறு மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் ஒன்பது பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பழங்குடியினரில்

40 சதவீதத்தினர் இப்பகுதிகளில் வாழ்கின்றனர். இப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் முழுமையான மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் தொழில் முறைகளுக்கேற்ப தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு போன்ற திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (Lamps) பழங்குடியினரை இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பதோடல்லாமல் அவர்களுக்குக் குறுகியகால மற்றும் நடுத்தரக் கால கடன்களையும், இன்றியமையா நுகர் பொருட்களை நியாய விலையில் வழங்கியும் வருகின்றன. இத்தகைய பெரிய அளவிலான 16 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளிலும். மேலும் இரண்டு சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளிலும் உள்ளன.

பழங்குடியினரின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் கல்வி, சுகாதாரம், மின்வசதி, குடிநீர் வழங்குதல் ஏனைய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தவும் ,பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் வகை செய்கிறது. பண்டைய பழங்குடியினர் என்று தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களை மேம்படுத்துவதற்குத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்ட ஒதுக்கீடு ரூ. 19.53 கோடி ஆகும். 1991–92 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 16.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்படாத பகுதிகளிலும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

1992–93 ஆம் ஆண்டில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் 9,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடையுமாறு செய்யக் கருதப்பட்டுள்ளது. பழங்குடியினரின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பழங்குடியினர் குழந்தைகள் பயன் பெறுவதற்காக, ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை 13 மாவட்டங்களில் நான்கு உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து மேனிலைப் பள்ளிகள் உட்பட மாணவரில்ல வசதியுடன் கூடிய 215 பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 14,050 ஆகும். இப்பள்ளிகளில் பயிலும்



மாணவ மாணவியருக்கு இலவசமாக உணவும் தங்குமிட வசதியும் அளிக்கப்படுகின்றன. பழங்குடியினர் தங்கிப் பயிலும் அரசுப் பள்ளிகள் மற்றும் இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கம்பளிப் போர்வைகளும் வழங்கப்படுகின்றன.

பழங்குடியினரின் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக, உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் சம்பந்தப்பட்ட அரும் பொருட்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஐந்து ஆண்டு கால அளவில் செயற்படுத்தப் படவிருக்கும் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 200 இலட்சம் செலவிடப்படவுள்ளது. இதற்கு மத்திய அரசு 50 சதவீத நிதியுதவி வழங்கும். 1992–93 ஆம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் இதற்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டம் :**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தச் சிறப்பு உள்ளடக்கத் திட்டக் கோட்பாடு உருவாக்கப் பெற்றது. இத் திட்டம்—

(1) சிறப்பு உள்ளடக்கத் திட்டம்.

(2) மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி என்னும் இரு அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

திட்டத்தின் பயன்களும் மாநிலத் திட்டத்திற்கான பொதுத் துறைகளின் நிதியொதுக்கமும் திட்ட வகையிலும் நிதி வகையிலும் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டுக்குப் போய்ச் சேர்வதை முறைப்படுத்தும் விதத்தில் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பல துறைகள் தங்களுடைய மொத்த நிதியொதுக்கத்திலிருந்து ஆதி திராவிடர்களின் மேம்பாட்டுக்காக, ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையைச் செலவிடுகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 10 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன்பெறுவதற்காக ரூ. 686.25 கோடி செலவிடக் கருதப்பட்டது. உண்மையில், இதற்காக ரூ. 774.10 கோடி செலவு செய்யப்பட்டு 10.55 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றன. 1991–92 ஆம் ஆண்டில் 2.5 இலட்சம் ஆதி திராவிடர்கள் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் ரூ. 272.68 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது. 29-2-1992 ஆம் நாள் நிலவரப்படி 2.41 இலட்சத்திற்கும் மேலான குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் மூலம் 2.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 293 கோடி ரூபாய் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

**மத்திய அரசின் நிதியுதவி :**

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, ஒவ்வோராண்டும் சிறப்பு நிதியுதவி அளிக்கிறது. இது, ஆதி திராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மாநில அரசு செய்து வரும் முயற்சிக்கு மேலும் கூடுதலாகக் கிடைக்கும் தொகையாகும். இந்த நிதி, ஆதி திராவிடர்கள் பொருளாதார வளர்ச்சிக்காக மாநில அரசின் திட்ட நிதியோடு சேர்த்து பயன்படுத்தப்படும். 1980—81 ஆம் ஆண்டிலிருந்து 1991—92 ஆம் ஆண்டு வரையில், மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியாக ரூபாய் 153.95 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி, வேலை வாய்ப்பை அதிகப்படுத்தும் மற்றும் வருமானத்தைப் பெருக்கும் திட்டங்கள் பல்வேறு அரசுத்துறைகள் மூலம் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவற்றில், கூட்டுறவு நூற்பாலைகள், கைத் தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல் தயாரிப்பு தொழிலாளர் கூட்டுற வுச் சங்கங்கள், கல் உடைக்கும் பிரிவுகள், தோல் பதனிடும் பிரிவுகள், காலணிகள் தயாரிக்கும் பிரிவுகள், பட்டுப்புழு வளர்க் கும் திட்டங்கள், கயிறு திரிக்கும் பிரிவுகள், காலணி தைப்பவர் களுக்கான நடைபாதை பெட்டிக் கடைகள், தனிநபர்/குடும்பங் கள் நலனுக்கான ஏனைய திட்டங்கள் ஆகியவை அடங்கும். சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலம் சுயமாக முன்னேற விழை வோருக்குப் போதிய நிதியுதவி அளித்து தகுந்த வழி காட்டப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்து ஆதி திராவிடர்களுக் கென்று மளிகைக் கடைகள், மிதி வண்டிக் கடைகள், சிறிய கடை கள், தேநீர்க் கடைகள், ஒலிபெருக்கி மற்றும் தையல் கடைகள் போன்ற சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன.

**தனியார் தொழில் முனைவோர் திட்டங்கள்:**

ஆதி திராவிடர்களில் தொழில் முனைவோர்களை உருவாக்க, ஒவ்வொரு தனியார் தொழில் முனைவோர் திட்டத்திற்கும் ரூபாய் 5.00 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. திட்டச் செலவில் உயரளவு ரூ. 15,000 வரை மானியமாகவும் ரூபாய் 85,000 அல்லது திட்டச் செலவில் 20 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகை 4 சதவீத வட்டி விகிதத்தில் 10 ஆண்டில் வசூலிக்கத்தக்க விளிம்புத் தொகைக் கடனாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள தொகை இத்திட்டத்தில் பங்கு பெறுகிற நிதியுதவி நிறுவனங்களால் கடனாகக் கொடுக்கப்படு கிறது. ரெடிமேட் துணி நிறுவனங்கள், தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், கல் உடைக்கும் பிரிவுகள் அச்சகங்கள், உள்ளாடைகள் தயாரிக்கும் பிரிவுகள், டிராக்டர் டிரெயிலர்கள், பளபளப்பான கருங்கல் தயாரிக்கும் பிரிவுகள்,



லாரிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், அம்பாசிடர் கார்கள், வீடியோ அகங்கள் முதலிய சொத்துக்கள் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 650-க் கும் மேற்பட்ட ஆதி திராவிட வகுப்பினர் தொழில் முனைவோர் களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

சுயவேலை வாய்ப்பு வசதிகளைப் புதிதாக ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும் தொழில் தொடங்குவதற்கும் ஆதி திராவிட இளைஞர்களுக்கு தேவையானபோது பயிற்சி அளிக்கப்படுகிறது. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் ஆதி திராவிட விண்ணப்பதாரர்களின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கணிப்பொறி, தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்பு நிதியுதவி, வேளாண்மைத் துறையில் விதை, உரம், நாற்று, ஆடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றை வழங்குவது போன்ற திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**1992-93-ஆம் ஆண்டு செயல் திட்டம் :**

(1) சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் (ஊரக மற்றும் நகர்ப்புறம்) சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள், வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்பான பணித் திட்டங் கள் ஆகியவை மொத்தம் ரூபாய் 1,600.50 இலட்சம் செலவில் சுமார் 18,850 ஆதி திராவிடர் குடும்பங்களின் பயனுக்காகச் செயல்படுத்தப்படும்.

(2) தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 2,000 தொழில் முனைவோர் உருவாக்கப் படுவர். இதற்கான உதவித் தொகை மற்றும் விளிம்புக் கடன் தொகை ரூபாய் ஏழு கோடியாகும்.

(3) பொதுப் பணி நிறுவனங்கள் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதும் 5,840 ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய் 22.37 இலட்சம் மதிப் பீட்டுச் செலவில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன திட்டங்கள் 1992-93 ஆம் ஆண்டில் செயல் படுத்தக் கருதப்பட்டுள்ள முக்கிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுள் சிலவாகும். மேற்சொன்ன திட்டங்களுக்காகும் செலவு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி, விளிம்பு நிதியுதவிக் கடன், நிறுவன நிதியுதவி ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் உதவித் தொகையிலிருந்து செய்யப்படும்.

**விளிம்பு உதவித் தொகை :**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பாக நலிந்த பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு, நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும், தங்கள் பங்கை ஆற்றுகின்றன. வங்கித்துறையில் கிடைக்கப்பெறும் ஆதாரங்களைப் பெற, சுய வேலை வாய்ப்புத் திட்டங்களைத் தொடங்குவதற்காக ஆதி திராவிடர்களுக்கு விளிம்பு உதவித் தொகை (கடன்) வழங்கும் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், சிறப்பு மத்திய உதவியிலிருந்து 50 சதவீத உதவித் தொகை வழங்குவதோடு, திட்டத்திற்காகும் செலவில் 25 சதவீதத் தொகை இந்த நிதியிலிருந்து 4 சதவீத வட்டி வீதத்தில் விளிம்புத் தொகையாக வழங்கப்படும். எஞ்சியுள்ள தொகை வங்கியிலிருந்தோ, நிதியுதவி நிறுவனங்களிலிருந்தோ கடனாகப் பெறப் படும். இத்திட்டத்தை ''தாட்கோ'' செயற்படுத்தி வருகிறது. மத்திய அரசு இந்நிதியில் 49 சதவீதத் தொகையை அளிக்கிறது. எஞ்சியுள்ள 51 சதவீதத் தொகையை மாநில அரசு அளிக்கிறது. விளிம்புத் தொகையை வழங்கி, அதனைத் திருப்பி வசூலிக்கும் நடைமுறையில் அதிக அளவு எழுத்துப்பணி இருக்கிறது என்று வங்கிகள் கருதியதால் இத்திட்டத்தின் கீழ் எய்திய முன்னேற்றமானது அவ்வளவு திருப்தியாக இல்லை. இந்த இடர்பாடுகளை நீக்கவும், வங்கிகளுக்கு ஊக்கமூட்டவும், விளிம்புத் தொகையை குறித்தகால வைப்பீடுகளாக வங்கிகளில் வைப்பீடு செய்யுமாறு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட ஆணைகளின்படி, வங்கிகள், தேவையான கடன் தொகைகளை பயனீட்டாளர்களுக்கு வழங்கி, அக்கடன் தொகைகளை வசூலிக்கிறது. இத்திட்டத்திற்காக 1992–93 வரவு - செலவுத் திட்டத்தில் ரூபாய் 250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இருபது அம்ச த்திட்டம் :**

இருபது அம்சத் திட்டம் தமிழ் நாட்டில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 20 அம்சத் திட்டத்தின் 11 (ஏ) ஆம் அம்சம் '' ஆதி திராவிடர்களுக்கு நீதி வழங்குவது '' பற்றியதாகும். 11 (பி) ஆம் அம்சம் ''பழங்குடியினருக்கு நீதிவழங்குவது'' பற்றியதாகும்.

1992–93 ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின் 11 (ஏ) ஆம் அம்சத்தின் கீழ் 2.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களையும் 11 (பி) ஆம் அம்சத்தின் கீழ் 9,000 பழங்குடியினர் குடும்பங்களையும், கீழே குறிப்பிட்டுள்ள வகையில் பொருளாதார



மேம்பாட்டுத் திட்டங்களின் துறைகளின் கீழ்க் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது :—

**அம்சம் 11 (ஏ) (ஆதி திராவிடர்கள்) :—**

1. நிலச் சீர்திருத்தம்.
2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.
3. மண்வளப் பாதுகாப்பு.
4. கால்நடை வளர்ப்பு.
5. பாற்பண்ணை வளர்ச்சி.
6. தொழில் - வணிகம்.
7. பட்டுப்புழு வளர்ப்பு.
8. ஆதி திராவிடர் நலன்.
9. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி - வளர்ச்சிக் கழகம் (சிறு கடைகள் முதலியவை).
10. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் முதலியவை மூலம் செயல்படுத்தப்படும் மத்தியஅரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்.

**அம்சம் 11 (பி) (பழங்குடியினர்) :**

1. தோட்டக்கலை.
2. பட்டுப்புழு வளர்ப்பு.
3. கால்நடை வளர்ப்பு.
4. கதர்-கிராமத் தொழில்கள்.
5. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.
6. பழங்குடியினர் நலம்.

1992–93 ஆம் ஆண்டில், மானியக் கோரிக்கை எண். 31-என்பதன் கீழ் அனுமதித்த தொகையான ரூபாய் 114.03 கோடியும், சாட்டிய தொகையான ரூபாய் 0.50 கோடியும் செலவிடப்படும். இத்துடன், மானியக் கோரிக்கை எண். 43—(பல்வகை) என்பதன் கீழ், ரூபாய் 0.72 இலட்சமும் மானியக் கோரிக்கை எண். 61 (மூலதனச் செலவு) என்பதன் கீழ் ரூபாய் 7.70 கோடியும் மானியக் கோரிக்கை எண். 62 (கடன்களும் முன் பணங்களும்) என்பதன் கீழ் ரூபாய் 0.91 கோடியும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மேம்பாட்டிற்காகச் செலவிடப்படும்.

1992-93ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

(ரூபாய் 11,58,802 மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டம் ஆயிரத்தில்.)

| தொடர் எண். திட்டத்தின் விவரங்கள். | மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் செலவுப் பொருப்பேற்கும் திட்டங்கள். | | மாநிலத் திட்டம். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | பழங் குடியினர் | ஆதி திராவிடர். | பழங் குடியினர் | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | பெரு மொத் தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | | (ரூபாய் ஆயிரத்தில்). | | | | |
| | 3,25,453 | 7,258 | 3,05180 | 60,335 | 4,26,212 | 34,364 | 10,56,845 | 1,01,957 | 11,58,802 |
| **1. கல்வி—** | | | | | | | | | |
| 1. படிப்புதவித்தொகை .. .. .. | 78,993<br>2,452** | 231 | 30,385<br>8,560 (க)<br>350(க) | 40(க) | 24,715<br>21,326<br>135 (க) | 279 | 1,66,916 | 550 | 1,67,466 |
| 2. மருத்ததுவப் பொறியியல் பட்டப்படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்குப் புத்தக வங்கி .. | 3,200** | .. | .. | .. | .. | .. | 3,200 | .. | 3,200 |
| 3. பி.ஏ., பி.எஸ். சி., பி.காம், பட்டப்படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு இலவசக்கல்வி | .. | .. | 6,773 | .. | .. | .. | 6,773 | .. | 6,773 |
| 4. தொழில் முறைப்பாடம் பயிலும் ஆதிதிராவிடர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி வழங்குதல். | ..<br>.. | .. | 75 | .. | .. | .. | 75 | .. | 75 |
| 5. தொழில் முறைப்பாடம் பயிலும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு இலவசக் கல்வி. | .. | .. | .. | 20 | .. | .. | .. | 20 | 20 |
| 6. பள்ளிகள் .. .. .. .. | .. | | 1,470<br>400<br>1<br>110 | .. | 1,83,784<br>17,248 | 14,437 | 2,03,013 | 14,437 | 2,17,450 |
| 7. பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல், பழுது பார்த்தல். | .. | .. | 1,900<br>16,050 (மு) | 250<br>1(மு) | 1,665 | 383 | 19,615 | 634 | 20,249 |
| 8. சீருடைகள் .. .. .. .. | .. | .. | 3.383 | .. | 15,307 | 968<br>10<br>15 | 18,690 | 993 | 19,683 |
| 9. சாரணர், சாரண ஆசிரியர் ஆகியோருக்கு சாரணர் சீருடை வழங்குதல். | .. | .. | 119 | 16 | .. | .. | 119 | 16 | 135 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் கரும்பலகைகள் மற்றும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குவதல். | .. | .. | 9,907<br>176<br>621 | .. | 3,905 | 352 | 14,609 | 352 | 14,961 |
| 11. ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு. | .. | .. | 503.. | 400 | 49 | 35 | 552 | 435 | 987 |
| 12. சுற்றுலா .. .. .. | | .. | 72 | .. | .. | 12 | 72 | 12 | 84 |
| 13. பரிசுப் பொருட்கள் .. .. | .. | .. | .. | .. | 200 | .. | 200 | .. | 200 |
| 14. மாணவர் இல்லங்கள் .. .. .. | .. | .. | 29,769<br>494 | 3,738<br>338 | 98,961 | 4,766<br>1299<br>3757 | 1,29,224 | 13,898 | 1,43,122 |
| 15. மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல். | 30,000**<br>மு | ]·*<br>மு | .. | 1<br>(மு) | 1,075 | 46 | 31,075 | 48 | 31,123 |
| 16. பகுதி நேர ஆசிரியர்கள் .. .. | .. | .. | .. | .. | 60 | 5 | 60 | 5 | 65 |
| 17. தங்கிப் பயிலுவதற்கான மானியம் .. | .. | .. | .. | .. | 1,452<br>5 | 118 | 1,457 | 118 | 1,575 |
| 18. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்குத்தனித் தகுதி மானியம் | .. | .. | .. | 2,363 | .. | .. | .. | 2,363 | 2,363 |
| 19. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல். | .. | .. | | .. | 1,175.. | .. | 1175 | .. | 1175 |
| 20. தேர்வுக்கு முந்தைய பயிற்சி நிலையங்கள் | 1,660** | .. | 112 | .. | .. | .. | 1,772 | .. | 1,772 |
| 21. பல்கலைக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகை. .. | .. | .. | .. | .. | 1,000 | .. | 1,000 | .. | 1,000 |
| 22. கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி .. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | .. | 50 |
| 23. கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை. | .. | .. | 290*<br>150 | ..<br>.. | 340<br>5 | 50<br>60 | 780 | 110 | 890 |
| 24. பட்டயக் கணக்கர் தேர்வு .. .. | .. | .. | .. | .. | 5 | .. | 5 | .. | 5 |
| 25. தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி. | .. | .. | 190<br>184* | .. | .. | .. | 874 | .. | 874 |
| 26. அதிகப் மதிப்பெண் பெற்ற மாணவ /மாணவி களுக்குச் சிறப்பு பயிற்சி வகுப்புகள். | .. | .. | .. | .. | 32 | .. | 32 | .. | 32 |
| 27. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துறை யின் கல்விப் பிரிவை விரிவு படுத்துதல். | .. | .. | 1 | .. | 664 | .. | 665 | .. | 665 |
| 28. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு பயிற்சி உதவித் தொகை. | .. | .. | .. | .. | 1,850 | .. | 1,850 | .. | 1,850 |
| 29. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு சிறப்பு தொழிற்பயிற்சி நிறுவனம். | .. | .. | 388 | .. | ... | .. | 388 | .. | [illegible] |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 30. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவ/ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை வழங்கல். | .. | .. |
| 31. இந்திய தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு ஆதி/பழங்குடியினருக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல். | 20** | .. |
| 32. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகள்/மாணவர் இல்லங்கள் முதலியன கட்டுதல். | 2,800(மூ) | .. |
| 33. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்மாணவர் இல்லங்களும் பழங்குடியினர் தங்கிப் படிக்கும் பள்ளிகளும் கட்டுதல். | .. | 3,150 (மூ) |
| 34. ஆதிதிராவிடர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல். | 427 | .. |
| 35. பழங்குடியினர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல். | .. | 12 |
| 36. ஆதிதிராவிடர் நல விடுதிகளில் உணவுச் செலவுகள் வீதம் அதிகரித்ததால் கூடுதல் செலவு. | .. | .. |
| 37. அரசு பழங்குடியினர் குடியிருப்புப் பள்ளிகளில் உணவுச் செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவு. | .. | .. |
| 38. பழங்குடியினர் மாணவர் இல்லங்களின் உணவுச் செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவு. | .. | .. |
| 39. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் புதிதாகச் சிறப்புப் பயிற்சி அளித்தல். | .. | .. |
| மொத்தம்—கல்வி .. .. | 1,19,552 | 3,394 |
| 2. பொருளாதார மேம்பாடு : | | |
| 40. வேளாண்மை .. .. .. .. | .. | .. |
| 41. பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் .. | .. | .. |
| 42. குடிசைத் தொழில்கள் .. .. | .. | .. |
| 43. பயிற்சி, உற்பத்தி நிலையம் .. | .. | .. |
| 44. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித் தொகை. | | .. |



| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|---|
| | 112 | .. | .. | .. | 112 | .. | 112 |
| | .. | .. | .. | .. | 20 | .. | 20 |
| | .. | .. | .. | .. | 2,800 | .. | 2,800 |
| | .. | .. | .. | .. | .. | 3,150 | 3,150 |
| | .. | .. | .. | .. | 427 | .. | 427 |
| | .. | .. | .. | .. | .. | 12 | 12 |
| | 13,1233 | .. | .. | .. | 13,123 | .. | 1,3128 |
| | .. | 1,386 | .. | .. | .. | 1,386 | 13,86 |
| | .. | 195 | .. | .. | .. | 195 | 195 |
| | 80 | .. | .. | .. | 80 | .. | 80 |
| | 1,26,293 | 8,748 | 3,74,453 | 26,592 | 6,20,298 | 38,734 | 6,59,032 |
| | 1,300<br>98* | 138 | .. | .. | 1,398 | 138 | 1,536 |
| | 6,000<br>150* | .. | .. | .. | 5,150 | .. | 5,150 |
| | .. | .. | 491 | 15 | 491 | 15 | 506 |
| | .. | 70 | .. | .. | .. | 70 | 70 |
| | 337*<br>1,200 | 149 | .. | .. | 1,497 | 149 | 1,646 |

[1992 ஏப்ரல் 22

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 45. பயிற் (தொகுதி 4 பணித் தேர்வுகள்) | .. | .. |
| 46. சிறு வணிகம் .. .. .. .. | .. | .. |
| 47. துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறச் சிறப்பு பயிற்சி வகுப்புகள். | .. | .. |
| 48. தமிழ்நாடுஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு. | 25,000(மூ)** | .. |
| 49. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதி திராவிடர்களுக்கு நலம் பயக்கும் பணித் திட்டங்கள் (ஆதி திராவிடர்களுக்கான தனித் துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய மத்திய உதவி). | 1,80,000 | .. |
| 50. சட்டக் கல்வி பட்டதாரிகளுக்கு பயிற்சி | .. | .. |
| மொத்தம் பொருளாதார மேம்பாடு .. | 205,000 | .. |
| . வீட்டு வசதி ஏனைய திட்டங்கள் : | | |
| 51. ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடு கட்டும் திட்டம். | .. | .. |
| 52. வீட்டு வசதி .. .. .. .. | .. | .. |
| 53. வீட்டு மனைகள் .. .. .. | .. | .. |
| 54. நடைபாதைகள், சுடுகாடுகள் ஏற்படுத்திக் கொடுத்தல் (குடிநீர் சாலைப் பணிகளுக்கான ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கப்படும் தொகை உட்பட). | | |
| 55. குடிநீர்க் கிணறுகள் .. .. .. | .. | .. |
| 56. மருத்துவம் .. .. .. .. | .. | .. |
| 57. பிரச்சாரச் செலவுகள் .. .. | 309** | .. |
| 58. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள். | .. | |
| 59 சுத்தமாகப் பராமரிக்கபட்டு வரும் ஆதிதிராவிடர் காலனிகளுக்குப்பரிசுகள் | | |



[1992 ஏப்ரல் 22

| (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|
| 1<br>1* | .. | .. | .. | 2 | .. | 2 |
| 1,300<br>100* | 50 | .. | .. | 1,400 | 50 | 1,450 |
| 1<br>1* | .. | .. | .. | 2 | .. | 2 |
| .. | .. | .. | .. | 25,000 | .. | 25,000 |
| 1,80.000 | .. | .. | .. | 1,80,000 | .. | 1,80,000 |
| 153 | .. | .. | .. | 153 | .. | 152 |
| 9,602 | 407 | 491 | 15 | 2,15,093 | 422 | 2,15,515 |
| 1,15,000 | .. | .. | .. | 1,15,000 | .. | 1,15,000 |
| 1 | 850 | .. | .. | 1 | 850 | 851 |
| 2,400 | .. | .... | .. | .. | .. | : |
| 77 | .. | .. | .. | .. | .. | .. |
| 40,000 | .. | .. | * | * | * | .. |
| 5,000(கா) | .. | .. | .. | 47,477 | .. | 47,477 |
| 3,385 | .. | .. | * | 3,385 | .. | 3,385 |
| 2,153<br>232கா | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | 2,385<br>.. | ..<br>.. | 2,385<br>.. |
| .. | .. | 70 | 1,004 | 70 | 1,004 | 1,074 |
| .. | .. | .. | .. | 309 | .. | 309 |
| .. | .. | 60 | .. | 60 | .. | 60 |
| .. | .. | 125 | .. | 125 | .. | 125 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 60. சமுதாயக் கூடங்கள் .. .. | .. | .. |
| 61. சலவைத் துறைகள் கட்டுதல் .. .. | .. | .. |
| 62. சுகாதாரம் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல். | .. | .. |
| 63. ஆராய்ச்சி படிப்பு உதவித் தொகை வழங்குதல். | 5 | .. |
| 64. பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்துதல். | 1,359** | .. |
| 65. உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தில் அரும்பொருட்காட்சியகம் அமைத்தல். | 2,500** | .. |
| 66. ஈமச் சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல் | .. | .. |
| 67. ஆதிதிராவிடர், பழங்குடியினர், நலத் திட்டங்களை மதிப்பீடு செய்ய ஆராய்ச்சி பிரிவு. | 209** | .. |
| 68. 1955ம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர் அமைப்பு. | 382** | .. |
| 69. ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல். | 1** | .. |
| 70. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் வீடுகளைப் பழுது பார்த்தல், புதுப்பித்துக் கட்டுதல். | .. | .. |
| 71. பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா எடுக்க. | .. | .. |
| மொத்தம்—3. சுகாதாரம் வீட்டுவசதி ஏனைய திட்டங்கள். | 901 | 3864 |
| **4. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் :** | | |
| 72. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான துணைத் திட்டம் குறித்த ஒருங்கிணைந்த பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான வல்லுநர் குழு. | .. | .. |
| 73. பழங்குடியினர் மாணவரில்லம் இணைந்த பள்ளிகளைத் தொடங்கி பராமரித்தல். | .. | .. |
| 74. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல். | .. | .. |
| 75. பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள். | .. | .. |
| 76. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறுபாசனத் திட்டங்கள். | .. | .. |



| (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1,000 | .. | 1,000 |
| 1,050 | .. | .. | .. | | | |
| | | | | 30 | .. | 30 |
| 15 | .. | .. | .. | .. | .. | .. |
| 15(க) | .. | .. | .. | 1 | .. | 1 |
| 1 | .. | .. | .. | | | |
| .. | .. | .. | .. | .. | 5 | 5 |
| .. | .. | .. | .. | .. | 1,359 | 1,359 |
| .. | .. | .. | .. | .. | 2,500 | 2,500 |
| .. | .. | .. | 6,681 | .. | 6,681 | 6,681 |
| .. | .. | .. | .. | 209 | .. | 209 |
| .. | .. | .. | .. | 382 | .. | 382 |
| .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 5 | .. | .. | .. | 5 | .. | 5 |
| 1,69,285 | 850 | 255 | 7,685 | 1,70,441 | 12,399 | 1,82,840 |
| .. | 168 | .. | .. | .. | 168 | 168 |
| .. | 29,862 | .. | .. | .. | 29,862 | 29,862 |
| .. | 5,055 | .. | .. | .. | 5,055 | 5,055 |
| .. | 3,000 | .. | .. | .. | 3,000 | 3,000 |
| .. | 2,300 | .. | .. | .. | 2,300 | 2,300 |

| | [1992 ஏப்ரல் 22 | | 1992 ஏப்ரல் 22] | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 77. கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 672 | .. | .. | .. | 672 | 672 |
| 78. ஆதிவாசிகள் மேம்பாடு .. .. | .. | .. | .. | 3,364 | .. | .. | .. | 3,364 | 3,364 |
| 79. பழங்குடியினர் ஆராய்ச்சி மேம்பாடு .. | .. | .. | .. | 299 | .. | .. | .. | 299 | 299 |
| 80. சாலைகள் .. .. .. .. | .. | .. | .. | 450 | .. | .. | .. | 450 | 450 |
| 81. பரந்து வாழும் பழங்குடியினர் .. | .. | .. | .. | 4,200 | .. | .. | .. | 4,200 | 4,200 |
| 62. குடிநீர்க் கிணறுகள் .. .. .. | .. | .. | .. | 310 | .. | .. | .. | 310 | 310 |
| 83. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினருக்கான வீட்டு வசதி. | .. | .. | .. | 640 | .. | .. | .. | 640 | 640 |
| 84. தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாடு அதிகார மன்றம். | .. | .. | .. | 10 | .. | .. | .. | 10 | 10 |
| மொத்தம்—பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் | .. | .. | .. | 50,330 | .. | .. | .. | 50,330 | 50,330 |
| 5. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான மறு வாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 85. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல். | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 86. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் அளிப்பதற்கான நிதியுதவி. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 87. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு நிலக் குடியேற்றத் திட்டங்கள் செயல்படுத்துதல். | .. | .. | .. | .. | .. | 70 | .. | 70 | 70 |
| மொத்தம்—கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 72 | .. | 72 | 72 |
| 6. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் — | | | | | | | | | |
| 88. தலைமையிட மாவட்டப் பணியாளர்கள் | .. | .. | .. | .. | 3 (சா) 51,010 | .. | 51,013 | .. | 51,013 |
| மொத்தம்—நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் .. | .. | .. | .. | .. | 51,013 | .. | 51,013 | .. | 51,013 |

[1992 ஏப்ரல் 22

1992 ஏப்ரல் 22]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுருக்கம். | | | | | | | | | |
| 1. கல்வி .. .. .. .. .. | 1,19,552 | 3,394 | 1,26,293 | 8,748 | 3,74,453 | 26,592 | 6,20,298 | 38,734 | 6,59,032 |
| 2. பொருளாதார மேம்பாடு .. .. .. | 2,05,000 | .. | 9,601 | 497 | 491 | 15 | 2,15,093 | 422 | 2,15,515 |
| 3. வீட்டு வசதி ஏனைய திட்டங்கள் .. .. | 901 | 3,664 | 1,69,285 | 850 | 255 | 7,685 | 1,70,441 | 12,399 | 1,82,840 |
| 4. பழங்குடியினர் வாழும் பகுதிகள் துணைத் திட்டம். | .. | .. | .. | 59,330 | .. | .. | .. | 50,330 | 50,330 |
| 5. கொத்தடிமைத் தொழிலாளர் மறு வாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 72 | .. | 72 | 72 |
| 5. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் (தலைமையிட மாவட்டப் பணியாளர்கள்). | .. | .. | .. | .. | 51,013 | .. | 51,013 | .. | 51,013 |
| மொத்தம் .. .. .. | 3,25,453 | 7,258 | 3,05,180 | 60,335 | 4,26,212 | 34,364 | 10,56,845 | 1,01,957 | 11,58,802 |

* கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள்.

** மத்திய,மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.

சா.—சாட்டியது.

மூ.—மூலதனம்.

க.—கடன்களும் முன்பணங்களும்

*** கீழே உள்ள இனங்கள் நீங்கலாக.

| | |
|---|---|
| 1. ஊரக வீட்டு வசதித் திட்டம் சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) திட்டம் தொடர்புடையவை. | 17,209 |
| 2. அகவிலைப்படி வழங்குவதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் .. | 31,653 |
| 3. தனிச் சிறப்பு ஊதியக் கொடை வழங்குவதற்கான ஒரு மொத்த நிதிஒதுக்கம். .. | 10,238 |
| 4. சத்துணவு வழங்குதல் .. .. .. | 13,539 |
| மொத்தம் .. | 72,630 |

D
V211,31 N92
N92-25-2
163180

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.